22 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs
416.315.9397
www.mahendran.ca

Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca

நதி 22 | பாலம் 03 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 01, 2012

# கனேடியர்களின் ஓய்வூதியத்தில் மாற்றம் வருமா?

ஜனவரி 26, 2012 சுவிஸ்லாந்து நாட்டில் உள்ள டாவோஸ் (Davos) நகரில் நடைபெற்ற உலக பொருளாதாரம் சம்பந்தப்பட்ட மாநாட்டில் (World Economic Forum) கனேடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பர் அந்த மாநாட்டில் கலந்து கொண்ட உலக நாடுகளினது 2600 பிரதிநிதிகளிற்கு முன்னிலையில் உரையாற்றும்போது பின்வருமாறு கூறினார்.

உலகில் பணக்கார நாடுகளுக்கு செல்வம் எல்லாக்காலமும் தொடர்ந்து கிடைக்கும் என எந்த ஒரு உத்தரவாதமும் இல்லை. பணக்கார நாடுகளான எங்களுக்கு கிடைத்த செல்வத்தை நாங்கள் எமக்கு கிடைத்த கொடையாக எண்ணி திருப்தியடைந்து




(Complacent) கொண்டிருக்கின்றோம். எமது செலவுகளை இப்போது நாம் கட்டுப்படுத்தாவிட்டால் எமது தேவைகளுக்கு செலவழிக்க நாங்கள் பின்னர் கஷ்டப்பட வேண்டிவரும்.

கனடா தனது பொருளாதார வளர்ச்சியை சுதந்திர வர்த்தகம் (Free Trade) மூலமும் சில சட்ட மூலங்களை தளர்த்தியதன் மூலமும் வளரவிட்டது. கனாடாவில் பொருளாதாரம் மிகவும் உறுதியாகவும் நன்றாகவும் இருக்கின்றது. ஆனால் நாங்களும் எல்லாம் நன்றாக நடக்கிறது என்ற மாயையில் (Illusion) இருக்கமாட்டோம். எமது ஓய்வூதியக்கொடுப்பனவு முறையில் மிகவும் பெரிய மாற்றம் கொண்டுவர உள்ளோம் என்றார்.

கனேடிய அரசு வயது முதிந்தவர்களுக்கு ஓய்வூதியப்பணம் வழங்கிவருவது பலரும் அறிந்ததே. இவ் ஓய்வூதியப்பணம் பெரும்பாலும் இரண்டு முக்கிய திட்டங்களால் செயற்படுத்தப்படுகின்றன. ஒன்று CPP (Canada Pension Plan) எனப்படும் கனேடிய ஓய்வூதியத்திட்டத்தால் நடத்தப்படுவது. இது குவிபெக் மாகாணத்தில் QPP என அழைக்கப்படுகின்றது. இதில் அரசாங்கம் தலையிடாது. ஏனெனில் இது உழைப்பவர்களால் உழைக்கும்போது அவர்களது சம்பளத்தில் இருந்து கழித்து அவர்களது வேலை செய்யும் நிறுவனம் செலுத்தும் ஒரு தொகையுடன் சேர்த்து முதலிடப்படும் பணம் பின்னர் ஓய்வுகாலத்தில் அதில் இருந்து எடுத்து கொடுக்கப்படுகின்றது.

ஆனால் ஓய்வூதியத்திட்டத்தில் இரண்டாவது பகுதி OAS (Old Age Security) எனப்படும் வயது முதிர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் பணமாகும். இது வயதுமுதிந்தவர்கள் வேலை செய்து CPP கட்டியிருந்தாலோ அல்லது வேலை செய்யாவிட்டாலோ கிடைக்கும் பணம். வேலையில் இருந்து இளைப்பாறியோருக்கோ அல்லது வேலை செய்யாத வயது முதிர்ந்தவருக்கோ தற்போது வேலை செய்பவர்கள் கட்டும் வரிப்பணத்தில் இருந்து அரசால் எடுத்துக் கொடுக்கப்படுவது. இப்பணத்தில் தான் அரசாங்கம் மாற்றம் கொண்டுவர யோசித்துள்ளது. தற்போது இது 65 வயதிற்கு மேற்பட்டோருக்கு வழங்கப்படுகின்றது.

உலக பொருளாதாரம் சம்பந்தப்பட்ட மாநாட்டில் கனேடிய பிரதமர் தெரிவிக்கையில் கனடாவில் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொகை 2010இல் 4.7 மில்லியன். இவர்கள் தொகை 2030 இல் 9.3 மில்லியனாக அதிகரிக்க உள்ளது. கனடாவில் 65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கும் ஓய்வூதியப்பணம் (OAS) 2010 இல் $36 பில்லியனாக இருந்தது. இது 2030 இல் $108 பில்லியனாக அதிகரிக்க உள்ளது என்றார்.

கனடாவில் 2010 இல் 65 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் OAS பணம் வழங்க 4 பேர் வேலை செய்து வரி கட்டிகொண்டு இருந்தனர். ஆனால் தற்போது வயது வந்தவர்கள் முன்னர் இருந்ததை விட தேக ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாகவும் இருக்கிறனர். இதனால் 2030 இல் 65 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் OAS பணம் வழங்க 2 பேர் மட்டுமே வேலை செய்து வரி கட்டப்போகிறனர். இதனால் கனடாவில் இந்த OAS ஓய்வூதியப்பணம் வழங்கும் முறையில் பெரிய மாற்றம் ஒன்று செய்யவேண்டியது தவிர்க்கமுடியாதது.

கனேடிய பிரதமரின் இந்த அறிவிப்பை தொடர்ந்து கருத்து

தொடர்ச்சி 02ஆம் பக்கம்


Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.

சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paski.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker


Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA


KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
9 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE

DR. Iru VIJAYANATHAN, BDS, FAGD
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# கனேடியர்களின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தெரிவித்த புதிய ஜனநாயக கட்சியை சேர்ந்த Peter Julian கனேடிய அரசு தற்போது தவறான இடங்களில் (சிறைச்சாலைகள் கட்டுவது, போர் விமானங்கள் வாங்குவது) பணத்தை முதலிடுகின்றது. OAS முறையில் மாற்றம் கொண்டுவர வேண்டியது தவிர்க்க முடியாதது. ஆனால் அதற்காக OAS ஓய்வூதியம் பெறும் வயதை 65இல் இருந்து 67 ஆக உயர்த்துவது எதிர்க்கப்பட வேண்டியது என்றார்.

இந்த உலக பொருளாதாரம் சம்பந்தமான மாநாட்டில் உரையாற்றிய ஜேர்மன் அதிபர் Angela Merkel ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையே ஒரு சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்று செய்யப்படவேண்டும் என்றார்.

இங்கிலாந்தின் பிரதமர் David Cameron உம் இந்த மாநாட்டில் உரையாற்றும் போது ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான ஒரு சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இவ்வருட இறுதிக்குள் ஐரோப்பிய ஒன்றியம், கனடா, இந்தியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கு இடையே சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் உருவாக்கி விடும் என நம்பிக்கை தெரிவித்தார்.




இம்மாநாட்டில் உரையாற்றிய Microsoft அதிபர் Bill Gates அவர்கள் உலகில் AIDS நோய் தடுப்புமுயற்சிகளுக்காக தனது சொந்தப்பணத்தில் $750 மில்லியனை கொடுத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் உலக நாடுகள் பொருளாதார நெருக்கடியில் இருந்தாலும் உலகில் உள்ள வறிய நாடுகளுக்கு வழங்கிவரும் உதவிகளை குறைத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

# அறிவுப்புரட்சியே சமுதாய மாற்றத்திற்கு சிறந்த வழி: அப்துல் கலாம்

அறிவுப்புரட்சி ஒன்றே சமுதாய மாற்றத்துக்கான ஒரே வழி என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தெரிவித்தார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கும், இந்துக் கல்லூரிக்கும் அப்துல் கலாம் சென்று மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

முதலில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு சென்று மாணவர்களிடையே உரையாற்றிய கலாம், இளைஞர்களுக்கு கனவு என்பது மிக முக்கியமான கடமையாகும். அந்தக்கனவு தூக்கத்தில் வருவதல்ல உங்களை தூங்க விடாது செய்வதே கனவு. கனவு காணுங்கள், அந்த கனவுகளை நனவாக்குவதற்கு உச்சக்கட்ட முயற்சியும் செய்யுங்கள். அதன் மூலம் உங்கள் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும், பொறுப்புள்ள மனிதர்களாக மாறுங்கள். திருக்குறள் எனது வாழ்வின் மதிப்புமிக்க வாழ்க்கைச் சித்தாந்தமாகிப் போனது. அதுவே எனது வாழ்வின் ஏற்றத்திற்கு உரமாக இருந்தது என்று கூறினார். மேலும் அறிவுப்புரட்சி ஒன்றே சமுதாய மாற்றத்திற்கு சிறந்த வழியாகும். அதுவே சமத்துவத்தையும் சமாதானத்தையும் கொண்ட சமூகத்தை உருவாக்கும் என்று மேலும் கூறினார்.

இந்நிகழ்ச்சிக்கு பின்னர் யாழ். இந்துக் கல்லூரிக்கு சென்று அங்கும் மாணவர்களிடையே உரையாற்றினார்.

## மிகத்திறமையான கல்லூரி மாணவியை நான் யாழ்ப்பாணத்தில் சந்தித்தேன்!

யாழ். இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்த அப்துல் கலாமிடம் ஆறு மாணவ மாணவிகள் கேள்விகளை எழுப்பினர். அதில் மாணவன் ஒருவன் ஐயா! நீங்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ததையிட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன். உங்களைப் போன்று நானும் வரவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என வினவினான்.

அந்த மாணவனது இந்தத் திடீர் வினா சபையோர் அனைவரையும் கவர்ந்ததுடன் பலரது கரகோசத்தையும் பெற்றது. அதற்கு பதிலளித்த அப்துல் கலாம் நீ கடின உழைப்பாளியாகவும் இலட்சிய தாகமுடையவனாகவும் நேர்மையாளனாகவும் விடாமுயற்சி உடையவனாகவும் இருந்தால் உனது வெற்றியை யாராலும் தடுக்க முடியாது என்றார்.

கொண்டார்.

இதையடுத்து அந்த மாணவி Where there is righteousness in the heart there is beauty in the character. When there is beauty in the character there is harmony in the home. When there is harmony in the home there is an order in the nation. When there is an order in the nation there is peace in the world என்று பளிச்சென தெரிவித்தார்.

இதையடுத்து நேற்று கொழும்பில் செய்தியா-



இதேவேளை மாணவி ஒருவர் பொறுப்புள்ள பிரஜையாக திகழ நான் என்ன செய்ய வேண்டும் என எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த கலாம், உனது இதயத்தில் நேர்மை இருந்தால் உனது செயலில் அழகு இருக்கும். செயலில் அழகு இருந்தால் வீட்டில் அமைதி இருக்கும். வீட்டில் அமைதி இருந்தால் நாட்டில் அமைதி இருக்கும். நாட்டில் அமைதியிருந்தால் உலகில் சமாதானம் இருக்கும் என்று கூறினார். பின்னர் தனது பதிலை அனைவருக்கும் கேட்கும் வகையில் நீயே கூறு என்று கேட்டுக்

ளர்களைச் சந்தித்த கலாம் இந்த மாணவி குறித்து குறிப்பிட்டுக் கூறி பாராட்டினார். அவர் கூறுகையில், இப்படி ஒரு திறமை-வாய்ந்த மாணவியை நான் முன்னர் ஒருபோதும் சந்தித்தது கிடையாது. அந்த மாணவி கேட்ட கேள்விக்கு பதிலளித்த நான் அந்த பதிலைத் திருப்பிக் கூறுமாறு தெரிவித்தேன். உடனடியாக அவர் அதனை திருப்பிக் கூறினார். அவ்வாறு மிகத் திறமையான மாணவியை நான் சந்தித்தது யாழ்ப்பாணத்தில் தான் என்றார் நெகிழ்ச்சியுடன்.

## வாசகர்கள் எண்ணங்கள்

மேன்மை மிகுந்த 'விளம்பரம்' பத்திரிகையின் எடிட்டர் அவர்களுக்கு அன்புடன் JNS.செல்வன் எழுதுவது.

தங்கள் பத்திரிகையை இணைய தளம் மூலம் பார்த்தேன். உள்நாட்டு பிரபலங்களின் பேட்டி, ஓ கனடா என்ற பகுதி, நியூஜிலாந்து ஜார்ஜ் தம்பதியினரை மனமார பாராட்டியது, தங்கள் பத்திரிகையின் 22வது ஆண்டு விழா செய்திகள், தொலைநோக்கு என்ற கட்டுரை மேலும் பல செய்திகள், வடிவமைப்பு, வண்ணம், தங்களின் மேன்மையான எண்ணம் அனைத்தையும் ஒன்றுவிடாமல் 40 பக்கங்களையும் பார்த்து மகிழ்ந்த பின்பே இம்மடலை தங்களுக்கு எழுதுகிறேன்.

22 ஆண்டுகள் பூர்த்தி செய்த தங்கள் நிறுவனத்திற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,
JNS.Chelvan

விளம்பரம் ஆசிரியர் அவர்கட்கு,

வெகுளாமை - 06

கோபத்தை தணித்து கொள்வதற்கு இரு முறைகளைப் பற்றிக் கடந்த 15.01.2012 இல் வெளிவந்த கட்டுரையில் அகணி அவர்கள் குறிப்பிட்டிருந்தார். ஒன்று தற்காலிக முறை, மற்றது நிரந்தர முறை பற்றியது. நிரந்தர முறைக்கு வரும் கோபத்தை முக்கோண கூர்நுனிக் கோபுர படமாக கோபத்தைக் கற்பனை செய்து பார்க்கும் பொழுது கோபம் என்பது 10 வீதமாகவும் மிகுதி பின் புலத்தில் வலி, பயம், சுய பெறுமதியின்மை போன்ற மூன்றையும் நீக்கிப் பார்த்தால் கோபத்தின் ஆதிக்கம் குறைவாகவே படும். இதையும் ஆன்மீகப் பயிற்சியில் ஈடுபாடு கொண்டு நிரந்திரமாக இல்லாது செய்துவிடலாம் என்று அகணி அவர்கள் குறிப்பிட்டுள்ளது மிகவும் பயன் அளிக்கின்றது.

அகணி அவர்களுக்கும் விளம்பரத்திற்கும் நன்றி.

பத்மநாதன் தம்பையா.

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பிளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

| | |
|---|---|
| **பதிப்பாளர்:** | ராஜா மகேந்திரன் |
| **பத்திரிகை ஆசிரியர்:** | சத்தியா மகேந்திரன் |
| **ஊடகப்பொறுப்பாளர்:** | விஜே பாலன் |
| **தட்டச்சு:** | கலா |
| **அலுவலக முகாமையாளர்:** | நிலானி |
| **பதிப்பு:** | *Can Media Publishing Inc.* |

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# 30% வீதம் மீள வழங்கும் பல்கலைக்கழகங்கள் கல்லூரிகளுக்கு செலுத்திய கல்விக் கட்டணங்கள்!

## NEW 30% OFF ONTARIO POSTSECONDARY TUTION FEES

பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் கல்வி பயில்வதற்காக கட்டணம் செலுத்த வேண்டும். ஒன்ராறியோ மாகாணத்தின் மாணவர்களுக்கு இவ்வருடம் மாகாண அரசு அறிவித்த அந்த சிறு நற்செய்தி பற்றி கல்வி பயிலும் நம் தமிழ் மாணவர்கள் நிச்சயம் அறிந்திருக்காமல் இருந்திருக்க மாட்டார்கள்.

அது வேறு ஒன்றுமல்ல!

செலுத்திய பணத்தில் 30% வீத கட்டணத்தினை அதற்குரிய விண்ணப்பப் படிவத்தினை எடுத்து கேட்கப்பட்ட தகவல்களுடன் நிரப்பி வழங்கி மீள பெறுதலாகும்.

ஒன்ராறியோ மாகாணத்தில் 3,10,000 பேர் இக்கட்டணங்களில் ஒரு பகுதியினை மீள பெற தகுதியுடையவர்கள் என இத்துறைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் (Minister of Training, Colleges & Universities Hon. Glen Murray) அறிவித்துள்ளார்.

பின்வரும் நிலையில் உள்ளோர் இக்கட்டணத்தினை மீளப்பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

- பல்கலைக்கழகத்தில் அல்லது கல்லூரியில் முழு நேர மாணவனாக (Full Time Student) பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

- உயர் கல்வி பாடசாலையிலிருந்து (High School) விலகி நான்கு வருடத்திற்குள் இருத்தல் வேண்டும். அத்துடன் நேரடியாக அங்கிருந்து பல்கலைகழகத்திற்கு அல்லது கல்லூரிக்குள் சேர்ந்திருக்க வேண்டும். முதுமாணி பட்டப்படிப்பிற்கு (Masters Degree) பணம் செலுத்தியவர்கள் இந்த நான்கு வருடத்தினை கடந்திருப்பார்கள் என்பதால் அவர்கள் இங்கு பணம் பெறமுடியாது.

- மாணவனின் பெற்றோரின் வருட மொத்த கூட்டு வருமானம் $1,60,000 அல்லது அதற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.

- கல்வி கற்கும் மாணவன் கனடாவின் பிரஜா உரிமை, அல்லது நிரந்தர வதியுரிமை பெற்று ஒன்ராறியோ மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

உயர்கல்வி பாடசாலை சான்றிதழை (High School Diploma) பல வருடங்களுக்கு முன்பு பெற்றவர்கள், தொடர்ந்து காலம் கடந்து கல்லூரி, பல்கலைகழகத்தில் பயில்வதற்காக கட்டணத்தினை செலுத்தியிருந்தால் அல்லது பகுதிநேரமாக படிப்பதற்கு என செலுத்தியிருந்தாலும் எந்த கட்டத்திலும் இங்கு இத்தகைய நிலையில் உள்ளவர்கள் கட்டணத்தினை திரும்ப பெறமுடியாது.

### இக்கட்டணத்தினை ஒரு பகுதியினை மீள்பெற விண்ணப்பிப்பது எப்படி?

www.ontario.ca/30%off என்னும் ஒன்ராறியோ மாகாண அரசின் பயிற்சி நெறிகள், கல்லூரிகள், பல்கலைக்கழக அமைச்சின் (Ontario Ministry of Training, Colleges, Universities) இணைய தளத்தினுள் செல்லும் போது இதற்குரிய தகவல்களும் வழிகாட்டல்களும் உள்ளன.

1.888.449.4478 என்னும் தொலைபேசிக்கு அழைத்தும் தகவல்கள் பெறலாம்.

- ஒன்ராறியோ மாணவர் உதவித் திட்டத்தின் (OSAP Program) கீழ் கடன் பெற்று பல்கலைக்கழகத்திற்கோ அல்லது கல்லூரி கற்கை நெறிகளுக்கோ பணம் செலுத்தியவர்கள் இங்கு மீள் பணம் பெற விண்ணப்பிக்க தேவையில்லை. தாமாக கருத்தில் கொள்ளப்பட்டு பகுதி மீள் பணம் வந்து வழங்கப்பட்ட கடன் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்படும். இவ்வாறு ஒன்ராறியோ மாணவன் உதவித்திட்டத்தில் OSAP Program கடன் பெறாதவர்கள் மட்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்ப படிவங்களில் வழங்க வேண்டிய தகவல்களை வழங்கி, மாணவரும், பெற்றோரும் கூட்டாக கைச்சாத்திட்டு




## கனடிய தகவல் தொடர் 165

பின்வரும் விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது தொலைநகல் மூலமோ அனுப்பி வைக்க வேண்டும்.


அதன் விபரங்கள் பின்வருமாறு

*Student Financial Assistance Branch*
*Ministry of Training, Colleges & Universities*
*P.B. Box 4500*
*189, Red River Road, 4th Floor*
*Thunder Bay , ON P7B 6G9*
தொலைநகல்: 807.343.7278

- ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவனும் வருடம் ஒன்றுக்கு $1600 டொலர் வரை மீள் பெறலாம்.

- கல்லூரிகளில் படிப்பதற்காக கட்டணம் செலுத்திய மாணவர்கள் வருடம் ஒன்றுக்கு $730 டொலர் வரை மீள்பெறலாம்.

தமிழ் மாணவர்களுக்கு இவ் மீள்பணம் பெற்றுக்கொள்வது எப்படி? என கற்று கொடுக்க வேண்டிய அவசியமிருக்க மாட்டாது. கல்வி பயிலும் பல்கலைக்கழக, கல்லூரி அலுவலகங்களில் இதற்குரிய வழிகாட்டல்களை வழங்கியிருப்பர். இருந்த போதும் விண்ணப்பங்களை முன் நகர்த்த வேண்டிய நடவடிக்கைகளை சரியான முறையில் செய்தார்களா? என்பதனை கண்காணிக்க வேண்டிய கட்டாயம் சில இடங்களில் பெற்றோருக்கு இருக்கலாம் என்பதால் இதனை இத்தகவல் தொடரில் இம்முறை வெளியிடுகிறோம்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# ப்ராணிக் ஹீலிங் (Pranic Healing)

ரேக்கி, ப்ராணிக் ஹீலிங் போன்றவை மூலம் மற்றவர்களுக்கு சிகிச்சை செய்வது பற்றி சத்குருவின் கருத்தைக் கேட்ட போது ஞஞ்ஞ்.

நம் உடல்நலம் எப்போதும் காரணம் மற்றும் விளைவைப் பொறுத்தே இருக்கிறது. இப்போது உங்களுக்கு தொற்று நோய் வந்தது என வைத்துக் கொள்ளுங்கள். தொற்று நோய்க்கான காரணம் கிருமி. இது வெளிப்புறக் காரணம். இப்போது நீங்கள் கிருமிநாசினி மருந்தை உட்கொண்டு கிருமியை அதாவது அந்த வெளிப்புறக் காரணத்தை அழிக்கிறீர்கள்.

ஆனால் மற்ற நோய்கள் வெளிக் காரணங்களால் ஏற்படுவதில்லை. அந்த நோய்களுக்கான காரணங்கள் மிகவும் ஆழமானவை, சக்தி நிலை தொடர்பானவை. நீங்களே உண்டாக்கிய கர்மவினை சக்திநிலையில் பாதிப்பு உண்டாக்கும் போது சக்திநிலையின் சமநிலை மாறுகிறது அல்லது தவறாக இயங்குகிறது. அப்போது அது உடல் அல்லது மனத்தில் நோயாக வெளிப்படுகிறது.

ரேக்கி மற்றும் பிராணிக் ஹீலிங் போன்ற சக்திநிலையிலான சிகிச்சை முறைகளில் நீங்கள் விளைவை மட்டும் சரிசெய்கிறீர்கள். ஆனால் காரணம் அப்படியே இருக்கிறது. உங்கள் சக்திநிலை மேல் உங்களுக்குள்ள சிறிய கட்டுப்பாட்டால் காரணத்திற்கும் விளைவிற்கும் இடையில் ஒரு திரை போட்டு விடுகிறீர்கள். எனவே விளைவு போய் விடுகிறது. ஆனால் நோய்க்கான காரணம் போகவில்லை.


இப்போது உங்களுக்கு ஆஸ்த்மா இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் சக்திநிலை மிகவும் பாதிப்பில் இருக்கிறது என்பதைக் குறிக்கவே உங்களுக்கு இந்த ஆஸ்த்மா வந்தது. ப்ராணிக் ஹீலிங் மூலம் இப்போது ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுகிறோம். இப்போது விளைவு போய் விட்டது, ஆனால் காரணம் அப்படியே இருக்கிறது. எனவே விளைவு இப்போது இன்னும் ஆழமாக வேறொரு வடிவம் எடுத்து உங்கள் நிலையை உங்களுக்குத் தெரிவிக்கும். எனவே இப்போது அடுத்த வினாடி உங்களுக்கு வேறு ஏது வேண்டுமானாலும் நேரலாம். வேறு நோய்தான் வர வேண்டும் என்பதில்லை. நீங்கள் விபத்தில் கூட சிக்க நேரிடலாம்.

சக்திநிலையில் ஒருவரைக் குணப்படுத்துவது என்பது ஒரு நிலையில் கடவுளுடன் விளையாட முயற்சிப்பதாகும். தவறான வழியில் சக்திநிலையைக் கையாள்வதாகும். இந்த சிகிச்சை முறையில் சிகிச்சை கொடுப்பவர் மற்றும் சிகிச்சை பெறுபவர் இருவருமே பாதிக்கப்படுகின்றனர்.

நோயின் மூலத்தையே, முழுக் காரணத்தையே அடுத்தவரிடமிருந்து உங்களுக்குள் வாங்கிக் கொள்ள முடியாவிட்டால், சிகிச்சை பெறுபவர்க்கு உண்மையான குணம் என்பது நடக்காது. அப்படி நோயின் காரணத்தையே அடுத்தவரிடமிருந்து உங்களால் பெற முடிந்தாலும் அது உங்கள் சக்திநிலையில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். சக்திநிலை கையாள்வதில் நிபுணத்துவம் இல்லாமல் இது போன்ற சிகிச்சையில் இறங்கக்கூடாது.

தியானலிங்கம் பிரதிட்சைக்காக நான் சிலமுறை நோய்க்கான காரணங்களையே அடுத்தவர்களிடமிருந்து பெற்றிருக்கிறேன். அப்படி நான் வாங்கிய போது அவர்களிடமிருந்த நோய் போய்விட்டது. காரணம் மற்றும் விளைவு என்ற இரு வகையிலும் அவர்களுக்கு நோய் நீங்கிவிட்டது. அவர்கள் தங்கள் உடலை உபயோகித்து அந்த நோயை ஓரளவு விரட்ட 10 வருடம் எடுத்திருக்கலாம். ஆனால் நான் 10 நாட்களிலேயே அதை முழுவதும் நீக்க முடிந்தது. ஆனால் குறிப்பிட்ட நோக்கத்திற்காக மட்டும்தான் நாம் இப்படிச் செய்கிறோம். தொழில் ரீதியாக செய்வது என்ற கேள்விக்கே இடமில்லை.

உங்கள் நோயின் மீது நீங்கள் ஒரு விழிப்புணர்வைக் கொண்டு வந்தாலே நீங்கள் நோயின் காரணத்துடன் தொடர்பு கொள்கிறீர்கள். உடலின் ஒரு பாகத்தின் மீது நீங்கள் விழிப்புணர்வைக் கொண்டு வரும் விநாடியிலேயே உங்கள் சக்திநிலை தீவிரமாகி பல விடயங்கள் நடக்கத் தொடங்குகின்றன. இப்படி சக்திநிலை மூலம் ஓரளவு சரி செய்தாலும் காரணமான கர்மவினை முற்றிலும் அகலுவதில்லை.



சத்குரு வாசுதேவ்

எல்லாவித சிகிச்சையாளர்களும் இப்போது உலகில் பெருகி வருகின்றனர். தமிழ்நாட்டிலும் கூட பல இடங்களில் சக்தி நிலையிலான சிகிச்சை மேளாக்கள் நடைபெறுகின்றன. உண்மையிலேயே மக்களை குணப்படுத்தும் ஆர்வம் சிகிச்சையாளர்க்கு இருந்தால், பிரபஞ்சத்தின் சக்தி அவர் கைகளில் இருந்தால், அவர் ஏன் மருத்துவமனைக்கே சென்று அங்குள்ள நோயாளிகளைக் குணப்படுத்தக் கூடாது?

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

எனவே மிகவும் சரியான வழி யோகக் கிரியைகளைச் செய்வதே. இப்படிச் செய்யும் போது இயற்கையாகவே முழுமையாகக் குணம் அடைகிறீர்கள். யோகக் கிரியைகள் கர்மாவையே கரைத்துவிடுகின்றன. எனவே காரணம் போய்விடுகிறது. காரணமே காணாமல் போகும்போது விளைவும் அதாவது நோயும் காணாமல் போகிறது. உண்மையில் எளிய சில யோகக் கிரியை களை 3 அல்லது 4 வாரங்கள் செய்து வந்தோலே ஆயுளுக்கும் இருக்கும் என்று நீங்கள் கருதியிருந்த நோய்கள் கூட அகன்று விடுகின்றன. இது ஏதோ அதிசயம் என்பதல்ல. அறிவைப் பயன்படுத்துவது. அவ்வளவுதான்.




# இலங்கை வெளிவிவகார அமைச்சரை அமெரிக்கா வருமாறு ஹிலாரி கிளின்ரன் அழைப்பு!



இலங்கை தொடர்பான விளக்கத்தினை பெற்றுக்கொள்ள அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை தமது நாட்டுக்கு வருமாறு அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் அழைப்பு விடுத்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான இலங்கையின் நிலைமைகள் மற்றும் நல்லிணக்கப்பணிகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதமளவில் இந்த பயணம் இடம்பெறும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

வட மாகாணசபைத் தேர்தல்கள், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், மனித உரிமை நிலைமைகள் குறித்தும் இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட உள்ளது. ஹிலாரி கிளின்ரனின் அழைப்பு தொடர்பான கடிதம், ஏற்கெனவே அமைச்சர் பீரிஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தி நல்லிணக்க நடவடிக்கைகளை ஏற்படுத்துவதில் அமெரிக்கா ஆர்வம் காட்டி வருவதாக ஹிலாரியின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாங்க மோட்கேஜ் பற்றி பேசலாம் ! !

# மோட்கேஜ் கிளினிக்

**சனிக்கிழமை வோக் - இன் 9.00 am - 5.00 pm வரை**

## 2 Yr Fixed Rate - 2.59%

( OAC )

தற்பொழுது நீங்கள் வைத்திருக்கும் மோட்கேஜ்
செக்கன்ட் மோட்கேஜ் , லைன் ஒவ் கிரடிட்
எல்லாத்தையும் ஒரு பேமன்ராக மாத்தலாமா ? ?

கொன்சுயுமார் புரபோசலுக்கு கட்ட வேண்டிய காசை
வீட்டுக்குளிருந்து எடுத்து கட்டலாமா ?

நல்ல றேட்டில மோட்கேஜ் இருக்கு ஆனால் பிரேக்
பண்ணாமல் கொஞ்ச காசு எடுக்கலாமா ?

வேற என்னென்ன கடனை ஒரே பேமன்ராக மோட்கேஜுடன் சேர்க்கலாம் ?

சாமத்திய வீட்டுகடன் சீதனகாசுக்கடன்

மகளின்ர அரங்கேற்ற கடனை மறந்திட்டேனா ? ?

வந்துபேசிப்பாருங்கோ!! பிடிச்சிருந்தா ........... மேல பேசுவம்

அழையுங்கள்



## 416-644-3555

22 ⇐ Ext ⇒ 28



**CENTUM Rapid Mortgages Inc.**

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

தயா PK கந்தையா BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

ஜெ. இராசதுரை (Jey) MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

Home Trust | Equitable Trust | FirstLine | TD | Scotiabank | CIBC

# விளையாட்டுத் தகவல்கள் 322

ஆஸ்திரேலிய அணி சிந்தாமல் சிதறாமல் 4-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றியது.

பார்டர் கவாஸ்கர் கிரிக்கெட் டெஸ்ட் தொடரை 4-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றியுள்ளது ஆஸ்திரேலிய அணி. ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வந்த 4வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் 5ம் நாள் ஆட்டமான, இஷாந்த் சர்மாவும், சாஹாவும் விளையாடத் துவங்கினர். இஷாந்த் 2 ரன்களில் ஆட்டமிழந்து வெளியேறிய சிறிது நேரத்தில் சாஹாவும், ஜாகிர் கானும் ஆட்டமிழந்தனர். இந்திய அணி 46 ஓவர்களில் வெறும் 201 ரன்கள் எடுத்திருந்த நிலையில் யாதவ் ஆட்டமிழந்து ஆஸ்திரேலிய அணியின் வெற்றியை பறைசாற்றினார். 4 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரை ஆஸ்திரேலிய அணி சிந்தாமல் சிதறாமல் 4-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றியது. இந்த டெஸ்ட் போட்டியின் ஆட்ட நாயகனாக சிட்டில் தேர்வு செய்யப்பட்டார். கிரிக்கெட் டெஸ்ட் தொடரின் நாயகனாக கிளார்க் தேர்வு செய்யப்பட்டார். கோப்பையை ஆஸ்திரேலிய அணி பெற்றுக் கொண்டது.

## "ஒயிட் வாஷ்!!! இந்தியா

இதனால் இந்த டெஸ்ட் தொடரில் இந்தியா 0-4 என்ற கணக்கில் "ஒயிட் வாஷ்" ஆகிறது. இந்த ஆண்டில் மட்டும் டெஸ்ட் தொடரில் இரண்டாவது முறையாக "ஒயிட் வாஷ்" ஆகிறது இந்தியா. கடந்த ஆகஸ்டில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்தியா 0-4 என்ற கணக்கில் படுதோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது. தொடர்ச்சியாக 8-வது டெஸ்ட் போட்டியில் தோல்வியடைகிறது இந்தியா. இந்த கிரிக்கெட் டெஸ்ட் போட்டியோடு இந்திய கிரிக்கெட் வீரர் ராகுல் திராவிட் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதால் அவருடைய கடைசி டெஸ்ட் போட்டியாக இது அமைந்திருந்தது. ஆனால், இதில் அவர் சரியாக விளையாடவில்லை என்பது ரசிகர் களுக்கு மிகவும் ஏமாற்றத்தை அளித்தது.

## 4வது டெஸ்ட் போட்டி:

ஆஸ்திரேலியா - 604/7 டிக்ளேர், இரண்டாவது இன்னிங்ஸ் 167/5 டிக்ளேர்
இந்தியா - 272 இரண்டாவது இன்னிங்ஸ் - 201 (69.4)

சங்ககார சதம் – இலங்கை திரிலர் வெற்றி: தொடரை கைப்பற்றியது தென்னாபிரிக்கா. தென்னாபிரிக்க அணியுடனான 5 ஆவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 2 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியுள்ளது.
தென்னாபிரிக்காவின் ஜொஹான்னர்ஸ் பர்க்கில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 312 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.5 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 314 ஓட்டங்களைப் பெற்றது. இத்தொடரின் 4 ஆவது போட்டியிலும் இலங்கை வெற்றியீட்டியிருந்தது. எனினும் முதல் போட்டிகளிலும் வென்ற தென்னாபிரிக்க அணி இத்தொடரின் வெற்றியை 3-2 விகிதத்தில் தனதாக்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது. 5 ஆவது போட்டியில் தென்னாபிரிக்க அணியின் சார்பில் அணித்தலைவர் ஏ.பி. வில்லியர்ஸ் 98 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 125 ஓட்டங்களைக் குவித்தார். முன்னாள் தலைவரான கிஹேம் ஸ்மித் 143 பந்துகளில் 125 ஓட்டங்களைக்குவித்தார்.

இலங்கை பந்துவீச்சாளர்களில் லஷித் மாலிங்க 79 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான உபுல் தரங்க 46 ஓட்டங்களையும் அணித்தலைவர் திலகரட்ன தில்ஷான் 41 ஓட்டங்களையும் பெற்றனர். குமார் சங்கக்கார சிறப்பாக துடுப்பெடுத்தாடி 97 பந்துகளில் 102 ஓட்டங்களைப் பெற்றார். லஹிரு திரிமான்ன 63 பந்துகளில் 69 ஓட்டங்களைப் பெற்றார். இப்போட்டியின் இறுதிக்கட்டம் மிக விறுவிறுப்பானதாக அமைந்தது. கடைசி 3 ஓவர்களில் இலங்கை அணி வெற்றி பெறுவதற்கு 17 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 5 விக்கெட்டுகள் கைவசமிருந்தன. இறுதி இரு ஓவர்களில் 9 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 49 ஆவது ஓவரில் இலங்கை அணி 3 ஓட்டங்களைப் பெற்றது. அந்த ஓவரின் கடைசி பந்தில் திசேர பெரேரா (2) ஆட்டமிழந்தார். கடைசி ஓவரில் 4 விக்கெட்டுகள் கைவசமிருந்த நிலையில் 6 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ரொபின் பீட்டர்சன் வீசிய அந்த ஓவரின் முதல் பந்தில் நுவன் குலசேகர ஓட்டமெதுவுமின்றி போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். 2 ஆவது பந்தில் ரங்கன ஹேரத் ஓர் ஓட்டம் பெற்றார். 3 ஆவது பந்தில் திரிமான்ன (63) மோர்கெல்லிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்ததாக லஷித் மாலிங்க துடுப்பெடுத்தாட வருவார் என எதிர்பார்க்கப் பட்ட நிலையில் சச்சித்ர சேனநாயக்கவை துடுப்பெடுத்தாட அனுப்பினார் தில்ஷான்.

சச்சித்திர தான் எதிர்கொண்ட முதல் பந்தில் ஓட்டமெதையும் பெறத் தவறினார். இதனால் கடைசி இரு பந்துகளில் இலங்கை 5 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. எனினும் 5 ஆவது பந்தில் சசித்திர அபாரமான சிக்ஸர் ஒன்றை அடித்து இலங்கையின் வெற்றியை உறுதிப்படுத்தினார் அவர். இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக குமார் சங்கக்காரவும் தொடரின் சிறப்பாட்டக்காரராக தென்னாபிரிக்க அணித் தலைவர் ஏ.பி. டி வில்லியர்ஸும் தெரிவாகினர். 2007 ஆம் ஆண்டின் பின்னர் சர்வதேச ஒருநாள் போட்டியொன்றில் ஓர் அணி தொடர்ச்சியாக இரு போட்டிகளில் 300 இற்குமேற்பட்ட ஓட்ட இலக்கை கடந்து வென்றமை இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்குமுன் நியூஸிலாந்து அணி இவ்வாறு தொடர்ச்சியாக இரு போட்டிகளில் 300 இற்குமேற்பட்ட ஓட்ட இலக்கை கடந்து வென்றிருந்தது.

## கிளார்க் - பொன்டிங்கின் புதிய சாதனை

அடிலெய்ட்டில் நடைபெறும் இந்திய அணியுடனான 4 ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய மைக்கல் கிளார்க், ரிக்கி பொன்டிங் ஜோடி 4 ஆவது விக்கெட்டுக்காக 386 ஓட்டங்களைக் குவித்தனர். இது இவ்விரு நாடுகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியொன்றில் எந்தவொரு விக்கெட்டுக்கு மான அதிகூடிய இணைப்பாட்ட சாதனையாகும். இதற்குமுன் 2001 ஆம் ஆண்டு கொல்கத்தா ஈடன் கார்டனில் நடந்த போட்டியில் ராகுல் திராவிட் - வி.வி.எஸ். லகஷ்மன் ஜோடி 376 ஓட்டங்களைப் பெற்றமையே இவ்விரு நாடுகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டிகளில் அதிகூடிய இணைப்பாட்ட ஓட்டங்களாக இருந்தன. அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளிலும் கிளார்க் - பொன்டிங் இணைப்பாட்டமே எந்தவொரு விக்கெட்டுக்கு மான மிகச் சிறந்த இணைப்பாட்டமுமாகும்.

இப்போட்டியில் கிளார்க், பொன்டிங் இருவரும் இரட்டைச் சதங்களை குவித்தமை குறிப்பிடத்தக்கது. பொன்டிங் 404 பந்துகளில் 21 பௌண்டரிகள் உட்பட 221 ஓட்டங்களைப் பெற்றார். மைக்கல் கிளார்க் 275 பந்துகளில் ஒரு சிக்ஸர், 26 பௌண்டரிகள் உட்பட 210 ஓட்டங்களைப் பெற்றார். மைக்கல் கிளார்க் இத்தொடரின் இரண்டாவது போட்டியில் 329 ஓட்டங்களைப் பெற்றார். இதன்மூலம் டொன் பிரட்மன், வெல்லி ஹம்மன்ட் ஆகியோருக்கு அடுத்ததாக ஒரே தொடரில் முச்சதத்தையும் இரட்டைச் சதத்தையும் பெற்ற மூன்றாவது வீரரானார் கிளார்க். இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட் இழப்பிற்கு 604 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் துடுப்பாட்டத்தை நிறுத்திக்கொண்டது. இந்திய பந்துவீச்சாளர்களில் அஸ்வின் 194 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் ஸஹீர் கான் 96 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

## ஹர்பஜன் சிங்கை விட மோசமாக விளையாடும் சேவாக்

வெளிநாட்டு மைதானங்களில் இந்திய அணி தொடர்ச்சியாக 7 டெஸ்ட் போட்டிகளில் தோல்வி அடைந்துள்ளது. சேவாக்-காம்பீர் ஜோடி தொடக்கத்திலேயே சொதப்புவதால் பின் வரிசை வீரர்கள் நெருக்கடிக்கு ஆளாகி, எளிதில் ஆட்டமிழந்து தொடர் தோல்வியை அணி சந்திப்பதாக கருத்து எழுந்துள்ளது. ஆனால் புள்ளி விவரங்களோ வெளிநாட்டு மைதானங்களில் சேவாக் கடந்த 4 ஆண்டுகளாகவே மோசமாகத்தான் ஆடிவருகிறார் என காட்டுகிறது. நியூசிலாந்து, தென் ஆப்ரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய தொடரில் (தற்போது), இவரது சராசரி ஒருமுறை கூட 30 ஓட்டங்களை தொடவில்லை. இத்தனைக்கும் இங்கிலாந்து மற்றும் தற்போதைய அவுஸ்திரேலிய தொடரை தவிர மற்ற மூன்று தொடர்களில் நல்ல பார்மில் தான் இருந்தார். எனினும் அவரால் ஓட்டங்கள் எடுக்க முடியவில்லை. கடைசியாக சேவாக் ஆடிய 21 இன்னிங்சில் 500 ஓட்டங்களை கூட எட்டவில்லை. 2 அரை சதம் மட்டும் அடித்துள்ளார். ஹர்பஜன் சிங் எடுத்த ஓட்டங்களை விட இது மிகவும் குறைவு. இதில் 16 முறை வேகப்பந்து வீச்சாளர்களிடம் ஒரே மாதிரியாக சேவாக் வீழ்ந்துள்ளார். சரியான அளவில் பந்தை லேசாக ஸ்விங் செய்து வீசினால் சேவாக்கை எளிதாக வீழ்த்தி விடலாம் என வேகப்பந்து வீச்சாளர்கள் சமீபகாலமாக நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

**எஸ். கணேஷ்**



MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC
mhc

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM /NECK PROBLEM • TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP • ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# நாமும் நமது இல்லமும்

**ராஜா மகேந்திரன்**

## தொடர் - 359

# 5 வருடம் = 2.99%

ஆதன வியாபாரம் சம்பந்தமாக, நிதி அமைச்சர் மீண்டும் எச்சரிக்கை விட்டுள்ளார். ஜனவரியின் இரண்டாவது வாரத்தில், கனடிய பெரிய வங்கிகளில் ஒன்றான மொன்றியல் வங்கி 5 வருடங்களிற்குரிய அடைமானக் கடனின் வட்டிவீதத்தை 2.99% ஆக குறைத்துள்ளது. சரித்திரத்திலே, இதுவே 5 வருடத்திற்குரிய வரையறுத்த



அடைமானக்கடனுக்குரிய (closed mortgage) குறைந்த வட்டிவீதம் ஆகும். இதனைத் தொடர்ந்து மற்ற வங்கிகளும் வட்டி வீதத்தை குறைந்துள்ளது. சிலவருடங்களாக மாறுகின்ற (Variable Rate) அடைமானக்கடனை சிறந்ததாகவும், உகந்தாகவும், ஆலோசனை வழங்கப்பட்டது. இப்பொழுது, 5 வருட வரையறுத்த அடைமான வட்டிவீதம் (Closed Mortgage) சிறந்ததாகக் காணப்படுகின்றது. கனடிய குடும்பங்களின் கடன் அதிகரித்து வருவதால் நிதி அமைச்சரும், மத்திய வங்கி ஆளுனரும் மீண்டும் எச்சரிக்கை குரல் கொடுத்துள்ளனர். கனடிய மக்கள், மேலும் அதிக கடனைப் பெற்றால் அடைமானக்கடனை திருப்பி செலுத்தும் காலம் (Amortization) 30வருடத்திலிருந்து 25வருடமாக குறைக்கப்படலாம் என நிதி அமைச்சர் எச்சரித்துள்ளார். இருந்த போதிலும், ஜனவரி 17, 2011 இல் கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதத்தில் எதுவித மாற்றமும் ஏற்படுத்தாமல் 1% இலே விடப்பட்டுள்ளது. இதனால் முதன்மை வட்டிவீதம் 3% ஆகவே காணப்படுகின்றது. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் மாறாமல் காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் உலக நாடுகளில், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார தேக்கமே ஆகும். சில வங்கிகளின் முதன்மை அதிகாரிகளும் நிதி அமைச்சரின் கூற்றிற்கு சாதாகமான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். கனடியர்களின் கடன்பழு வருமானத்தின் 152. 90 எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2010 இல் இந்த எண்ணிக்கை 146 ஆகக் காணப்பட்டது. 4 வருடங்களிற்கு முன்பாக, அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் (UK) இன் பொருளாதாரம் மிகவும் இக்கட்டான நிலை ஏற்பட்டதனை அறியக்கூடியதாக உள்ளது. 2011 இல் விற்கப்பட்ட ஆதனங்களின் எண்ணிக்கையும், சராசரி விலையும் முந்தைய ஆண்டை விட சிறிதளவு அதிகரித்துள்ளது. 2012 ஆம் ஆண்டு மிகச் சிறியளவு அதிகரிப்பை எதிர்பார்க்கலாம் அல்லது சீரானதாகக் காணப்படலாம். வியாபாரச் சந்தையில் போதியளவு, நல்ல நிலையிலுள்ள வீடு, மனைகள் இல்லாததும் இதற்கு காரணமாகலாம். பொதுவாக ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் ஆதன வியாபாரம் மந்த நிலையிலேயே காணப்படும். இம்முறை வழமைக்கு முரணாக, மிகவும் சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும் காணப்படுகின்றது. இதற்கு குறைந்த அடமானக்கடன் வட்டிவீதமே மிக முக்கிய காரணமாகும். இந்நிலையிலும் நிதி நிறுவனங்கள் மிகவும் இறுக்கமான நிலையிலேயே வட்டிக்கடனை வழங்குகின்றது என்பதனையும் அறிந்திருத்தல் உசிதமானது. நிதிநிறுவனங்களும் மிகவும் கட்டுப்பாட்டுடனே அடமானக்கடனை வழங்குகின்றது.

கடந்த சில வருடங்களாக, ஆதனவிலை அதிகரிப்புடன் வாழுகின்ற (Resale) வீடுகளின் விற்பனைகளும் அத்துடன் புதிதாக நிர்மாணம் செய்வதற்காக விற்கப்படும்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

HomeLife/GTA
Realty Inc. Brokerage* *Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"
Raja Mahendran, P. Eng.
Broker/Owner

CONDO. FOR RENT
1. One + Den condo. for rent Scaborough Center.
2. 1 Bedroom + 2 Bedroom in West of DownTown.

FOR LEASE
GTA SQUARE MALL
5215 Finch. Ave. East. Renovated Unit on the * 2nd floor. 2 Rooms. Telephone connected. Starting From $850.

SPACE FOR LEASE
Embassy store Building, 5200 Finch. Ave. East.
1. 300 sq.ft. 2nd Floor unit. Rent only $400.
2. 779 sq.ft. 3 rd Floor. Rent Only $1000.
3. 620 sq.ft. Main floor. Rent $1100.
4. 2000 sq.ft. Main floor. Along Finch Ave. Available for Flower shop, Salon, Car Rental, Tution Classes. Many more uses. Reasonable Rent.

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969 & 145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

# எங்கே போகின்றது எங்கள் வருமானம்?

தலைப்பில் உள்ள கேள்வி வாசகர் ஒருவர் என்னிடம் கேட்டது. அவர் மேலும் சொன்னார், 'நான் நன்றாக சம்பாதிக்கின்றேன். ஆனால் வருட முடிவில் பார்த்தால் சேமிப்பு என்று ஒன்றும் பெரிதாக இல்லை. ஏன்?'


வேறு ஒரு வாசகரின் கேள்வி; நான் இரண்டு வேலை. சமயத்தில் மூன்று வேலை கூடச் செய்கின்றேன். சாப்பிடக் கூட நேரமில்லை. வாழ்க்கைத் துணையை இலங்கையிலிருந்து 3 வருடங்களுக்கு முன் திருமணம் செய்து கூட்டி வந்தேன். குடும்பத்தில் நிம்மதி என்பதே இல்லை. நான் இயந்திர வாழ்க்கை தான் வாழ்கின்றேன். இதை மாற்ற முடியாதா? எனக்கு வழி தெரியவில்லை. உங்களுக்குத் தெரியுமா?

இப்படி வாசகர்கள் பணத்தைப் பற்றியும் பணமும், உறவும் இணைந்த சூழ்நிலைகளை பற்றியும் கேட்ட கேள்விகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். அவர்களுக்கு நான் கொடுத்த பதில்களின் சுருக்கமே இக்கட்டுரை.

வாழ்வின் நோக்கம் என்ன என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். பலரின் பதில்கள் இப்படித்த தான் இருக்கும். மகிழ்ச்சியான வாழ்க்கை, நல்லகுடும்பம், நல்ல வாழ்க்கைத்துணை, பிள்ளைகள், நிம்மதியான ஓய்வு காலம், செல்வந்தன் ஆதல், பெரும் பொருள் ஈட்டல்... இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இவை எல்லாவற்றையும் சில அடிப்படைகளின் கீழ் கொண்டு வரச் செய்யலாம்.

முதலில் மனிதன் பாதுகாப்பைத் தேடுகின்றான். பாதுகாப்பு முடிந்த பின் அல்லது நிறைவுற்ற பின் சேமிப்புக்கு வரவேண்டும். அடிப்படை சேமிப்புக்கள், தேவைகள் முடிந்த பின் செல்வத்தையும் பெருக்க வழிதேட வேண்டும்.

இந்த முயற்சிகள் அல்லது செயல்கள் பேராசை இல்லாமல் ஆசை இருக்கலாம். அக்கறையுடன் செய்யப்படும் போது, தொடர்ந்து செய்யப்படும் போது, குறிக்கோள் நிறைவேறுகின்றன. மேலே




சொன்னவற்றை ஒரு வரைபடத்தில் மூலம் விளக்குவோம். குறிக்கோள்கள் / நோக்கம்

மனிதனின் மிகப் பெரிய செல்வம் தன்னம்பிக்கை, தன்னால் முடியும் என்ற நம்பிக்கை, பொருள் ஈட்டும் ஆற்றல். இதுவே மிகப் பெரிய சொத்து. அதற்கு அடுத்தது, அன்பான வாழ்க்கைத் துணை, பிள்ளைகள், உறவுகள் மற்றும் நட்புகள்.

இவற்றை நீங்கள் பாதுகாக்கிறீர்களா? பாதுகாப்பீடும், ஆயுட் பாதுகாப்பும், பிறகாப்புறுதிகளும் இதில் அடங்கும். யாருக்கு எவ்வளவு தேவை. தகுந்த ஆலோசகர் நல்ல பதிலை சுயலாபம் கருதாமல் தரக்கூடும்.

இதற்கு அடுத்தபடியாக சேமிப்புக்கள்; இருக்க இடம் தேவை. குடியிருக்க வீடு வேண்டும். எவ்வளவில் வீடு வேண்டும்? பக்கத்து வீட்டுக்காரன் அரை மில்லியனிலில் வீடு வாங்கினால் நானும் அரை மில்லியனுக்கு வீடு வாங்க வேண்டுமா? அவனுடைய வருமானம் வேறு. என்னுடைய வருமானம் வேறு. அவனுடைய சூழ்நிலைகள் வேறு, என்னுடைய சூழ்நிலைகள் வேறு. என் சூழ்நிலைக்கு ஏற்பத்தான் நான் திட்டமிட வேண்டும். வரவு எட்டணா என்றால் செலவு பத்தணாவாக இருந்தால் வாழ்க்கையில் நிம்மதி என்பது எங்கே எப்படி இருக்க முடியும். உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ற முடிவுகளைத் தக்கோரிடம் ஆலோசனை பெற்றி பின் நீங்கள் தான் எடுக்க வேண்டும். சேமிப்புக்கள் வீடு வாங்க மட்டுமல்ல. வேறு பலவற்றுக்கும் தேவை. பிள்ளைகளின் படிப்பு, ஓய்வு காலம் என்று ஓரிண்டை உதாரணத்துக்கும் குறிப்பிடலாம். எப்படிச் சேமிக்க வேண்டும்?

ஆர்.ஆர்.எஸ்.பி யிலா? (RRSP) ரி.எவ்.எஸ்.ஏ. யிலா (TFSA) இல்லை வேறு எதிலாவதா? வங்கியில் சேமிப்பில் போட வேண்டுமா? மியூச்சுவல் பண்டில் போடவேண்டுமா? பங்குச் சந்தை பங்குகளில் போட வேண்டுமா? கடன் பத்திரங்களில் போட வேண்டுமா? எதில் போட வேண்டும்? எப்படிப் போட வேண்டும்?

ஒவ்வொருவரின் சூழ்நிலைகளும், தன்மைகளும் மாறுபடும். எல்லோருக்கும் ஒரே மாதிரியான பதிலைக் கூற முடியாது. உங்களுக்கு ஏற்ற பதிலைக் கண்டு பிடிக்க வேண்டும். சேமிப்புக்களில் ஆபத்துக்களும் உள்ளன. சமயத்தில் அசலே காணாமல் போய் விடுவதும் உண்டு. சிலர் அதை விரும்புவர். வந்தால் மலை, போனால் மயிர் என்று நினைப்பர். வேறு சிலரோ, ஆபத்தா! வேண்டவே வேண்டாம் என்பர். இன்னும் சிலர் இதிலும் இல்லாமல் அதிலும் இல்லாமல் இடைத்தரமாக இருப்பர். நீங்கள் இதில் எத்தரம் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

சேமிப்பும் கவனத்தில் கொள்ளப்பட்ட பின் செல்வந்தனாக பொருள் குவிக்க வளர்ச்சிப் பாதையில் ஈடுபடுகிறீர்கள். சந்நியாசியோ, குடும்ஸ்தனே இந்த உலகில் வாழ பொருள் எல்லோருக்கும் தேவை. 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை' என்றார் வள்ளுவர். இவ்வுலகுக்கு அப்பால் அருள் தேவை. 'அருள் இல்லார்க்கு அவ்வுலகு (மேல் உலகு) இல்லை' என்கிறார் வள்ளுவர்.

அருளைத் தேட மனிதனுக்குத் தனிக்காலம் தரப்படுவதில்லை. பொருளைத் தேடும் காலத்தே தான் அருளையும் தேட வேண்டும். அறமே அருளின் முதல்படி. எனவே அறத்தின் வழியே பொருளை ஈட்டலே சிறந்தது. பொருளும், அருளும் சேர்ந்த வாழ்க்கை நிம்மதியையும், மனநிறைவையும், மகிழ்ச்சியையும் தருகின்றது.

இப்போது மீண்டும் கட்டுரையின் ஆரம்பத்தில் எழுப்பிய கேள்விகளுக்கு வருவோம்.

### வருமானம் எங்கே போகின்றது?

உங்கள் செலவுகளைக் கண்காணித்துக் குறித்துக் கொள்ள ஆரம்பித்தீர்களே யானால் வருமானம் எங்கே எப்படி போகின்றது என்ற கேள்விக்குப் பதில் கிடைக்கும். அது தெரிந்திருந்தால் தான் நாம் முக்கோணத்தில் பார்த்த எல்லாவற்றையும் அடையமுடியும். முக்கோணத்தில் அடிப்படையில் பாதுகாப்பைத் பார்த்தோம். பின் 'சேமிப்பை' ப் பார்த்தோம். அதன் பின் 'வளர்ச்சி'யைப் பார்த்தோம். ஆர்.ஆர்.எஸ்.பி (RRSP) ரி.எவ்.எஸ்.ஏ (TFSA) பதிவு செய்யப்படாத சேமிப்புக்கள் (Non Registered Investments) என்ற எல்லாமே சேமிப்பின் கீழோ, வளர்ச்சியின் கீழோ தான் வருகின்றன.

வளர்ச்சியின் கீழ் கூடுதலாக மண், மனை, தங்கத்தில் சேமிப்பதும் அடங்கும்.

தெரியாத ஒன்றில் செயல்படாதீர்கள். தெரியாத ஒன்றைப் பற்றி முதலில் தெரிந்து கொள்ளுங்கள். புரிந்தால் செயல்படுங்கள். புரியாவிட்டால் விட்டுத் தள்ளுங்கள். ஒவ்வொன்றிலும் நன்மை, தீமை, இலாபம், நட்டம் கலந்தே வருகின்றது. பல சமயங்களில் எதிர்காலம் புதிராய் இருக்கலாம். காரியங்கள் நினைத்தபடியும் நடக்கலாம். மாறுதலாகவும் நடக்கலாம். மாறுதலாக நடந்தால்...? நீங்கள் ஏற்றுக் கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும் முடியுமா? தயாரா? யோசியுங்கள். செயல்படுங்கள்.



வாழ்க வளமுடன்.

**பெரி. முத்துராமன்**

உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ற ஆலோசனைகளைப் பெற இக்கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளலாம்.
தொலைபேசி எண் : 416.473.6100
இணைய தளமுகவரிகள்:
www.perri.com,
www.dreamsandmoney.com

# 5 வருடம்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆதனங்களும் அதிகரித்தே வருகின்றது. இந்நிலைமை இவ்வருடமும் தொடரலாம் போலத் தான் இப்பொழுது தோன்றுகின்றது. கனடிய நிதி அமைச்சர், மற்றும் நிதி நிறுவனங்கள் இறுக்கமான நிலையை ஏற்படுத்தினால் இதில் மாற்றம் ஏற்படலாம். 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த ஆதன வியாபார பட்டியலை கீழே காணலாம்.

**BRAND NEW UNITE**

| ஆண்டு | Resale Units | New Condo. Apt | Low rise Houses | Resale Average Price |
|---|---|---|---|---|
| 2009 | 87,308 | 15,627 | 18,369 | $395,460 |
| 2010 | 85,845 | 20,39 | 6,454 | $431,276 |
| 2011 | 89,347 | 28,466 | 17,460 | $465,412 |

- Lowrise:- தனிவீடுகள், இருவீடுகள், பலவீடுகள் சேர்ந்த ரவுண் வீடுகள் அடங்கும்.

2011 இல் அடுக்குமாடிகளில் உள்ள அலகுகள் மொத்தமாக 17,460 விற்கப்பட்டுள்ளது.

இதில் Tridel நிறுவனம் ஆகக்கூடுதலாக 1664 மனைகளை விற்றுள்ளது. Lowrise வீடுகளில் Mattamy 1884 வீடுகளை விற்றுள்ளது. கடந்த சில வருடங்களில் அடுக்குமாடி மனைகளின் அளவுகளிலும் (Unit Size) மாற்றம் ஏற்பட்டுள்ளது. Bachelor Apartment 342 சதுர அடி இலும் 2 Bedrooms Apartment 560 சதுர அடியிலும் 3 Bedrooms 720 சதுர அடியிலும் இப்பொழுது விற்கப்படு வதனைக் காணக்கூடியதாக உள்ளது. சதுர அடியின் விலைகள் அதிகரிப்பதால், கனடியர் மக்களாலும் வாங்கும் நிலைமை இறுக்கமடைவதனைக் காணலாம். இந்நிலைகளில் மாற்றம் ஏற்படுத்துவதற்காக எதிர்காலங்களில் புதிய டிசைன் மனைகள், அடுக்குமாடிக் கட்டிடத்தில் விரைவில் வரும் என எதிர்பார்க்கலாம்.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555



# SELL YOUR HOME FASTER AND FOR MORE MONEY

**Finch / Middlefield**




Commercial
Gta Square Shopping Mall

**Lawrence And Markham**




3+1 Bedrooms, 2 W Rooms
Hardwood,Ceramic Floors

**Bur Oak & Sixteenth Ave**




3 Bedrooms, 3 W Rooms

**Salem/North Of Rossland**




4 Bedrooms, 3 W Rooms
Hardwood, Ceramic Foors

**Harmony And Taunton**




4 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor

**Kennedy/Steeles**




3 Bed Rooms, 3 W Rooms
Laminate Floor

**Ellesmere/Conlins**




3+2 Bedrooms, 3 W Rooms
Hardwood,Ceramic Floors

**S 16th Ave/Fincham**




3 Bedrooms, 3 W Rooms
Parquet, Ceramic Floors

**Mclaughlin/Wanless**




4 Bedrooms, 3 W Rooms
Hardwood, Ceramic Foors

**Neilson & Finch**




4+2 Bedrooms, 4 W Rooms
Bay Window, Fire place

**Markham Rd/ Denison**




3 Bed Rooms,3 W Rooms
Hardwood, Ceramic Floors

**Neilson/Morningside**




3+1 Bedrooms, 3 W Rooms
Hardwood,Ceramic Floors

**10th Line & Hoover Park Dr.**




4+1 Bedrooms, 3 W Rooms
Hardwood, Ceramic Floors

**Bur Oak/16th Ave**




4 Bedrooms, 3 W Rooms
Hardwood floor

**Leslie & Ringwell**




Commercial

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent
Your home sold in 90 days or we buy it

RE/MAX

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770
Email: esrinathan@trebnet.com



KZG 647-200-5833

## Elaguppillai Srinathan (Mike) B.Sc

Sales Representative

**Direct 416 - 276-1225**

I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

Realtron Realty Inc, Brokerage, Each office independently owned and operated

## கடன் தொல்லையினால் வருந்துகிறீர்களா ?
## GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY
## வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை
## GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினுடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவனைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்.................

**ARE YOU CONCERNED** ABOUT YOUR DEBTS ?
ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

இத்துறையில் பல வருட அனுபவமிக்க **ARU KRISH** ஜை

இன்றே அழையுங்கள்

**இலவச ஆலோசனைகளுக்கு**

PEACE OF MIND
CREDIT REVOLVING CENTRE

# (416) 556-9287

**Credit Revolving Center**
**(GTA Square )**
5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

# நோய்வருமுன் தடுக்கும் வாழ்வியல் முறைகள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

மனிதருக்கு உண்டாகும் கொடிய நோய் என்பது அவரவர் தலைவிதியே அல்லது ஜீன்களில் ஏற்படும் மரபணு மாற்றம்தான் காரணமென்று பலரும் எண்ணிக் கொண்டிருக்கும் போது மனிதனின் வாழ்வியல் காரணிகள் தான் இத்தகைய நோய்கள் வருவதற்கு முக்கிய காரணங்கள் என்று இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

1. புகைப் பழக்கம் - மதுபானப் பழக்கம்
2. உடலின் கூடுதலான எடை
3. போதிய அளவு காய்கறிகள் பழங்கள் போன்றவற்றை உண்ணாதிருத்தல்
4. போதுமான அளவு சூரிய ஒளிபடாமல் இருப்பது
5. தகுந்த உடற்பயிற்சி இல்லாமை
6. தாய்ப்பால் புகட்டாமல் இருப்பது
7. ஹோர்மோன் மருந்துகளை அதிகம் உட்கொள்வது
8. வேகாத மாமிசம் உண்பது, போதிய நார்ச்சத்துள்ள உணவுகளை உண்ணாமல் விடுவது.
9. உணவில் அதிகம் உப்பு சேர்வது, கசப்பு, துவர்ப்பு கலந்த உணவுகளை தவிர்த்து விடுவது.
10. மலச்சிக்கல், சமிபாட்டுக் கோளாறுகள் என்பவற்றை அனுமதிப்பது.

இவை தான் மனிர்களுக்கு உண்டாகும் நோய்களின் ஆரம்ப காரணங்களாகும். இதற்கு நாம் சில வாழ்வியல் முறைகளைக் கடைப்பிடிப்பது தான் சிறந்த பரிகாரமாகும்.

**இந்த வாழ்வியல் மாற்றங்கள் பின்வருவன.**

1. அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன் எழுந்திருக்க வேண்டும்.
2. எழுந்தவுடன் காலைக் கடன்களை முடிக்க வேண்டும்.
3. காலை, மாலை தினமும் குறைந்தது 20 நிமிடங்களாவது உடற்பயிற்சிகள் சிலவற்றை செய்துவர வேண்டும் - அவற்றுள் சில யோகாசன பயிற்சி. நடைப்பயிற்சி அல்லது மெதுவாக ஓடுதல் ஒரே இடத்தில் 2 நிமிடங்கள் குதித்தல் கை, கால், மூட்டுகளை மடக்கும் பயிற்சி மூச்சுப் பயிற்சி 5 நிமிடங்கள் இவற்றுள் யோகாசனங்கள் முக்கிய மானவை, இதனை முறைப்படி செய்ய வேண்டும்.
4. நல்ல காற்றோட்டமுள்ள சூரிய ஒளி உள்வரும் வீடுகளில் வாழ வேண்டும்.
5. ஒரே நேரத்தில் அதிக உணவு உண்பதை தவிர்க்க வேண்டும்.
6. உணவருந்தும்போது கதைக்காமல் நன்குமென்று சுவைத்து சாப்பிட வேண்டும். மாமிச உணவு, உப்பு, காரம் என்பவற்றை குறைக்க வேண்டும்.
7. நிற்கும்போதும், நடக்கும்போதும், உட்காரும்போதும் நன்கு நிமிர்ந்து இருக்க வேண்டும்.
8. இரவு உணவை குறைவாகவும் வேளைக்கும் முடித்துவிட வேண்டும். காலம் கடந்து உண்ணலாகாது.
9. உணவருந்தியவுடன் கடினமான வேலை கள் செய்வதோ குளிப்பதோ கூடாது.
10. 7 மணி நேரத்திற்கு குறையாமல் தூங்க வேண்டும்.
11. மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். மன அழுத்தம் (Stress) ஏற்படாது பார்க்க வேண்டும்.
12. தினமும் போதுமான அளவு தண்ணீர் அருந்த வேண்டும். மலச்சிக்கல் ஏற்படுவதை அனுமதிக்கக் கூடாது.
13. தலைவலி, காய்ச்சல், வயிற்றுவலி, மூட்டுவலி, முதுகுவலி இவற்றுக்கு கடையில் கிடைக்கும் மருந்துகளை வாங்கி சாப்பிடக்கூடாது. மருத்துவர்களின் ஆலோச னைப்படி மருந்துகளை உபயோகிக்கவும், ஹோர்மோன் மாத்திரைகளை முடிந்தவரை உட்கொள்ளக்கூடாது.
14. ஆறு மாதத்திற்கு ஒரு கிழமையாவது சுற்றுலா சென்றுவர வேண்டும்.

இவ்வாறான முறைகளைக் கடைப்பிடித்து கொடிய நோய்களை வருமுன் காத்துக் கொள்ள முயலவேண்டும்.







NetTek Training & Solutions Inc

WORRIED about..

No Jobs? Laid Off? EI Ran Out? Part-time?

"You May Qualify for Second Career Free Funding up to $28,000"

Change Your Career! By Second Career!!



SECOND CAREER FREE FUNDING
For Eligible Clients*

UNEMPLOYED?
* Laid off after 2005 or Working less than 20 Hours

MATERNITY BENEFIT?
(Received clients within 5 years)
* Tuition/Books/Living/Daycare/Transportation Expenses

ALL FREE

Continue SERVING THE COMMUNITY FOR 14 YEARS

CAREER DIPLOMAS
* BUSINESS ADMINISTRATION
* COMPUTERIZED ACCOUNTING
* NETWORK MANAGEMENT

JOBS READY
- Bank Teller
- Accounts Clerk
- Documentation Clerk
- Administrative Clerk
- Bookkeeper
- Help Desk Support
- Technical Support Analyst
- Inventory Clerk
- Hardware Installation
- and More...

416-431-4545

TORONTO CAMPUS
(Markham Rd./Lawrence Ave.)
868 Markham Road #104,
Scarborough, ON, M1H 2Y2

MARKHAM CAMPUS
(Markham Rd./Denison Rd.)
20 New Delhi Road #97
Markham, ON, L3S 0B5

OPENING SOON

nettek-training@rogers.com www.nettek-training.com

PRIVATE CAREER COLLEGE
(Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005)

New Career Will Change Your Future!

# இலங்கையில் மாற்றம்... புலம்பெயர்ந்தவர்களால் நடக்கும்! - கவிஞர் சேரன்

## ஆக்கம்: தமிழ்மகன்

ஒருவருக்கு இரண்டு தாய் இருப்பதற்கான சாத்தியங்களைப் போன்றதுதான் இரண்டு தேசங்கள் இருப்பதும். தொடர்ச்சியான இலங்கை இனப் படுகொலைகள் இரண்டு தேச சாத்தியம் பெற்ற லட்சோப லட்சம் புலம்பெயர்ந்தோரை உருவாக்கியது. வேரைவிட்டு வெகு தூரம் விலகி விழுந்த விதைகளில் ஒருவராக, இன்று கவிதை விருட்சமாக இருப்பவர் கவிஞர் சேரன். தன் ‘காடாற்று’, மற்றும் ‘எ செகண்ட் சன் ரைஸ்’ நூல்கள் வெளியீட்டு விழாவுக்காகக் கடந்த வாரம் சென்னை வந்திருந்தார். கனடாவில் விண்சர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் - மானுடவியல் துறை பேராசிரியராக இருப்பவரிடம், இன்றைய புலம்பெயர்ந்தோர் நிலை குறித்துப் பேசினேன்! ‘என் ‘காடாற்று’ தொகுதியில் இருக்கும் பெரும்பாலான கவிதைகள் இலங்கையில் நடந்த இனப் படுகொலைகளின் தாக்கத்தின் விளைவாக எழுதப்பட்டவை.

அதனால்தான் ‘காடாற்று’ என்று பெயரிட்டேன். காடாற்று என்றால்... இறந்து போனவர்களுக்குச் செய்யும் சடங்கு. இறந்துபோனவர்கள் பற்றிய சோகத்துக்கும் இழப்புக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, ஆக வேண்டிய அடுத்த வேலைகளைப் பார்க்க வேண்டும் என்பதற்கான சடங்கு அது. ஆனால், இலங்கையில் நடந்த படுகொலைகளுக்கு அப்படி காடாற்று செய்ய முடியாது. ‘போர் முடிந்துவிட்டது. எல்லாவற்றையும் மறந்துவிட்டு, இனி அடுத்து ஆக வேண்டிய அபிவிருத்தி வேலைகளில் நீங்கள் உங்களை இணைத்துக் கொள்ள வேண்டும்’ என்று அரசு விரும்புகிறது. ஆனால், அது அப்படி இல்லை என்பதுதான் என் கவிதைகளின் மையம்!'' என விரிந்தது அவருடைய உரையாடல்.

“புகலிடச் சூழல் அனுபவங்கள் படைப்பின் செயல்பாடுகளை எப்படி பாதிக்கிறது?

“தமிழகத்தில் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து படைக்கிற இலக்கியம் வேறு... 20 வயது வரை ஒரு தேசம், பிறகு இன்னொரு தேசம், இன்னொரு சூழல், இன்னொரு தேசிய கீதம், இன்னொரு நாட்டுடன் விசுவாசம் என்று வாழும் புகலிடத் தமிழர்களின் இலக்கியப் பங்களிப்புகள் வேறு. அந்த விதத்தில் இது புதிய படைப்பு அனுபவத்தை முன்வைக்கிறது!''

‘இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு எடுத்த நடவடிக்கைகளை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?’

‘போர் ஆரம்பமான நாள் முதல் அது முடிவுக்கு வரும் வரை இந்திய அரசின் நேரடியான, மறைமுகமான உதவி இலங்கை அரசாங்கத்துக்கு இருந்தது. இந்திய உதவி இல்லாமல் அந்தப் போரில் அவர்கள் வெற்றி அடைந்ததற்கான சாத்தியங்கள் இல்லை. இலங்கையின் அதிபர் ராஜபக்ஷே, பாதுகாப்பு செயலர் கோத்தபய ராஜபக்ஷே ஆகியோரின் கூற்றுக்களும் இதை உறுதிபடுத்தின.



ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையும் அதை தெளிவுபடுத்தியது. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் கார்டன் வைஸ், “கேஜ்'' என்ற தன் நூலில் அதை நேர்மையுடன் பதிவுசெய்ததை, காலச்சுவடு பதிப்பகம் “கூண்டு'' என்ற தலைப்பில் தமிழில் வெளியிட்டு இருக்கிறது. இதை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதில் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் செயல்பட்டு இருப்பது விளங்கும். எத்தனை அப்பாவி மனிதர்களை அழித்தேனும் விடுதலைப் புலிகளை ஒழித்துவிட வேண்டும் என்ற அவர்கள் நோக்கம் நிறைவேறி விட்டது. இந்த உடன்படிக்கையால்தான் உலக நாடுகளும் ஐக்கிய நாடுகள் அமைப்பும் அதைக் கண்டுகொள்ளாமல் இருந்தன. “இவ்வளவு உயிர் இழப்பு ஏற்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை'' என்று இந்தியாவும் சர்வதேச அமைப்புகளும் யோசிக்கக்கூடும். ஆயினும், போரின் விளைவுகளையும் வழிமுறைகளையும் நியாயப்படுத்துவதற்கான காரணங்களைத் தேடுவதுதான் இந்தியாவின் இப்போதைய நோக்கமாக இருக்கிறது.

அதேபோல், வட கிழக்கு மாகாண மக்களுக்கு உண்மையில் என்ன தேவை என்பதை இவர்களாகவே முடிவு செய்து நடவடிக்கைகள் எடுத்துவருவது தமிழர்களுக்குப் பெரும்பாலும் பயன் அளிப்பதாக இல்லை. இப்போது இந்திய அரசு 50 ஆயிரம் வீடுகள் கட்டித்தருவதாக அறிவித்து உள்ளது. அதிலும்கூட பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கிடைக்கும் ஆதாயத்தை விட இலங்கைத் தமிழர்களுக்குக் கிடைக்கும் பலன்கள் மிகக் குறைவு தான்!''

“வீடு கட்டித்தருவதை ஏதோ ஒரு கட்டட நிறுவனம் செய்துதானே ஆகவேண்டும்? அது பன்னாட்டு நிறுவனமாக இருப்பதில் என்ன தவறு?''

அபிவிருத்தித் திட்டங்கள் அந்தப் பிராந்திய மக்களின் நலன்களுக்குப் பாதகம் இல்லாமல் இருக்க வேண்டும் என்பார் அமர்தியா சென். மலைக-ளைக் குடைந்து கனிமங்களை வெட்டி எடுப்பது நல்லது என்பது பொதுவாக சரியான கருத்து தான். அது அங்கு வாழும் பழங்குடிகளை அப்புறப்படுத்துவதாக இருந்து விடக் கூடாது அல்லவா? சத்தீஸ்கரில் அதுதானே நடக்கிறது? கார்ப்பரேட் நிறுவனங்களிடம் பொது மக்களின் நலனை எதிபார்க்கவே முடியாது. இலங்கை வட கிழக்குப் பகுதியில் நடைபெறும் பல அபிவிருத்தித் திட்டங்களில் அமெரிக்க, சீன கார்ப்பரேட் நிறுவனங்கள் அடையும் பொருளாதாரப் பயன்கள்தான் அதிகம். அங்கு அமைக்கப்படும் காற்றாலைகள் மலேசியா வில் இருக்கும் சீனர்களின் நிறுவனம். இந்தியாவும், அமெரிக்காவும், சீனாவும், அங்கு நடப்பதாகச் சொல்லும் பல நலத் திட்டங்களைப் போருக்குப் பிறகு பங்கு போட்டுக்கொண்டு இருக்கின்றன. இவை எல்லாமே அந்த நிறுவனங்களின் நலன்களுக்காகத்தான். மக்கள் நலன் அதில் குறைவாகவே இருக்கும்!''

“லட்சக்கணக்கில் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டு மீதம் இருப்போர் முள்வேலி சிறையில் அடைபட்டு இருக்கும் இந்தச் சூழலில் தமிழர்களின் அடுத்தகட்ட நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?''

“ஐந்து முக்கிய அம்சங்களைச் சொல்ல வேண்டும்.

1. கடந்த 30 ஆண்டுகளில் நிகழ்ந்த போராட்ட வழிமுறைகள், வெற்றிகள், தோல்விகள் குறித்து, காய்தல் உவத்தல் இல்லாத சுய விமர்சனம் முன்வைக்கப்பட வேண்டும்.
2. இனிவரும் போராட்டம் பன்முகப் பட்ட, பரந்துபட்ட ஜனநாயகத்தை உள்ளடக்கிய அனைத்துத் தரப்பு இலங்கைத் தமிழரையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவரும் அமைப்பாக இருக்க வேண்டும்.
3. இந்தப் போராட்டத்தினால் புலம் பெயர்ந்து இருக்கும் தமிழர்கள், பல்வேறு நாடுகளில் வசித்துவரும் தமிழர்கள், தமிழகத் தமிழர்கள் அனைவரும் “உணர்வுத் தோழமை’ என்ற அடிப்படையில் ஜனநாயகரீதியில் தோள் கொடுக்க வேண்டும். அது, குறுகிய கட்சி நோக்கில் இல்லாமல், பொதுமக்கள் தளத்தில் அமைய வேண்டும்.
4. சர்வதேச அமைப்புகளான ஐ.நா. போன்றவை மீது நம்பிக்கை நீர்த்துப் போனதால், அந்த அமைப்புகளுக்கு அப்பாற்பட்ட தீர்வுகள் தேவை.
5. இன்றைய புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஒரு தேசம், ஒரு நாடு, ஒரு பாஸ்போர்ட், ஒரு தேசிய கீதம் என்பது மறைந்துவிட்டது. நாடு கடந்த தேசிய அடையாளம் தேவையாக இருக்கிறது. அதை நோக்கிப் பயணிக்க வேண்டி இருக்கிறது.

“நாடு கடந்த தேசிய அடையாளத்தை நோக்கிப் பயணிப்பது என்றால்..?''

“கடந்த வாரத்தில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங், ஜெய்ப்பூரில் நடந்த “நாடு கடந்து வாழும் இந்தியர்களுக்கான ஓட்டுரிமை'' பற்றி பேசியிருக்கிறார். அது போன்ற ஓட்டுரிமை புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கும் வாய்க்கும் பட்சத்தில் இலங்கை அதிபர் தேர்தலில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். பொதுவாக இரண்டு லட்சம் ஓட்டு வித்தியாசத்தில்தான் அதிபர் தேர்தலில் வெற்றி நிர்ணயிக்கப்படுகிறது. பத்து லட்சம் புலம்பெயர்ந்த தமிழர்கள் இருக்கும் சூழலில் அவர்களுக்கும் ஓட்டுரிமை கிடைக்கும் எனில் மாற்றங்கள் ஏற்படும் என்று நம்புகிறோம்!''

“எலெக்ட்ரானிக் ஓட்டுரிமை சாத்தியமாக எத்தனை காலம் ஆகும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?''

“செல்போன், இணையதளம் மூலம் வாக்கு அளிக்கும் வசதிகள் இந்தியாவிலேயே ஓர் இடத்தில் பரீட்சார்த்தமாக செய்துபார்த்ததாக அறிகிறேன். குறைந்தது ஐந்து முதல் பத்து ஆண்டுகளுக்குள் இது பரவலாக சாத்தியமாகலாம். வரிசையில் நின்று ஓட்டு அளிப்பதில் மக்களுக்கு இருக்கும் மனச்சோர்வு, அக்கறையின்மை போன்றவை இந்த எலெக்ட்ரானிக் ஓட்டுரிமையைத் துரிதப்படுத்தும். அதனால், வேகமாக இந்த மாற்றம் நிகழ்ந்துவிடும். இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் ஏற்கெனவே இந்த ஓட்டு அளிக்கும் முறை நடைமுறைக்கு வந்துவிட்டது. நாங்கள் கற்பனை செய்துவைத்து இருந்த “நாடு கடந்த தேசியம்'' சாத்தியமாவதற்கு இதன் மூலம் வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறோம்!''

“பிரபாகரன் இருக்கிறார், இல்லை என்று இன்னமும் தெளிவு இல்லாத நிலை இருக்கிறதே?''

“பலரும் பல இடங்களில் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். இதற்கு ஒரு “மல்டிபிள் சாய்ஸ் கேள்வி'' மூலமாகப் பதில் சொல்ல விரும்புகிறேன்.

1. பிரபாகரன் இருக்கிறார். திரும்பி வருவார்.
2. இல்லை. அவர் மாவீரர் ஆகிவிட்டார்.
3. காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.
4. கனத்த மௌனம்.
5. மேற்கூறிய யாவையும் சரி.

-இந்த பதில்களில் நான் ஐந்தாவது பதிலை டிக் செய்கிறேன்!''

மூலம்: ஆனந்த விகடன் - தை 25, 2012

YARL WINDOW BLINDS & DRAPER
VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORM WOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS
WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds


Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
Call: selvam
We have experience to make your home more beautiful

# அனைத்தும் வாழ்வதற்காகவே!

## ஓடும் நீர் உறைவதில்லை 136

இந்த உலகில் வாழும் உயிரினங்களில் மனிதனுக்கு மட்டும் ஏன் எண்ணிலடங்காத பிரச்சனைகள்? இயற்கையால் படைக்கப்பட்ட ஜீவராசிகளில் மனிதனைத் தவிர ஏனையவை அனைத்தும் வாழ்க்கையை வளமுடன் வாழ்ந்து முடிக்கின்றனவே! மனிதனால் மட்டும் வளமாக வாழ முடியாமைக்குக் காரணம் என்ன? பழைய கடனோ? அதாவது முற்பிறப்பில் செய்த பாவமோ? முற்பிறப்பு என்று ஒன்று இருந்து அந்த முற்பிறப்பில் செய்த பாவமாக இருக்குமாயின் மனிதனுக்கு மட்டும் தானா முற்பிறப்பு? அல்லது ஏனைய உயிரினங்கள் பாவங்கள் செய்வ தில்லையோ? அதாவது மனிதன் மட்டும் தான் பாவம் செய்கின்ற பிறப்போ? இந்தப் பிறப்பில் பிரச்சனைகளை எதிர் நோக்கும் ஒவ்வொரு மனிதனும் முன்னைய பிறப்பிலும் மனிதனாகப் பிறந்து பாவங்கள் செய்தவர்களோ? இப்படி ஆயிரம் கேள்விகளை நாம் கேட்டாலும் விடை காண முடியாமல் ஏங்கிக்கொண்டிருக்கும் வாசகர்களே, மனிதனின் வாழ்க்கை அவனுக்குப் பிரச்சனையாகிப் போனதற்குக் காரணம் ஒன்றே ஒன்று தான்.

மனிதனைச் சிறிது நேரம் அமைதியாக ஒருபுறம் இருத்திவிட்டு ஒரு மாமரத்தின் வாழ்க்கையைப் பார்ப்போம்.
மாவிதையிலிருந்து முளை. அதிலிருந்து படிப்படியாக இயற்கையின் பங்களிப்பால் கொடுக்கப்படும் அனைத்தையும் தனது தேவைக்கு ஏற்ற அளவு உள்வாங்கிக் கொண்டு மாங்கன்றாகி, தொடர்ந்து வளர்ச்சி பெற்று மாமரமாகிவிடுகின்றது. இயல்பான வளர்ச்சி முறை. இப்போது அமைதியாக ஓரத்தில் இருக்கவிட்ட மனிதனிடம் ஒரு கேள்வியைக் கேட்போம். "ஏ மனிதா! உனது பிறப்புக்கும், வளர்ச்சிக்கும் ஒரு மாமரத்தின் தோற்றத்துக்கும் அதன் வளர்ச்சிக்கும் இடையில் என்ன வேறு பாட்டைக் கண்டாய்?" வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை என்றான் மனிதன். அப்படியானால் உனக்கு மட்டும் ஏன் எண்ணற்ற பிரச்சனைகள்? ஓ! ஆறாவது அறிவோ? அப்படியானால் நான்கறிவு படைத்தவற்றிக்கும் ஐந்தறிவு படைத்தவற்றிக்கும் இடையில் பிரச்சினைகளும் அதன் அளவுகளும் காணப்பட வேண்டுமே! அப்படி ஏதாவது



KG Master-kgmaster@rogers.com

இருக்கிறதா? இல்லை என்கிறான் மனிதன். படைப்புக்கள் ஒவ்வொன்றும் அதன் முழுமையை அனுபவித்து வாழவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் தானே இயற்கை படைக்கிறது. அதுவும் மனிதனை ஆறாவது அறிவுடன் அல்லவா படைத்திருக்கிறது இயற்கை! பிறப்பில் உயர்ந்த பிறப்பு மனிதப் பிறப்பு என்று பெருமை பேசிக்கொள்ளும் மனிதனுக்கு ஏன் பிரச்சனைகள் எழுகின்றன? விடை தெரியாமல் விழி பிதுங்க நிற்கும் மனிதனை மீண்டும் ஓரத்தில் இருத்திவிட்டு மாமரத்திற்கு வருவோம்.

மண்ணுக்குள் மாவிதை. அந்த இருளுக்குள் இருக்கும் முளையை வெளிச்சத்தை நோக்கித் தள்ளுகிறது பூமி. பூமிக்கும் வலி. முளைக்கும் வலி. இரண்டும் அதனதன் வலிகளை ஆனந்தமாக அனுபவிக்கின்றன. மனிதப் பிறப்பில் தாயும் சேயும் போல. வெளிச்சத்தைக் கண்டவுடன் ஒரு குழந்தையைப் போல பூரிப்படைகிறது மாமரமாகப் போகும் அந்த இளம் மாங்கன்று. பூமியின் மேற்பரப்பில் நிற்கும் அந்த இளம் கன்று மழையில் நனைந்து, காற்றில் வளைந்து, வெப்பத்தில் வியர்த்து, குளிரில் நடுங்கி, தன்னைச் சுற்றியுள்ள கல்லையும், புல்லையும், குப்பை கூளங்களையும் அவற்றின் தாக்கங்களையும் உள்வாங்கிக் கொண்டு மிகவும் பூரிப்புடன் மாமரமாகி விடுகிறது. மேன்மேலும் ஆனந்தம். தன்னை வளர்த்துக் கொண்டிருக்கும் அத்தனைக்கும் நன்றிகூறிய வண்ணம் பூரிப்பின் உச்சத்தை அடைந்து பூக்கிறது, காய்க்கிறது, இனிமையான கனியைக் கொடுக்கிறது. இடையிடையே பெருங்காற்று, பெருமழை, அதிக வெப்பம், நிழலுக்கு ஒதுங்குவோரின் நெற்றி அடி, அவர்களால் முறித்து எறியப்படும் தனது கரங்கள், குருவிகளின் எச்சங்கள், குரங்குகளின் தாவல்கள், வழிப்போக்கர்களின் கல்லெறிகள் எனப் பலவற்றை ஏற்றுக் கொள்கிறது. தனது நிழலில் வாழும் தனது குழந்தைகளுடன் பிறரது குழந்தைகளான செடிகள், கொடிகள், சிறு சிறு மரங்கள் என்பவற்றையும் வேற்றுமையின்றி அணைத்துக்கொண்டு, கிளைகளில் பறவைகளுக்கு வீடுகளையும், குழவிகளுக்குக் கூடுகளையும் கொடுக்கிறது. அதுமட்டுமல்ல, தனக்குப் பின்னர் பிறந்து தனது நிழலில் வளர்ந்து தன்னைவிட உயர்ந்து வளர்ந்திருக்கும் நண்பனைக் கட்டி அணைத்துக்கொண்டு கானம் பாடுகின்றது. மீண்டும் காலம் தவறாமல் அதே பூரிப்புடன் பூக்கிறது, காய்க்கிறது, கனியைக் கொடுக்கிறது.

இப்போது அதே மனிதனிடம் இன்னொரு கேள்வி. "ஏ மனிதா, ஒரு மாமரத்தால் தனது வாழ்க்கையை வசந்தமாக்கி எப்பொழுதுமே பூரிப்புடன் வாழ முடிகின்றபோது உனக்கு மட்டும் ஏன் வாழ்க்கை ஒரு பிரச்சனையாகி விட்டது?" எதிர்பாராத கேள்வி போலும். அங்கும் இங்குமாகக் கண்களை உருட்டிக் கொண்டு இதுவரை காலமும் கற்றுக் கொண்ட, தன்னைப் பேரறிவு படைத்தவனாக பறைசாற்றிக்கொண்ட தத்துவங்களையும், கோட்பாடுகளையும் பல முறை ஞாபகப்படுத்திப் பார்த்தான். எதுவுமே கை கொடுக்காத நிலையில் தனது பார்வையை ஒரு நிலைப்படுத்தி என்னைப் பார்த்தான். எனக்குள் இருந்து ஒரு குரல் "நண்பா! மனிதனைத் தவிர ஏனைய உயிரினங்கள் அனைத்தும் இயற்கையால் தரப்பட்ட வாழ்க்கையும் அதற்குத் தேவையான வளங்களும் வாழ்வதற்காகவே தரப்படுகின்றன என்பதைப் புரிந்துள்ளன. ஆனால் மனிதனோ அவையனைத்தும் ஆள்வதற்காகத் தரப்பட்டதாகக் கருதி விட்டான்" என்றது. மீண்டும் ஒரு முறை சொல்லுங்கள் என்றான் அந்த மனிதன். "வாழ்வதற்காகத் தரப்பட்ட வாழ்க்கையையும் அதற்கான வளங்களையும் ஆள்வதற்காகத் தரப்பட்டுள்ளதாகக் கருதிவிட்டான் மனிதன். அதனால் தான் வாழ்க்கையே பிரச்சனையகி விட்டது" என்றேன். "மீண்டும் ஒரு முறை" என்று கேட்கவில்லை அந்த மனிதன். புரிந்துகொண்டான் போலும்.

நன்றியுடன் - கேஜி மாஸ்டர்

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

அமைதியின் குரல் - Words of Peace
அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி
1-877-707-3221 / தமிழில் - 416.431.5000
- MAHARAJI -
மஹராஜியின் உரைகள்
On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221
On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219




# அமுத சுரங்கம்

திருவள்ளுவ நாயனாரின் திருக்குறள் ஒரு தங்கச் சுரங்கம். தங்கச் சுரங்கம் என்று சொல்வதும் பொருத்தமாக இருக்காது. ஏனெனில் தங்கச் சுரங்கத்தைத் தோண்டினால் தங்கந்தான் கிடைக்கும். தங்கம் ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்த முடியுமா? வெள்ளிக்கு எங்கே போவது அல்லது நிலக்கரிக்குத்தான் எங்கே செல்வது? வெள்ளி வேண்டுமெனின் வெள்ளி இருக்கும் இடத்தை நாடவேண்டும். நிலக்கரி வேண்டுமெனின் வேறிடம் பார்க்க வேண்டும்.

திருக்குறட் சுரங்கம் அவ்விதம் அன்று. தேவையான அனைத்தையும் தன்னகத்தே உள்ளடக்கி இருக்கும் ஓர் அமுத சுரங்கம்.

நூல் முழுவதுமே அமுதசுரங்கம் போன்று அமையினும் ஒவ்வொரு குறளுங்கூட ஒவ்வொரு சுரங்கம் போன்று திகழ்வதைக் காண்கின்றோம். ஒவ்வொன்றையும் எவ்வளவுக்கு அகழ்கின்றோமோ அவ்வளவுக்குப் பொருள்கள் கிடைக்க வாய்ப்புண்டு.



அகழ்கின்றோம் என்றதும் நினைவுக்கு வருகின்றது இந்தக் குறள்:

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 16:1

திருக்குறளுக்கு இடைக்காலத்தில் உரை கண்டவர் பதின்மர் என்பர். எனின், அவர்களில் நால்வர் உரைகளே கிடைத்துள்ளன. இக்குறளுக்கு அந்நால்வர் தந்த உரைப்பொழிப்புகள் பின்வருமாறு:

பரிமேலழகர்: தன்னை அகழ்வாரை வீழாமல் தாங்கும் நிலம்போலத் தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாய அறம் என்றவாறு.

மணக்குடவர்: தன்னை அகழ்வாரைத் தரிக்கின்ற நிலம்போலத் தம்மை இகழுமவர்களைப் பொறுத்தல் தலைமையாம் என்றவாறு.

பரிதியார்: பூமி வெட்டுகிற பேரையுஞ் சுமக்கும் அதுபோலத் தம்மை இகழ்வாரைத் தாங்குதல் தலைமையான காரியம் என்றவாறு.

காலிங்கர்: தமது உருவினைப் பண்புபட அகழ்வாரைத் தான் தாங்கிப் பாதுகாக்கின்ற நிலத்தைப் போலத் தமது உள்ளம் புண்படத் தம்மை வெஞ்சொல்லினால் கூறி அவமதிப்பாரையும் தாம் அதை நெஞ்சில் கருதாது பொறுத்து ஒழுகுதல், தமக்குத் தலைமைப்பாடாவது என்றவாறு.

நால்வரும் "பொறையுடைமையாவது பிறர் செய்யும் குற்றம் பொறுத்தல் என்னும் அடிப்படையிலேயே பொருள் கூறியிருப்பதைக் காண்கிறோம். இவர்களுக்குப் பின்வந்தோரும் பொறுத்தல் தலையாய கடன் என்றே வள்ளுவர் வலியுறுத்துகிறார் என்று பொருள் கூறியுள்ளனர்.

அதுமட்டுமன்று. உரைகளை நுணுகி நோக்குகையில் குற்றமாவது சொல்லளவின தாய குற்றம் என்னும் பொருள்படவே உரை கூறியுமுள்ளனர்.

ஆனால், பொறையுடைமை அதிகாரத்தால் தீமை செய்பவர் இருவகைப்படுவர் என்பது தெளிவாகின்றது. செயலாற் செய்பவர் ஒரு வகை. சொல்லளவோடு நிற்பவர் இன்னொரு வகை. செய்கையால் தீங்கு இழைப்பவரை "திறனல்ல" செய்பவர் என்றும் "மிகுதியான் மிக்கவை" செய்பவர் என்றும் சொல்லால் குற்றம் இழைப்பவரை "இன்னாச் சொல்" சொல்பவர் என்றும் பொறையுடைமை அதிகாரம் குறிப்பிட்டுக் காட்டும்.

தீமை சொல்லளவினதாயின் எந்த அளவுக்கும் பொறுத்துக்கொள்ளலாம். தீயினாற் சுட்ட புண் ஆறினும் நாவினாற் சுட்ட வடு ஆறாதாயினும் பரவாயில்லை பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் செயலாற் செய்யப்படும் தீங்கு எல்லை மீறும்போது பொறுமைக்கும் எல்லை வகுக்க வேண்டியுள்ளது.

காகம் ஒன்று தலையிலே கூடுகட்டப் பார்த்துக் கொண்டிருக்கலாம். முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் வரைக்கும் பொறுத்துக் கொண்டிருக்கலாம். தலையையே அது கொத்தித் தின்னுகின்ற பொழுது?

பதில் தருகின்றது இக்காலத்துப் புதுக்கவிதை ஒன்று:

கண்டவற்றுக்கு எல்லாம்
கையை-
கட்டுவதும்
ஏந்துவதும்
நீட்டுவதும்
ஓங்குவதும்
கூடாதுதான்!

ஆனால்-

தலையிலே கூடுகட்டி-
குஞ்சு பொரித்ததும் போதாதென்று
தலையையே கொத்திப் புண்ணாக்கும்
காகத்தைத் துரத்த
ஓங்காத கை
ஒட்டி இருந்தாலும் என்ன?
ஒட்ட முறிந்தாலும் என்ன?

வள்ளுவர் பெருமான் எதையும் அளந்து சொல்பவர். பொறுமைக்கும் எல்லை உண்டு என்பதை அவர் அறியாதவர் அல்லர். "குணம் என்னும் குன்றேறி" நிற்பாருக்கும் வெகுளி வரும் என்று சொன்னவர் அவர்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

என்னும் குறள் பொறையுடைமை என்னும் அதிகாரத்தின் முதற் குறள். இந்த முதற் குறளிலேயே ஒருவரின் பொறுமைக்கு எல்லை உண்டு என்னும் கருத்தை வள்ளுவனார் குறிப்பால் உணர்த்தியிருக்கும் பாங்கைக் கவனிப்போம்.

பொறுத்தலுக்கு அவர் உவமானமாக எடுத்துக்காட்டும் பொருள் நிலம் - அகழ்வாரைத் தாங்கும் நிலம். அகழ்வாரை நிலம் எவ்விதம் தாங்கிக்கொள்கிறது? விழவிடாது தாங்கிக்கொள்கிறது. பொதுவான இந்தக் கருத்திலேயே உரையாசிரியர்கள் பொருள் கூறியிருப்பதை மேலே கண்டோம். இதற்கு அப்பால் இந்தக் குறளைத் தோண்டிப் பார்க்கின்ற பொறுமைக்கும் எல்லை உண்டு என்னும் பொருள் புதைந்து கிடப்பதைக் காணலாம். அவ்விதம் காண்பதற்குப் புவியியல் அறிவு சற்று அவசியமாகின்றது.

நிலம் அமைப்பால் மேற்படை (mantle), வெளிப்படை (outer core), உட்படை (inner core) என மூவகைப் படைகளைக் கொண்டுள்ளது. மேற்படையின் வெளிப்பாகம் ஓடு (Crust) எனப்படும். இந்த ஓடுதான் கண்டங்களையும் சமுத்திரங்களையும் தாங்கியுள்ளது. மனித வாழ்க்கைக்கும் இன்றியமையாத பகுதி இதுவாகும். கண்டங்கள் பாறைகளாலானவை. பாறைப் படையின் மேற்புறம் காலநிலை மாற்றங்களாற் சிதைவுற்று மணலாகியுள்ளது. எனவே, மண்ணரிப்பால் பாதிக்கப்படாத நிலத்தின் மேற்பரப்பில் நாம் முதலிற் காண்பது மண் படையேயாகும். அதன்கீழ் சிதைவுறாத அல்லது சிதைவு முறைக்கு உட்பட்ட பாறைப் படை இருக்கும். மழைநீர் மண் படையின் அடியிலும் பாறைகளின் துளைவுகள், வெடிப்புகள் வழியாகச் சென்று பாறைப்படையிலும் தங்கி நிற்கும்.

இந்தக் குறளை விளங்கிக் கொள்வதற்கு நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு முக்கியமான விடயம் என்னவென்றால் நிலத்தைத் தோண்டுகின்ற பொழுது வெப்பநிலை கூடிக்கொண்டு செல்லும் என்பது. புவியின் உட்புறம் நோக்கி ஒவ்வொரு 64 அடிக்கும் ஒரு பாகை சென்ரிகிரேட் வீதம் வெப்பம் அதிகரிக்கின்றது.

இனி, நில அமைப்புப் பற்றிய இந்த அறிவுடன் அகழ்வாரைத் தாங்கும் நிலத்தை நோக்குவோம்.

மண்படையைத் தோண்டுகின்றபொழுது நிலம் பொறுத்துக்கொண்டும் தோண்டுகின்றவரைத் தாங்கிக் கொண்டும் இருக்கின்றது. பொதுவாக நாம் நிலத்தைத் தோண்டுவது நீருக்காகவே. அதனால் நிலம் பொறுத்துக்கொண்டு தோண்டுகின்றவரைத் தாங்கும். அதேவேளை, அவர்களுக்கு நீரைக் கொடுத்தலாகிய மேலதிக நன்மையையும் செய்கின்றது. இவ்விதமே எண்ணெய், கனிப்பொருள் முதலியனவற்றை நாடித் தோண்டுகின்றவர்களுக்கும் நிலம் நன்மையே செய்யும் இயல்புடையது.

எனின், மண்படையை அடுத்து இருப்பது பாறைப்படை என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். பாறைப்படை தொடர்ந்து தோண்டுவதைத் தடுக்கின்றது. இத்துடன் நிறுத்திக் கொள்! இதற்குமேல் தோண்டாதே!" என்று நிலம் தடுப்பது போல நாமும் எம்மை இகழ்பவர்க்கு எமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்பது பொருள்.

இந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாது வெடிவைத்துப் பாறைகளைத் தகர்த்து, தோண்டுதல் முயற்சி எல்லையைக் கடக்கும்பொழுது, பாறைப்படைக்குள் தேங்கி நின்ற நீர் பீறிட்டு வெளிவருகின்றது. நிலம் அகழ்வைத் தாங்காது அழுகின்றது என்று அர்த்தம். அதனையும் மீறி அகழ்வு தொடரும்போது பொறுக்க முடியாத சந்தர்ப்பங்களில் நிலம் பொறிந்து விழுந்து சுரங்கக்காரர்களைச் சாகடித்துவிடுகின்றது. இதற்குப் பல சுரங்கவிபத்துக்களை உதாரணங்களாகக் காட்டலாம். மேலும் தொடர்ந்து தோண்டினால் வெப்பச் சுவாலையால் நிலம் தோண்டுபவர்களைத் தண்டிக்கும். ஆக, அகழ்வாரைத் தாங்கும் நிலத்தின் இயல்பு இவ்வாறாதலால் பொறுமைக்கும் எல்லை உண்டு என்பதனை வள்ளுவனார் குறிப்பால் உணர்த்தி இருக்கின்றார் என்பது தெளிவு.

இவ்விதம், திருக்குறள் ஒவ்வொன்றையும் ஆழமாக அகழ்ந்து நோக்கின் புதுப்புதுப் பொருள்கள் வெளிப்படுமாதலால் அவற்றை அமுதசுரங்கம் என்பது சாலப்பொருந்தும். எனின், மின்னுவதெல்லாம் பொன்னாக இருப்பதில்லை. நிலத்தைத் தோண்டிச் சில மினுங்கும் கற்களை எடுத்து வைத்துக் கொண்டு அவை நவமணிகளென மயங்கும் அறிவிலார் போன்று, திருக்குறளை அகழ்வார் சிலர் புதுமை என்னும் பெயரிலே பொருந்தாப் பொருள்களை வலிந்து திருவள்ளுவருக்குத் துரோகஞ் செய்து வருகின்றனர்.

திருக்குறளில் இல்லாத பொருளை எடுக்க முயல்வது அண்மைக் காலத்தில் தங்கம் இல்லாத இடத்தில் தங்கத்தை எடுக்க முயன்று பலரை ஏமாற்றி முறிந்துபோன Bre-x கம்பனியின் பரிதாபக் கதைக்குச் சரியானது.

கவிஞர் வி. கந்தவனம்




YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# வெகுளாமை (Calm) - 7

'தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.'

(குறள் 305 அதிகாரம் 31 வெகுளாமை)

என்ற திருக்குறளுடன் இன்றைய உரையாடலை ஆரம்பிப்போம். 'ஒருவர் தன்னைத்தான் காத்துக் கொள்ளவேண்டுமெனில் கோபம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும், அங்ஙனம் காக்காவிட்டால் கோபம் தன்னையே அழித்து விடும்' என்பது இந்த குறளுக்கான பொருளாகும். சினம் கொள்வதால் ஏற்படும் தீங்குகள் எவ்வளவு பாதிப்புக்களை ஏற்படுத்த வல்லது என்பதை இந்தக் குறள் மேலும் வலியுறுத்துகின்றது. மனதை அன்பினால் நிரப்பி நல்ல பண்புகளைக் கொண்டு வாழ வேண்டும்.

கடந்த இதழில் கோபம் ஏற்படுத்தும் பாதிப்பில் பத்து வீதம் மட்டுமே கோபம் என்ற உணர்ச்சியின் காரணமாக ஏற்படுவது. மிகுதி தொண்ணூறு வீதமுமாக வலி, பயம், சுய பெறுமதியின்மை போன்றவையே பாதிப்பிற்கான காரணிகளாக இருக்கின்றன என்று கூறியிருந்தேன். முதலில் வலி, பயம் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புக்களை நீக்கிக் கொள்வது முக்கியமானது. மன அமைதியின்மை, கவலை என்பவை மனதில் வலியை ஏற்படுத்துகின்றன. குடும்ப உறுப்பினர்களுடனும், நெருங்கிய நண்பர்களுடனும் விடயங்களைப் பகிர்ந்து தங்கள் மனத்தில் உள்ள வலி, பயம் போன்றவற்றை நீக்க முயலவேண்டும். ஒருவர் சுய முயற்சியால் மனத்தில் ஏற்படும் வலியினை அகற்றி வாழமுடியாத விடத்து உளவளத் துணையாளர்களை நாடி வேண்டிய ஆலோசனையை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். குடும்பத்தில் பெற்றோர் தமது பிள்ளைகள் சுதந்திரமாக தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் வாய்ப்பைக் கொடுத்து வளர்த்து வந்தால் தங்கள் விடயங்களை மனம் திறந்து பேசி ஆறுதல் பெறுவர். இந்த அணுகுமுறை பிள்ளைகள் வெகுளாமை கொண்டவர்களாக வாழ வழி சமைக்கும். தங்கள் குடும்பத்திற்குள் மனம் திறந்து பேச முடியாத சூழ்நிலையில் தங்கள் விடயங்களை வெளியில் உள்ளவர்களுடன் பேசி மன ஆறுதல் பெற வேண்டிய தேவை இருக்கும். ஒருவரின் வலி, பயம் என்பவற்றை நீக்கிக் கொள்வதில் நல்ல நெருங்கிய நண்பர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமாகின்றது.



சமூகத்தில் ஒருவர் விடும் தவறுகளை மன்னித்து ஏற்றுக்கொள்ளும் வழக்கம் மிகவும் அரிதாக இருப்பது நல்லதல்ல. இதனாலும் அவர்கள் மீண்டும் தவறு செய்யும் நிலைக்குத் தள்ளப் படுகின்றார்கள். ஆன்மீக வழியில் பாவமன்னிப்பினைப் பெற்றுப் பலர் தமது வாழ்வினை வளம்படுத்தும் செயற்பாட்டை நாம் வரவேற்றுக் கொள்ள வேண்டும். மன்னித்துக் கொள்ளும் தன்மை எங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும். மனதில் ஏற்படும் வலி, பயம் ஆகியவற்றின் சக்தியை நாங்கள் குறைத்து எடை போடக் கூடாது. நாங்கள் சுறு சுறுப்பாக இருப்பதன் மூலம் மனத்தில் ஏற்படும் வலி, பயம் போன்றவற்றால் பாதிப்பு ஏற்படாது தவிர்த்துக் கொள்ளலாம். வின்ஸ்ரன் சேர்ச்சில் கூறிய ஒரு பொன்மொழி : 'நான் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கின்றேன். எனக்குக் கவலைப்படுவதற்கு நேரமில்லை.' (I am too busy. I have no time for worry). இந்தப் பொன்மொழி கூறுவதுபோல் நாங்கள் சுறுசுறுப்பாக இருந்தால் மனதில் வலி, பயம் என்பவை குடிகொள்வதைத் தவிர்க்கலாம். 'KEEP CALM AND CARRY ON' என்ற வாசகம் உலகப் புகழ் பெற்றது. 'வெகுளாமை கொண்டு வேலைகளைச் செய்க' என்பதைத்தான் இந்த வாசகம் கூறுகிறது. இந்த வாசகம் எவ்வாறு இரண்டாவது யுத்தத்தின் பின்னர் உலகப் பிரசித்தி பெற்றது என்ற வரலாற்றைச் சிறிது கவனிப்போம். 1939ம் ஆண்டு கிட்லரும், நாசிப் படையும்



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 17ஆம் பக்கம்


Train to be a ...
**Community Service Worker** With CO-OP



Other Diploma Programs:
**Computerized Accounting**
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
**Network Engineering**
Microsoft | IT Academy Program
**Business Administration**
**Medical Office Assistant**
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome

Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA

OACC PROUD MEMBER ontario association of career colleges

You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179

citi COLLEGE
www.CitiCollege.ca

Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005
Financial Assistance may be available to those who qualify

# NDP எனும் மாலையிலிருந்து மலர்கள் உதிரத் தொடங்கி விட்டனவா?

கடந்த வருடம் மே மாதம் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் லிபரல் கட்சிக்கு அதிர்ச்சியைத் தந்தது. NDP யினுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. கொன்சர் வேற்றிவ் கட்சிக்கு நிம்மதியைத் வருவித்தது. மக்களுக்கு ஒருவிதமான திருப்தியை ஏற்படுத்தியது. நாடாளுமன்றத்தில் கொன்சர் வேற்றிவ் கட்சி பூரண பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்தது. முதல் முறையாக NDP அதிகார பூர்வ எதிர்க்கட்சியானது. லிபரல் முதல் முறையாக மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது. ஜாக் லேய்ரன் எதிர்க்கட்சித் தலைவரானார். மக்களை ஒரு எதிர்பாராத துன்பம் எதிர் நோக்கியது. ஜாக் லேய்ரன் முன்னிற்கும் சுரப்பிப் புற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற துயரச்செய்தி எந்த நேரமும் சோகச் செய்தியாக வரலாம் என்ற மக்கள் எதிர்பார்ப்பினை ஏமாற்றவில்லை. செய்தி வந்தது. வந்த செய்தியுடன் அவரது மரண வாக்கு மூலமும் அற்புதமான ஒரு காவியமாக வந்தது. மக்களின் கண்ணீரை ஒழுக வைத்தது. NDPயினுடைய தேர்தல் வெற்றி என்கிற ரோசா மலர் மாலை ஜாக் லேய்ரன் என்கிற நாரில் லிபிரல் கட்சியின் மேலுள்ள வெறுப்பு என்கிற இழையாலும், குயூபெக்கு வாவின் மீதுள்ள நம்பிக்கையின்மை என்ற இன்னொரு இழையினாலும் வைத்துத் தொடுக்கப்பட்டிருந்தது என்பது உலகறிந்த உண்மை. மையத்தில் இருந்த நார் இற்று விட்டது. இப்போ நார் இற்று விட்டமையால் கட்டப்பட்ட மலர்கள் அந்த இரண்டு இழைகளில் இருந்து வீழ்வதா அல்லது தங்குவதா என்ற நிலைப்பாட்டில் உள்ளன.

தேர்தல் முடிவுகள் தெரியவந்ததும் தேசிய ரீதியாகப் படுதோல்வி கண்ட லிபரல் கட்சியினதும், மாகாண ரீதியாகப் படு



தோல்வி கண்ட குயூபெக்குவா கட்சியினதும் நாடாளுமன்றத் தலைமை மாறிவிட்டது. நல்ல பெயரோடு பல்கலைக்கழகத்துப் பேராசிரியராக விளங்கிய மைக்கேல் இக்நாற்றிவ் அற்ப ஆசையின் விளைவாக அரசியலில் புகுந்து குப்பை கிளறிவிட்டு மீண்டும் பல்கலைக்கழகமே தஞ்சம் என அங்கே அடைக்கலம் புகுந்து விட்டார். ஆகவே அவர் இடத்துக்கு தற்காலிகத் தலைவராக வலிந்து பதவியேற்ற தேர்ந்த அரசியல் வாதியான பொப் ரே காய்களை அழகாக நகர்த்துவதில் கை தேர்ந்தவர். கட்சியைக் கட்டி எழுப்புவேன் என்ற கங்கணத்துடன் கடினமாக உழைக்கிறார். நிரந்தரத் தலைமைக்காக ஆசைப்பட வில்லை. அடுத்த தேர்தலில் கொன்சர் வேற்றிவ் கட்சியினைத் தோற்கடிப்பதற்காக உழைப்பேன் என ஆர்த்தெழுந்துள்ளார். அதற்கான அறுவடைகள் கிடைப்பது போலத் தெரிகின்றன. சென்ற வார இறுதியில் ஒட்டாவா நகரிலே நடைபெற்ற கட்சியினது வருடாந்த சம்மேளனக் கூட்டத்திலே உரையாற்றுகையில் பொப்ரே அவர்கள் லிபரல் கட்சி இத்தனை படுமோசமாகச் சென்ற தேர்தலில் தோல்வியுற்றமைக்கான காரணத்தினைச் சூசகமாகக் கூறியுள்ளனர். 'சென்ற தேர்தலின் போது, ஒரு கட்சியாக நாம் யார், என்பதைப் பல மக்களால் உணர முடியாது போய் விட்டது' என்ற அவர் கூற்று அத்தருணத்திலே கட்சிக்குள்ளே நடைபெற்ற தில்லு முல்லுகளும், தெளிவாக மக்களுக்குக் கட்சியினது கொள்கைகளை எடுத்துச் சொல்ல முடியாத தலைமையுமே தோல்விக்குக் காரணமாயின என்பதைச் சொல்லாமல் சொல்லியுள்ளார்.

குயூபெக்குவாக் கட்சியின் தலைமையை டியூப்சே விட்டுக் கொடுத்த போதும் தலைமை மாற்று குயூபெக் மக்களினது நம்பிக்கையின்மை எனும் மற்றைய இழையில் தேர்தலின் பின் எந்த மாற்றதினையும் காண்பிக்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில்போது குயூபெக் மாகாணத்தில் ஒரு சுனாமியே ஏற்பட்டது எனலாம். அந்த அளவினுக்கு குயூபெக்குவாவுக்கு எதிராக வீம்பு காட்டினர். மாற்று ஆக லேய்ரன் எனும் மாமனிதரின் கட்சி அவர்கள் கண்களுக்குத் தெரிந்தது. மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன், NDP அல்ல ஜாக் லேய்ரனது கட்சி. ஆனால் ஜாக் லேய்ரனுடைய மறைவு குயூபெக்கினில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்துமா என்ற சந்தேகம் அண்மையில் நடந்த ஒரு சங்கதி மூலம் சிந்திக்க வைக்கிறது. Saint Maurice - Champlain என்ற குயூக்கின் தேர்தல் தொகுதியில் NDP கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டியவர் 71 வயதான பெண்மணி Lise St. Denis. அத்தேர்தலில் இரண்டாவதாக வந்த முன்னாள் உறுப்பினர் குயூபெக்குவா கட்சியினைச் சேர்ந்தவரை ஏறக்குறைய 4500 வாக்கு வித்தியாசத்தினால் தோற்கடித்தார். அத்தேர்தலில் லிபரல் கட்சியினால் நான்காவது இடத்தையே பிடிக்க முடிந்தது. சென்ற வாரம் இந்தப் பெண்மணி NDP யிலிருந்து விலகி லிபரல் கட்சியினது உறுப்பினராகியுள்ளார். அந்த அம்மையார் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டதும் வெற்றியீட்டியதும் இதுவே முதல் தடவை. இவர் மற்றவர்கள் பலரைப் போன்று தேர்தல் சமயத்திலேதான் NDP யினுள் தஞ்சமடைந்தவர் அல்ல. நீண்டகாலமாகவே அக்கட்சியினது பெண்கள் பிரிவில் தன்வயத் தொண்டராகச் சேவையாற்றி வந்துள்ளார்.

அப்படியென்றால் அவர் NDP யை விட்டு விலகுவதற்கான காரணம் தான் என்ன? மேற்சபையினை கலைத்துவிட வேண்டும் எனக்கூறும் ஒரு கட்சியின் உறுப்பினர் களுடன் தான் எப்படி நாடாளுமன்றத்தில் அமர்ந்திருக்கலாம் எனக் கூசாமல் கூறும் இப்பெண்மணி தனது கட்சி மாற்றத்திற்கு எத்தனை கேவலமான காரணம் கூறுகிறார். அவர் தன்வயத் தொண்டாற்றிய காலத்திலேயே NDP இதனையே சொல்லி வந்துள்ளது. புதிதாக இதனைச் சொல்ல வில்லை என்பது அவருக்குத் தெரிந்த உண்மை. அவர் வாயில் இருந்து இன்னொரு மகத்தான உண்மை வெளிவந்திருக்கிறது. அவர் தனது விலகலுக்கு அதனைக் காரணமாகச் சொன்னாலும் அதில் எதார்த்தம் இருப்பதைக் காண முடிகிறது. எனது தொகுதி மக்கள் ஜாக் லேய்ரனுக்காகவே எனக்கு வாக்களித்தனர். அவர்தான் இப்போ மறைந்து விட்டாரே ஆகவே கட்சி மாறுவதில் என்ன கோளாறு என்கிறார். இது நியாயமற்ற ஒரு கூற்று என்றாலும் குயூபெக் மாநிலத்தின் NDP நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரின் மனதில் இத்தகைய ஒரு பிராந்தி மனதில் ஏற்பட்டிருக்கலாமோ என்ற சந்தேகம் எளவே செய்கின்றது. இந்த அம்மையாரைப் போலல்லாது ஏனைய உறுப்பினர்களில் பலர்



NDP யின் திடீர்ப் பிரவேசிகள். ஜாக் லேய்ரனுடைய மறைவுக்குப் பின்னர் கட்சியின் தற்காலிக தலைவியாகப் பதவியேற்றவரும் ஜாக் லேய்ரனாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவரும் மொன்றியால் வாசியுமான நிக்கோல் ரேர்மெல் கட்சியை வழி நடத்துதற்கான ஆளுமையற்றவர் போலவே தெரிகிறார். குயூபெக் மாநிலத்திலிருந்து நாடாளுமன்றம் புகுந்த உறுப்பினர்களில் பெரும்பாலோர் நாடாளு மன்றம் பக்கம் தலைவைத்தே படுக்காத பிரகிருதிகள். நாடாளுமன்றத்தின் உள்ளே புகுந்ததும் நாடாளுமன்ற நடைமுறைகளே தெரியாமல் தத்தளித்தவர்கள். அவர்களை வழி நடத்தும் ஆற்றலோ, சாதுரியமோ நிக்கோல் ரேர்மல்லிடம் இல்லை. அதே சமயம் பொப் ரே இத்துறையினில் பழம் தின்று கொட்டை போட்டவர், அசாதாரண பேச்சாற்றல் திறன் உடையவர். அண்மைக் காலத்து மக்கள் கணிப்பினைப் பார்க்கையில் NDPயினுக்கும் லிபரல் கட்சியினுக்கும் மக்கள் அபிமானம் ஓரளவுக்குச் சமனாகவே உள்ளது. இதற்குக் காரணமானவர் பொப் ரே அவர்கள். சளையாத உழைப்பாளியாக உள்ள அவர் ஊடகச் செய்திகளில் தலைகாட்டிய படியே நிற்கிறார். 'Out of sight is out of mind' என்பர். NDP தலைவியின் பெயரையோ குரலையோ எங்கே கேட்கலாம் எனச் சல்லடை போட்டே தேடவேண்டி உள்ளது. காந்தம் பொப் ரே பக்கமாக இழுத்தால் ஆச்சியப்படுவதற்கு இடமில்லை அல்லவா!



பொ. கனகசபாபதி


Ontario Vegetarian Food Bank

Employment Training & Skills Resource Centre

Certified Food Handlers

Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.

*Financial assistance may be available to those who qualify

CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357

Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011

HELP US TO HELP THE HELPLESS!

North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# வெகுளாமை...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

செக்கோசிலாவியா, ஒஸ்ரியா மீது படை எடுத்தன. கிட்லர் போலந்தையும் தாக்கினார். பின்பு பிரான்சு, இங்கிலாந்து நாடுகள் ஜேர்மனி மீது போர் அறிவிப்பு செய்தன. இதனால் இரண்டாவது உலக மகா யுத்தம் தொடங்கியது. இதன் பின்பு இங்கிலாந்து இந்த வாசகத்தை இங்கிலாந்து முடிக்கான படத்துடன் அச்சிட்டு வெளியிட்டன. அன்றில் இருந்து இந்த வாசகம் பிரசித்தி பெற்றது.



எங்கள் மனதில் இருந்து வலி, பயம் என்பவற்றை விரட்டவும் இந்த வாசகம் கூறும் கருத்து பயனுள்ளதாகின்றது.

மனதில் உள்ள வலி, பயம் என்பவற்றை அகற்றிக் கொள்வதற்கு பேராசிரியர் மார்க் ஏ ரீநெக்கி குறிப்பிட்ட சில கருத்துக்களை அறிந்து கொள்வோம். விடயங்களை பெரிது படுத்தாது ஆபத்தான விடயங்களை மதிப்பீடு செய்தல். எதற்காகப் பயப்படுகின்றோம் என்று கவனித்துக் கொண்டு சரியான மதிப்பீட்டுடன் அதனை அகற்ற முயற்சித்தல். எதற்காக, எப்பொழுதெல்லாம் கவலை, பயம் கொள்கின்றோம் எனக் கவனித்தல்: கடந்த காலம், வரும் காலம் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாது இன்று என்ன செய்ய வேண்டும் என்பதில் கவனத்தைச் செலுத்துதல். எங்கள் கட்டுப்பாட்டிற்கு உட்படாத விடயங்களில் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளாது இருத்தல். எங்களால் ஏற்படாத விடயங்களுக்காக நாங்கள் காரணமா எனப் பயப்படுவதைத் தவிர்த்தல். மனதில் எதிர்மறையான விடயங்கள் புகுந்து கொள்வதைத் தவிர்த்தல். மனதிற்கு மகிழ்ச்சி தரும் விடயங்களைச் செய்து கவலை, பயம் மனதில் குடிகொள்ளாது பார்த்துக் கொள்ளுதல். குடும்ப உறுப்பினர்கள், நல்ல நண்பர்களுடன் பேசி விடயங்களை அவ்வப்போது தீர்த்துக் கொள்ளுதல். உங்களால் எதுவும் செய்ய முடியாத விடயங்களை மனதில் போட்டு அலட்டிக் கொள்ளாது விட்டுக் கொள்ளுதல். மூச்சுப் பயிற்சி, தியானம் போன்றவற்றின் மூலம் மனதை சாந்தப்படுத்திக் கொள்ளுதல். நாங்கள் எதிர்கொள்ளும் விடயங்களை எழுதித் திட்டமிட்ட வகையில் அவற்றைப் படிப்படியாக வெற்றி கொள்ள முயற்சித்தல். செய்ய வேண்டியவற்றை மன உறுதியுடன் செய்து வெற்றியீட்டுதல். முன்னோடிகள் என நாங்கள் கருதுபவர்கள் எவ்வாறு வெற்றி கொள்கின்றார்கள் என்பதைக் கவனித்து நாங்களும் அவர்களை விவேகத்துடன் பின்பற்றுதல்.

இவ்வாறான பல வழிமுறைகளை ஆய்வாளர்கள் தெரிவித்து வருகின்றார்கள். இவற்றை நாங்கள் செயல்முறையில் செய்வதனால் மட்டுமே அதற்கான பலனைப் பெற முடியும். 'கவலை கொள்வதால் காரி யங்கள் ஆகாது' என்பதை மனதில் நினைத்துத் தொடர்ச்சியான முயற்சியுடன் செய்ய வேண்டிய விடயங்களைச் செய்து வருவதன் மூலம் மனதில் வலி, பயம் என்பவற்றைக் களைந்து வெகுளாமை கொண்டு வெற்றி கொள்ளலாம். உங்கள் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள்.


வெளிவந்துவிட்டது !


அகணியின்

"நினைவாற்றல் " அறிவியல் நூல்

Memory book ! (200 Pages)

நூலின் உள்ளே

மன வரைபடம்
மூளை உறுப்புக்கள்
மூளையின் தொழிற்பாடு
மூளைப் பயிற்சிகள்
நினைவாற்றல்
நுட்பங்கள்
குறைபாடுகள்
உணவுகள்
மேலும் பல்வேறு
விபரங்களுடன்




கற்போர்
பெற்றோர்
முதியோர்
கற்பிப்போர்
அனைவருக்கும்
பயனுள்ள
ஒரு நூல்

கடந்த ஒரு வருட காலமாக "விளம்பரம்" பத்திரிகையில் வெளிவந்த "நினைவாற்றல்" தொடர்கட்டுரை பல வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க "நினைவாற்றல்" வண்ணப்படங்களுடன் நூல் உருவில் வெளிவந்துள்ளது.

இந்த நூலினை விளம்பரம் அலுவலகத்தில் வாங்கிக்கொள்ளலாம்



TBC Toronto Business College

PSW

PERSONAL SUPPORT WORKER

உடனடி வேலை வாய்ப்பையும் உயர்ந்த ஊதியத்தையும் வாழும் சமூகத்திற்கு சிறந்த சேவையையும் ஆற்றக் கூடிய இலகுவான கற்கை நெறி

Certified by the National Association of Career Colleges.
Certificate recognized by Hospitals, Nursing Homes, Etc.
100% Co-op Placement
26 Weeks Program



CLASSES STARTING SOON

SECOND CAREER

- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்று உங்கள் எதிர் காலம் மிளிர்வதைக் காண்பீர்கள்.

Tuition Fees, Books, Living Expenses, Daycare, & Transportation up to $28,000 Free Funding.

ODSP, WSIB Recepients & New Immigrants Welcome

COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
26 WEEKS



JOB OPPORTUNITIES
- Accounts Clerk
- Accounts Receivable
- Accounts Payable
- Bookkeeper
- Payroll Clerk

MEDICAL OFFICE ADMINISTRATOR DIPLOMA
32 WEEKS



- Computer Skills
- Office Systems
- Medical Terminology
- Medical Billing
- MO Adminstrative Procedure
- Co-op Available

Come Visit our Facility and Sit in One of Our Classes. Call Now to Make an Appointment!

Ample Free Parking
Small Class Size

4465 Sheppard Avenue East, Suite 208
Toronto (Sheppard & Brimley)
info@tbcollege.com www.tbcollege.com

416-291-5155

Registered as a Private Career College under the the Private Career College Act 2005

# என் கவித்துவத்தை திறந்தவர்கள் இளையராஜாவும் ஏ.ஆர் ரஹமானும்

## நேர்காணல்: கவிஞர் வைரமுத்து

‘ஒரு பொன்மாலைப் பொழுதின்’ மூலம் தமிழ் திரையிசையின் பாதையை மாற்றியமைத்தவர் வைரமுத்து. அதன்பிறகு தொடங்கி இன்றைக்கு வரைக்குமான தமிழ் சினிமா சரித்திரத்தின் அழிக்க முடியாத பக்கமாக திகழ்பவர். கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்களின் அழகியல் உணர்ச்சியையும் அந்தரங்க உணர்ச்சியையும் வெகு ஆழமாகத் தொட்டுக் கடந்து செல்பவை வைரமுத்துவின் வரிகள். அவை தமிழ் திரையிசைப் பாடல்களுக்கு நவீன கவிதையின் வீச்சினை உக்கிரமாக கொண்டு வந்து சேர்த்தன. காலத்தால் வெல்ல முடியாத கவித்துவத்தின் ஊற்றை இசைத் தமிழாக மாற்றிய வைரமுத்து, கடந்த வருடம் ஆறாவது முறையாக இந்திய அரசின் திரைப்படப் பாடலுக்கான தேசிய விருதினைப் பெற்றார். இலக்கியத்துக்காக வழங்கப்படும் சாகித்ய அகாடமி விருதினையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது பெசன்ட் நகர் வீட்டில் இந்த உரையாடல் நிகழ்ந்த தருணத்தில் ஒரு நீண்ட கவித்துவப் பயணத்தைக் கடந்து வந்த கலைஞனின் போராட்டங்களும் கனவுகளும் கண்முன் விரிகின்றன. தலைமுறைகளைத் தாண்டித் தன் புதுமைகளை இழக்காத ஒரு மாபெரும் கலைஞனின் பயணம் இது.

இதுவரை ஆறு முறை தேசிய விருது வாங்கியுள்ளீர்கள். கடைசியாக விருது வாங்கிய போது இருந்த உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள முடியுமா?

“இந்தியாவின் தேசிய மொழிகள் எல்லாவற்றுக்குமே ஓர் இலக்கியச் செழுமை இருக்கிறது. தமிழுக்குக் கூடுதலாக இருக்கிறது என்று சொல்லலாம். இந்திய அளவில் இன்றைய திரைப்பாட்டுத் துறையில் என்று எடுத்துக்கொண்டால் இந்தியாவிலேயே தமிழ்மொழிதான் முன்னணியில் இருக்கிறது. அதனால்தான் இந்த ஆறாவது விருது ஒரு குறிப்பிட்ட கவனம் பெறுகிறது. இந்த ஆறாவது விருதினால் நான் பெருமையடைகிறேன் என்று சொல்லமுடியாது. விருது என்பது ஒரு சந்தர்ப்பம். அது ஒரு நிகழ்வு. நம்முடைய நீண்ட பயணத்தில் நாம் பணிபுரிந்துகொண்டே போகிறோம். விருது கிடைக்கும் என்று எதிர்பார்த்து எந்தப் பணியையும் செய்வதில்லை. ஒரு மொழியின் பாடலுக்கு அந்த ஆண்டு விருது கிடைத்திருக்கிறது என்றால், அந்த ஆண்டில் வெளிவந்த மற்றமொழிப் பாடல்கள் தகுதிக்குறைவானவை என்று பொருள்கொள்ள முடியாது. அந்த விருதுக் குழுவினர் அந்தப் பாடலைச் சிறந்தது என்று கருதியிருக்கிறார்கள் என்றே சொல்வேன். பொதுவாக விருதுகளை நான் இப்படித்தான் பார்க்கிறேன். அதேசமயம் மற்ற விருதுகளைக் காட்டிலும் இந்தவிருதில் பெருமைக்குரிய விசயமாக நான் கருதுவது, ஆறுமுறை தேசிய விருது பெற்ற தமிழ்மொழி இந்தியத் திரையுலகில் முன்னெடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது என்பதுதான்.”

விருது என்பது ஒரு நிகழ்வு என்கிறீர்கள். ஆனால், முதன்முறை விருது வாங்கும்போதும் இதே உணர்வுடன் இருந்தீர்களா?



“முதன்முறை விருது செய்தியைக் கேட்டபோது ஒரு நெகிழ்வு இருந்தது. அந்த உணர்ச்சியை நான் மறைக்க விரும்பவில்லை. ஒரு ஒலிப்பதிவை முடித்துவிட்டு நான் வீட்டுக்கு வந்தேன். அப்போது என் மனைவி சொன்னார்: ‘முதல் மரியாதை படத்துக்காக உங்களுக்குத் தேசிய விருது கிடைத்திருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன’ என்று. தேசிய விருது என்று ஒன்றிருப்பதையே அறியாத காலம் அது. அப்போது அதைக் கேட்டவுடன் நெகிழ்ச்சியாக இருந்தது. அடுத்தடுத்த விருதுகள் கிடைத்தபோது அதை ஒரு சம்பவமாக, செய்தியாக, விளைவாக எடுத்துக்கொள்ளப் பழகிவிட்டேன். இப்போதும் கூட தமிழ் மொழிக்குக் கூடுதல் பெருமை கிடைக்கிறது என்று நான் கருதுவதால் இந்த விருதைக் குறிப்பிடத்தகுந்த விருது என்று சொல்கிறேன்.”

ஒரு கவிஞனாக நீங்கள் கடந்து வந்த பாதையில் நீங்கள் அடைந்ததும் இழந்ததும் எவை?

“கம்பன், தான் வாழ்ந்த சமூகத்தில் பெற்ற அறிமுகத்தைவிட, பாரதி, தான் வாழ்ந்த காலத்தில் பெற்ற அறிமுகத்தைவிட, கண்ணதாசன், தான் வாழ்ந்த காலத்தில் பெற்ற அறிமுகத்தைவிட அதிக அறிமுகத்தை தமிழ் சமூகத்தில் நான் பெற்றிருப்பதாக நினைக்கிறேன். தமிழ்ச் சமுதாயத்தை ஒட்டுமொத்தமாக ஈட்டியிருக்கிறேன் என்றே சொல்லலாம். இது பெரிய வரம். ஒரு தமிழ் எழுத்தாளன் தான் வாழுகிற காலத்திலேயே இத்தனை பெரிய மக்கள் கூட்டத்தை அடைந்திருப்பது எனக்கு மட்டும் கிடைத்த வாய்ப்பு. எனக்கு முன்னிருந்தவர்களுக்கு இந்த வாய்ப்பு இல்லை என்பதற்குக் காரணம், அப்போது இவ்வளவு ஜனத்தொகை இல்லை, இவ்வளவு ஊடகங்கள் இல்லை. ஒன்றை நீங்கள் கவனமாக கேட்டுக்கொள்ள வேண்டும். புகழ் என்பது வேறு, அறிமுகம் என்பது வேறு. நான் புகழடைந்ததாகச் சொல்லவில்லை, அறிமுகம் அடைந்திருப்பதாகச் சொல்கிறேன். என் முன்னோர்களுக்கெல்லாம் இல்லாத வாய்ப்பு எனக்குக் கிடைக்கக் காரணம் மக்கள் தொகையும் ஊடகப் பெருக்கமும்தான் என்பதையும் நான் கவனத்தில் கொண்டிருக்கிறேன். எனவே, நான் தலைக்கனத்தில் பேசுவதாக நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது. ‘முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் ஒப்பில்லாத சமுதாயம்’ என்று பாரதி பாடியபோது தமிழ் மக்களின் தொகை ஒன்றரைக் கோடி. இப்போது அதுவே உலகம் முழுவதும் எடுத்துப் பார்த்தால் ஒன்பதரைக் கோடியாக உயர்ந்திருக்கிறது. இவ்வளவு மக்களிடமும் சென்று சேர்ந்திருக்கிறேன் என்பது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பு தானே. என்னை மக்களிடம் பெருமளவில் கொண்டு சேர்த்ததில் ஊடகங்களுக்குப் பெரும்பங்கு இருக்கிறது. அதற்காக எல்லோருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**சந்திப்பு: அன்பன்**

இழந்தது என்னவென்றால், என் தனிப்பட்ட வாழ்க்கையின் ரசனைப் பகுதியை நான் இழந்திருக்கிறேன். சினிமாவுக்கு வந்தபிறகு நான் எனக்காக வாழ்ந்தது மிகமிகக் கொஞ்சம். இந்தத் தொழிலுக்கு நான் வந்ததும் இது என்னைப் பிடித்துக்கொண்டது. நானும் அதைப் பிடித்துக்கொண்டேன். இந்தத் தொழில் என்னை உறங்கவிடவில்லை. இதனால் நான் சொந்த வாழ்க்கையை இழந்திருக்கிறேன். நிலவைப் பார்த்து ரசிக்கவேண்டும் என்கிற என் ஆசை பள்ளி நாட்களிலேயே முடிந்து விட்டது. நட்சத்திரங்களோடு பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்கிற என் ஆசையும் அப்போதே கருகிப்போய் விட்டது. என் பெற்றோரோடு, பிள்ளைகளோடு, உறவுகளோடான தனிப்பட்ட வாழ்க்கை என்பது மிகவும் சுருங்கிவிட்டது. நேரம் குறிக்காமல் என்னை அவர்கள் பார்ப்பதற்கோ, என்னோடு பேசுவதற்கோ இயலாது என்ற வாழ்க்கைக்கு நான் தள்ளப்பட்டுவிட்டேன். இந்தத் துறையின் மீதான வெறி என்னை இந்த இடத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. கொஞ்சம் நெகிழவிட்டால் இந்த இடத்தை இழந்துவிடுவோமோ என்கிற ‘இன்செக்யூரிட்டி’ இருந்தது. இப்போதும் இருக்கிறது. நீங்கள் நினைத்தால் இதைத் தவிர்த்திருக்கலாமே என்று கேட்கலாம். அது வேறு விசயம். மொத்தத்தில் நான் அடைந்தது தமிழ் உலகத்தை. இழந்தது தனி உலகத்தை.”

தொடர்ச்சி 31ஆம் பக்கம்

**பிரம்மா குமாரிகள் உலக ஆன்மீக சங்கம்**

‘இராஜ யோக தியானம்’

அன்பான ஆத்மாக்களே!!!

மானிட பிறவியாகிய நாங்கள் நல்ல வாழ்க்கையை அனுபவிக்க வேண்டாமா? சிறந்த சமுதாயமாக வாழ வேண்டாமா?

பிரம்மா குமாரிகள் உலக ஆன்மீக சங்கமானது இராஜ யோக தியானத்தை உலகளாவிய ரீதியில் இலவசமாக கற்பித்து வருகிறார்கள். இம் முயற்சி உலக சமாதானத்திற்காகவும் மானிடப் பிறவிகளின் முன்னேற்றத்திற்காகவும் விடா முயற்சியாக செய்து வருகிறார்கள். ஆகையால் எங்கள் முயற்சியால் இந்த இராஜ யோக தியானத்தை கற்று சகல சக்திகளையும் பெற்று சிறந்த வாழ்க்கையை அனுபவிப்பதுமல்லாமல் உலக மாற்றத்தை கொண்டு வருவோமாக. (நான் திருந்த உலகமே மாறும்)


பிரம்மா குமாரிகள் நிறுவனமானது 1937 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிறுவனமானது ஜாதி மத பேதமற்றதாகும். சிறியோர் முதல் பெரியோர் வரை பங்கு கொண்டு கற்கலாம். (வயதெல்லை இல்லை)

வாருங்கள் நிஜத்தை அறியுங்கள்!!
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்: ஆங்கிலம் - 416.537.3034
தமிழ் - 416.431.4986 Fax - 416.537.1319
E.mail - Torontoca.bkwsh.org web - www.bkwsu.org

இராஜயோகத்தின் மூலம் மனிதனும் தெய்வமாகலாம். இராஜயோகமென்றால் பரமாத்மாவுக்கும் ஆத்மாவுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளும் இணைப்பாகும். இராஜயோகத்தை யார் சிறந்த முறையில் முழுமையாக கற்கின்றார்களோ அவர்களுக்கே மூன்றாம் கண்ணாகிய ஞானக்கண் திறக்கப்படுகின்றது.


மூன்றாம் கண்ணாகிய ஞானக்கண்ணை பெறுபவர்கள் சகல சக்திகளையும் பெற்று சந்தோஷமான சிறந்த வாழ்க்கையை அனுபவிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

# Success is always about being the first




## Restaurant/Retail units for sale

*So hurry, call our knowledgeable agents today to get all the details about this exciting opportunity. There is only a very limited amount of units available. Once they are gone, the doors to this opportunity will also be closed for good!*



THE SHOPPES® MORNINGSIDE HEIGHTS

Call Now for Details:

**416 321 6969**

# பூலோக சொர்க்கம் - வயநாடு

## கேரளா சுற்றுலா இடங்கள் - 4



ஆங்காங்கு நீர்வீழ்ச்சிகள், காட்டாறுகள் பரந்து விரிந்து கிடக்கும் தேயிலைத் தோட்டங்களும் அடர்ந்த காடுகளுமாக மாறி மாறி வரும் பச்சைப் பசேல் காட்சிகள், நம்மைத் தழுவிச் செல்லும் மேகக் கூட்டம், சாதாரணமாகச் சுற்றித் திரியும் அபூர்வமான வனவிலங்குகள், மரங்களுக்கு மேலே கட்டப்பட்ட மர வீடுகள்... என கனவில் வரும் ஒரு இடம் போல் இருக்கிறது வயநாடு. இயற்கை காதலர்களுக்கும் வனவிலங்கு ஆர்வலர்களுக்கும் உகுந்த இடம். ஆலப்புழாவுக்கு அடுத்த நம் கேரளா பயணம்! 'இயற்கையால் ஆசீர்வதிக்கப்பட்ட பூமி' என்று கேரளாவைச் சொல்கிறார்களே, அது வெறும் பேச்சுக்கு இல்லை, உண்மையிலேயே பூலோகத்தின் சொர்க்கமாகத்தான் கேரளா இருக்கிறது என்பதை வயநாட்டில் நீங்கள் உணர்வீர்கள். அப்படி ஓர் அழகு!

வாசனைத் திரவியங்களான, ஏலம், மிளகு, இலவங்கத் தோட்டங்களுக்கும் பாரம்பரியமான கலை வடிவங்களுக்கும், மலை வாசஸ்தலத்துக்கும் புகழ்பெற்றது, வயநாடு. மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள முக்கியமான மலையக மாவட்டம் இது. கேரளாவின் வடகிழக்குப் பகுதியில், 700 முதல் 2100 மீட்டர்கள் உயரத்தில் மலை மீது இம்மாவட்டம் அமைந்துள்ளது. கேரளாவில் வற்றாத அழகு கொட்டிக் கிடக்கும் இம்மாவட்டம், தமிழக மற்றும் கர்நாடக மாநில சுற்றுலாத் தலங்களான ஊட்டிக்கும் மைசூருக்கும் அருகே அமைந்துள்ளது இன்னொரு சிறப்பு.

முற்காலத்தில் 'மாயாசேத்திரம்' என இப்பகுதி அழைக்கப்பட்டதாக குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. இது மருவிதான் வயநாடு ஆனதாகச் சிலர் கூறுகின்றனர். ஆனால், உள்ளூர் மக்கள், 'வயல்கள் நிறைந்த நாடு என்னும் பொருளிலேயே வயநாடு' என்னும் பெயர் ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள். கோழிக்கோடு, கண்ணூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து சில பகுதிகள் பிரித்தெடுக்கப்பட்டு, 1980ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதி கேரளாவின் 12ஆவது மாவட்டமாக வயநாடு மாவட்டம் உருவாக்கப்பட்டது. சுல்தான் பத்தேரி, கல்பேட்டா போன்றவை இங்குள்ள சின்ன நகரங்கள். மாவட்டத்தின் தலைநகரமாக கல்பற்றா உள்ளது. ஒரு காலத்தில் கல்பற்றா சமண மதக் கோட்டையாக இருந்தது. கல்பற்றாவிற்கு அருகில், புளியார் மலாவிலிருக்கும் புகழ்பெற்ற அனந்தநாதசுவாமி சமண பள்ளி இன்றும் உள்ளது. மாவட்டத்தின் முக்கால்வாசி இடம் வனப்பகுதிதான் என்பதால் இங்கு எங்கு திரும்பினாலும் பச்சைப் பசேல்தான். ஊட்டியை விட உயரம் குறைவு என்பதால், ஊட்டி குளிர் இருக்காது. ஆனாலும் ஊட்டி, கொடைக்கானல் பார்த்து, பார்த்து சலித்தவர்களுக்கு வயநாடுதான் அடுத்த சிறந்த தேர்வாக இருக்கும்.

வயநாட்டில் கேரளாவின் பூர்வீக மக்களான பல பழங்குடியினர் இப்பொழுதும் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பகுதியின் ஒரு பிரதேசத்தை ஆண்ட பழசிராஜா என்னும் மன்னர் பிரிட்டிஷாருடன் நிகழ்த்திய போர், சமீபத்தில் வெளியான 'பழசிராஜா' படம் மூலமாக அனைவரும் அறிந்த விஷயம். சுதந்திரத்துக்கு முன்னர் ஆங்கிலேய அரசுக்கு எதிராக பழசிராஜா நிகழ்த்திய யுத்தம் போலவே, சுதந்திரத்துக்கு பிந்தைய இந்திய அரசுக்கு எதிராக நிகழ்ந்த ஒரு புரட்சிக்காகவும் இப்பகுதி பிரசித்தமானது. 1960களில் மேற்கு வங்காளத்தில் வெடித்தெழுந்த நக்சல்பாரி இயக்கம், தென் இந்தியாவில் முதலில் உதயமானது இங்கேதான். 1970களின் தொடக்கத்தில் இம்மாவட்டம் நக்சல்பாரிக-ளின் முக்கிய தளமாக இருந்தது. அதன்பிறகு, இங்கிருந்துதான் நக்சல் இயக்கம் இந்தியா முழுவதும் பரவியது குறிப்பிடத்தக்கது. வயநாட்டு ஆதிவாசிகளிடையே புதிய அரசியல் விழிப்புணர்ச்சி எழுந்தும், அதற்குக் காரணமான நக்சல்பாரி இயக்கத் தலைவர் வர்க்கீஸ், காவல்துறை போலி என்கவுண்டரில் கொல்லப்பட்டதும் முடிந்து 30 ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆனால், இன்றும் கேரளாவில் அதுபற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது தொடர்பான வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன.

பேய்க் கதைகளுக்கும் மாந்தீரிகங்களுக்கும் கேரளாவில் என்றும் குறை கிடையாது. வயநாட்டுக்கும் ஒரு பேய்க் கதை இருக்கிறது. கரித்தண்டன் என்ற ஒரு தொல்குடி இளைஞன் வயநாடு மலைப்பகுதியில் வாழ்ந்து வந்தானாம். ஆங்கிலேயர்கள் இப்பகுதியை கண்டுபிடித்து இங்கு வந்த புதிதில், ஒரு ஆங்கிலப் பொறியாளர் வயநாட்டின் சிக்கலான வழியை காட்டச்சொல்லி கரித்தண்டனை அழைத்துச் சென்றிருக்கிறார். வெகுளியான அந்தத் பழங்குடி இளைஞனும் வழிகாட்டிக்கொண்டு செல்கிறான். கரித்தண்டனுக்கும் அவனது மக்களுக்கும் அக்காட்டுப் பகுதி பழக்கப்பட்டதுதான், பல்லாண்டுகளாக பழங்குடி மக்கள் வாழ்ந்து வரும் பூமிதான் என்றாலும், வெளியுலகுக்கு வயநாடு பற்றி தெரியாது. எனவே, வயநாட்டுக் காட்டின் அந்த வழியை முதன்முதலில் கண்டுபிடித்த பெருமை தன்னுடையதாக இருக்கவேண்டும் என்ற ஆசை அந்த ஆங்கிலப் பொறியாளருக்கு வருகிறது. எனவே, பின்னால் நடந்து சென்ற பொறியாளர், முன்னால் வழிகாட்டியபடி சென்று கொண்டிருந்த அப்பாவி காட்டு இளைஞனை எதிர்பாராமல் கொலை செய்கிறார். அந்த காட்டுக் குழந்தை மறைந்தாலும் அவனுடைய ஆவி, அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறது என நம்பப்படுகிறது. "அது இப்போதும் சுற்றுலா பயணிகள் உட்பட அவ்வழியே வருபவர்களை பிடித்துக் கொள்கிறது. எனவே, இருட்டிய பிறகு காட்டுக்குள் தனியாக செல்ல வேண்டாம்" என உள்ளூர்காரர்கள் பயம்காட்டுகிறார்கள்!

பார்த்து பார்த்து ரசிப்பதற்கு வயநாட்டில் ஏராளமான இடங்கள் உள்ளன. எடக்கல் குகைகள், பூக்காட் ஏரி, பானசுரசாகர் அணைக்கட்டு, முத்துங்கா வனவிலங்கு சரணாலயம், சீயம்பம் நீர்வீழ்ச்சி, திருநள்ளி கோவில், தோல்பெட்டி வனவிலங்கு சரணாலயம், சேச்சிப்பாரா நீர்வீழ்ச்சி, முனியறா, வயநாடு ஹெரிடேஜ் மியூசியம், கொட்டமுண்டா கிளாஸ் டெம்பிள், கோரோம் மசூதி, திருநெல்லி கோவில், பழசிராஜா கல்லறை, பள்ளிக்குன்னு சர்ச், பைங்கட்டேரி அக்ரகாரம், பேகர் வனவிலங்கு சரணாலயம், நாகர்ஹோல் வனவிலங்கு சரணாலயம், செம்ப்ரா உச்சி, ஊராவு, கரலோட் ஏரி, சிப்பாரா அருவி, செண்டிரல் ராக் அருவி, மின்முட்டி அருவி, இருளம் சீதாதேவி கோயில், லக்கிடி, குருவா தீவு, மரவீடுகள்... இவ்வளவு இடங்கள் உள்ளதால், காலையில் வந்துவிட்டு மாலையில் திரும்புவது போல் வந்து செல்வது நன்றாக இருக்காது. ஒன்றிரண்டு தினங்கள் தங்கி வயநாட்டை ரசிப்பதுதான் சிறந்தது.

முதலில் பானசுரசாகர் அணைக்கட்டு. இந்த நீர்மின்திட்டம் ஒரு குறுமின்திட்டம் என்ற போதிலும் இதன் அணைக்கட்டு இந்திய அளவில் முதலாவதும் ஆசியாவிலேயே இரண்டாவதுமாகும் என்பதுதான் இதன் சிறப்பு. பிரம்மாண்டமான தோற்றத்தில் இங்கு எழும்பியுள்ள மண் அணை, பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் உள்ளது. அணைக்கு செல்லும் பாதையில் தனியார் வாகனங்களை அனுமதிப்பதில்லை. அவர்களுடைய ஜீப்பில்தான் ஏற்றி செல்கிறார்கள். அணையை கட்டும்போது உபயோகித்த புல்டோசர் போன்ற பொருட்களை மலையிலிருந்து கீழே எடுத்து செல்ல முடியாததால் அப்படியே விட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். அவற்றை இப்போதும் ஆங்காங்கே மலையிலேயே பார்க்கலாம். மின் விசை படகுகளில் நம்மை அழைத்து சென்று அணைக்குள் தனித் தனி தீவுகளாக இருக்கும் பாறைகளை காட்டுகிறார்கள். மிகவும் அழகாகவும் சற்று பயமாகவும் இருக்கும்.

## - வழிப்போக்கன் -

பள்ளிக்குன்னு சர்ச் லூர்துமாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சர்ச். பிரான்ஸ் நாட்டு இறையியல் குழுவைச் சேர்ந்த பாதிரியார் ஜெ.ஃப்ரின், முன்முயற்சி எடுத்து 1905ஆம் ஆண்டில் இந்த சர்ச்சைக் கட்டினார். இந்துக் கோயில்களின் சில வழிபாட்டு முறைகளைப் போலவே இந்த சர்ச்சிலும் நடக்கின்றன என்பது இதன் தனித்துவம்.

பைங்கட்டேரி அக்ரகாரம், கேரளத்தில் உள்ள தமிழ்நாட்டு பிராமணர்களின் ஒரு குடியிருப்பு. தமிழ்நாட்டில் பிராமணர்கள் குடியிருப்பு இரண்டு பக்கமும் வரிசையாக வீடுகள் அமைய நடுவே அகலமான சாலை வசதியுடன் இருப்பதால் 'ரெட்டைச் சிறகு அக்ரகாரம்' என்று கூறுவது வழக்கம். அதைப் போன்ற அக்ரகாரம் தான் இது. இங்குள்ள பிராமணர்களின் முன்னோர், கோட்டயம் அரண்மனை சமையலுக்காக தஞ்சாவூரில் இருந்து இங்கு குடியேறியவர்கள் என்று கூறுகிறார்கள்.

**தொடர்ச்சி 38ஆம் பக்கம்**











Offer available to new Rogers Digital TV customers for a limited time and subject to change without notice. Basic Cable and Digital/HD Box required to receive Digital/HD programming. Channel availability may vary by region. Taxes extra. **1** Savings of $462.72 over two years is based on Digital Basic regular monthly service fee of $40.57/mo. as compared to $21.29/mo. promotional rate for 2 years (including CRTC Local Programming Improvement Fund Fee, monthly Digital Service Fee and standard digital box rental). Effective March 1, 2012, savings of $462.72 over two years is based on Digital Basic regular monthly service fee of $42.60/mo. as compared to $23.32/mo. promotional rate for 2 years (including CRTC Local Programming Improvement Fund Fee, monthly Digital Service Fee and standard digital box rental). **2** Includes where applicable, CRTC Local Programming Improvement Fund Fee of 1.5% of the recurring TV monthly service fee. **3** Includes monthly Digital Service Fee of $2.99 and SD box rental of $4.49 and, where applicable, CRTC Local Programming Improvement Fund Fee of 1.5% of the recurring TV monthly service fee. Regular monthly rates apply after promotional period. 2-year term required for Digital TV. Early Cancellation Fee applies. Monthly service fee varies by channel subscription. **4** Charges apply to some On Demand programming content. Rogers On Demand Online only available in Canada with an Internet connection. © 2012

# வித்தியாசமானவர்களின் பொங்கல் விழா

சென்றவாரம் திங்கட்கிழமை சாளரம் என்ற அமைப்பு பொங்கல் விழா நடத்துவதாகவும் என்னையும் அதில் பங்குபற்று மாறும் வேண்டிற்று. இது சாளரத்தினைச் சார்ந்த உறுப்பினருக்கு மாத்திரமே நடைபெற்ற விழா என்ற போதிலும் அங்கே சென்ற ஆண்டினிலே உரையாற்றியோரையும் அழைத்திருந்த மையால் என்னுடன் நண்பர் கவிஞர் நவமும், வைத்திய கலாநிதி சூரியபாலாவும், கலாநிதி சுல்பிகாவும் வந்திருந்தனர்.

இந்த அமைப்பு மனதால் பாதிக்கப் பட்டோரினை, நாமும் மனிதர்களே, நம்மால் யாவும் முடியும் என மார்தட்டவைக்கும் அளவினுக்கு அவர்களுக்கு வேண்டிய மன உற்சாகத்தையும், துணிவினையும், தன்நம்பிக்கையினையும் விருத்தி செய்ய வைக்கும் நோக்கிலே CRCTயிலே சமூகநல ஊழியராகச் செயற்படும் கலாநிதி பார்வதி கந்தசாமி மற்றும் 'Pathways' பணியாளர் ரவி பரமானந்தன் ஆகியவர்களின் கூட்டு முயற்சியினால் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் ஒரு சிலருடன் தொடங்கிய இந்த அமைப்பின் செயற்பாடுகளின் தனித்துவத்தினையும், அனுகூலங்களை யும் பற்றிக் கேள்வியுற்றோர் இங்கே தஞ்சமடைய தற்பொழுது அதன் அங்கத்துவர் எண்ணிக்கை 25க்கும் மேற்பட்டுள்ளது. விழாவின் ஆரம்பத்தில் அமைப்பின் உறுப்பினர்களின் கலை நிகழ்ச்சிகள் இரண்டு நடைபெற்றன. நடன ஆசிரியை திருமதி ரஜனி செல்வப்பிரகாசம் அவர்களினால் பயிற்சி அளிக்கப்பட்டு கரகாட்டம் மற்றும் கோலாட்டம் போன்ற கிராமிய நடனங்களை அமைப்பின் உறுப்பினர்கள் பலர் ஆடி ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றனர். நடன ஆசிரியை திருமதி ரஜனி இந்த அமைப்பின் உறுப்பினர்களுக்கு வாராவாரம் பயற்சி கொடுக்கிறார். அவர்களின் மன உளைச்சலைப் போக்குதற்கும் தன்நம்பிக்கையை வளர்ப்பதற்கும் இதைவிடச் சிறந்த ஔடதம் வேறு ஏதும் இருக்கமுடியமா? ரஜனி அவர்கள் இந்த இரு கிராமிய நடனங்களையும் நெறிப்படுத்தியது மாத்திரமல்லாமல் அவர்களுடன் சேர்ந்து நடனத்தில் பங்கு பற்றி அவர்களை ஊக்குவித்தார். பாராட்டுக்கள்.

பொங்கல் விழாவினை ஒட்டி சாளரம், சிறிய அளவினிலே 'சாளரம்' என்ற பெயரிலேயே பொங்கல் சிறப்பு இதழ் ஒன்றினையும் வெளியிட்டிருந்தார்கள். முதலில் சாளரம் சஞ்சிகை வெளியிடப் பட்டதன் நோக்கம், அமைப்பு இதுவரை சாதித்தவை பற்றி விளக்கி அங்கத்தவர் ஒருவர் அறிமுகம் செய்து வைத்தார். சஞ்சிகை பற்றிய எனது குறிப்புக்களை ஒரு சில மணித்துளிகளில் எடுத்துரைக்குமாறு கேட்டிருந்தனர்.




அட்டைப் படமே என்னை மிகவும் கவர்ந்திருந்தது. பொங்கலை நினைவூட்டுவதாயும், சாளரத்தின் நோக்கத்தினைப் புலப்படுத்துவதாயும் ஓவியத்தினை வரைந்திருந்தார் ஓவியர். அற்புதமான ஆக்கம்.

சாளரத்திலே மொத்தமாகப் 16 ஆக்கங்கள் காணப்பட்டன. அவற்றிலே நான்கு புதுக்கவிதைகள், Pathways பற்றிய விபரமான கட்டுரை ஒன்று, வாழைப்பழம் பற்றிய போஷாக்கு விளக்கம், வருமான வரிபற்றிய புதிய தகவல்கள் மற்றும் சமையற்குறிப்புகள் தவிர 6 புனைகதைகள் இருந்தன. புதுக் கவிதைகளிலே 'ஆக்குவோம் காப்போம்' எனும் கவிதை யில் சாளரத்தின் உறுப்பினர்கள் தம்மால் எது எது சாத்தியம் என்பதை உரமாக உரத்துச் சொல்வதாக அமைந்துள்ளது. வாசிக்கும் பொழுது எவருக்கும் உயிர்ப்பினைத் தரக் கூடியதாக அமைகிறது. இன்னுமொரு கவிதை. எழுதப்பட்ட மிகவும் தரமான கவிதை. 'கூட்டுக்குள்ளே ஒரு சுவாசம்' உளப் பாதிப்பினுக்கு உட்பட்டோரின் மன நிலையினைத் தத்துரூபமாக விளக்கு வதாக அக்கவிதை அமைந்துள்ளது. தாமாகவே தமக்கு அமைத்த கூட்டுக்குள்ளே வாழ்ந்து அல்லல் படுவோர் அக்கூட்டினை உடைத்து சுதந்திர ஜீவிகளாக வாழ வேண்டும் என்பதைக் கவிதை உணர்த்துகிறது.

இந்தச் சஞ்சிகையிலே காணப்படுகின்ற ஆக்கங்களை எழுதியவர்களில் அனைவருக்கும் இதுவே முதல் பிரசவம் என்பது தெரிகிறது. ஆனால் அவர்களின் சாளரத்தில் கொடுத்த ஊக்கத்தாலும் நெறிப்படுத்துகையாலும் இந்த ஆற்றல்களைப் பெற்றார்களா அல்லது இயற்கையாகவே அவர்களிடத்திருந்த எழுது திறன் புதைக்கட்டிருந்ததை கிண்டி வெளிக்கொணர CRCTயும் Pathways சும் உதவினவா? எப்படியாயினும் இவர்களை வழிப்படுத்தி அவர்களின் ஆக்கத் திறனை உலகறிய வைத்த பார்வதி கந்தசாமியும், ரவி பரமானந்தனும் பாராட்டுக்குரியவர்கள். கவிஞர் நவம் தொடர்ந்து 5 வாரங்கள் கவிதை பற்றிய வகுப்பு சாளரத்தில் நடத்தினார் என அறிகிறேன். அவரது உழைப்பு வீண்போகவில்லை என்பது அவருக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாக இருக்கும்.

திக்குத் தெரியாது நின்றேன்
தேடல் புரியாது உழன்றேன்
----------------
சாதலில் பலமுறை பலமுறை
தோல்வியைத்தானே சந்தித்தேன்
வாழ்வதோ எப்படி எப்படி

கூட்டை உடைத்தேன்
கூடு கலைந்தது
தேடலில் கண்டேன்
சுதந்திரக் காற்றை!

'கூட்டுக்குள்ளே ஒரு சுவாசம்' கவியையில் ஒரு பகுதியை காட்டியுள்ளேன். ஆம் வாழ்வது எப்படி எப்படி என வருந்தியோருக்கு அக்கூட்டை உடைத்து இப்படி வாழ முடியும் எனக் காட்டிய சாளரத்திற்கும் கலாநிதி பார்வதி கந்தசாமிக்கும் ரவி பரந்தாமனுக்கும் பாராட்டுக்கள். திக்குத் தெரியாத காட்டில் இன்னும் பலர் திசை தெரியாது உழன்று கொண்டுள்ளனர். அவர்களையும் தேடிப்பிடித்து வாழ வையுங்கள்.



**பொ. கனகசபாபதி**

**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 29, Mississauga - **905.712.2666**



**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# தொழில்நுட்பம் - வருங்கால தொலைநோக்கு

## இன்றில் இருந்து 2500 வருடம் வரை என்ன நடக்கும்?

## ஒரு அறிவுபூர்வமான தொழில்நுட்ப அலசல்:

பகுதி 03

**இது ஆங்கில மூலத்தின் சுருங்கிய தமிழ் வடிவம்**

கடந்த இதழ் தொடர்ச்சி...

### 3. சுற்றாடல் - இயற்கை - உணவு - வீடமைப்பு

வருடம் - 0000 -2010 - தற்போதைய பிரச்சினை

உலகெங்கும் ஏற்பட்ட பொருளாதாரப் புரட்சி மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உச்சிக்குக் கொண்டுபோன அதே நேரத்தில் நமது சுற்றாடலை மிகவும் சீரழித்து விட்டது. ஆனால், நான் காணும் எதிர்காலம், இத்தகைய அழிவுகளெல்லாம் இல்லாத முற்றிலும் மாறுபட்ட வேறு ஒரு உலகத்தையே கொண்டிருக்கும். சுற்றாடல் மாசுபடுகின்றதே என்று அழுது வடிவது எல்லாம் இன்னும் கொஞ்சக் காலத்திற்கே!

அத்தோடு, மனிதன் இயற்கையைத் தனது கட்டுப்பாட்டிலும், உணவு என்பதே தேவையில்லாத ஒன்றாகவும், வீடோ எங்கெங்கும் கட்டலாம் என்ற ஒரு நிலைமைக்கு ஏறிவிடுவான்.

வருடம் : 2010 - 20500 - மின்சாரம்

2020 இல் சூரிய சக்தியும், அதன் பின்னர் ஐதரசன் சக்தியும் பாவிக்கத் தொடங்கியதால் தீங்கு விளைவிக்கும் கரிவாயுக்கள் சுற்றாடலுக்குள் தள்ளப்படுவது குறைந்துவிடும். ஐதரசன் சக்தியாக்கத்தின்போது வெளிவரும் பிராண வாயுவானது வளிமண்டலத்தினுள் தள்ளப்படும். தாவரங்களுக்கு அவசியமான கரிவாயுக்கள் தேவையான அளவில் வைத்திருப்பதற்காக வளிமண்டலம் கண்காணிக்கப்படும்.

வருடம் : 2050 - 2200 - நன்சாரம்

இக்கால நன்சார சக்தியும், அதோடு இயங்கும் வான் ஷூட்டர், வான்ஜெட் என்பனவற்றால் கரிவாயு என்ற பிரச்சினையே இல்லாமல் போய்விடும்.

### புகை பிடித்தல் உடம்புக்கு நல்லது

2050இல், காற்றோடு சேர்த்து உள்ளிழுக்கும் சிகரெட் தடிகள், புகையிலை அல்லாத சில நல்ல திரவியங்களைக்கொண்டு தயாரிக்கப்படும். இவற்றைச் சொண்டில் வைத்து உள்ளே இழுக்க, இழுக்க அதே சிகரெட் இன்பம் இறுதிவரை கிடைப்பது மட்டுமல்ல, உள்ளே செல்லும் சுத்தமான, மருந்தூட்டப்பட்ட காற்று நமது இரத்தத்தைச் சுத்திகரித்து, கொழுப்புகளை நீக்கி, இரத்தோட்டத்தைத் துரிதப்படுத்தி, இதயம், கல்லீரல், சுவாசப்பை என்பனவற்றைச் செம்மையாக்கும்.

### அதிகமான பூங்கா

வீதிகள் ஒன்றுமே தேவையில்லாதவிடத்து அங்கங்கெல்லாம் இளைப்பாறும் பூங்காக்கள், தோட்டங்கள் நிறைந்திருக்கும்.

### காட்டுத்தீ இல்லை

விஷேசமாகத் தயாரிக்கப்பட்ட குண்டுகளைத் தீயின் மீது சுட்டால், அதிலிருந்து வெளிப்பாயும் அடங்காக் காபன் மோனோ ஒக்சைட் வாயு தீச்சுவாலையின்மீது படங்குபோல் படர்ந்து தீயை அணைத்துவிடும்.

வருடம் : 2200 - 2350 - கோகோன்

### காடுகள் நிலைக்கும்

ஒரு மணல் சார்ந்த கட்டிடப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டதும் மரப் பொருட்கள் தேவை இல்லாமல் போகவே, காடுகள் அழிப்பது நின்றுவிடும். மிருகங்கள், பறவைகளின் நடமாற்றத்தைக் கட்டுப்படுத்தும் நீண்ட பெரிய எல்லை வேலிகள் எல்லாம் கண்ணுக்குப் புலனாகாத கதிர்களைக் கொண்டு அமைக்கப்படும்.

### உணவுகள் சுலபமாகும்



**- ஆக்கம்: செல்லத்துரை சந்திரகாசன் -**
*santhira_gasan@Yahoo.com.au*

கூடிய சத்து நிறைந்த மரபு அணு மாற்றப்பட்ட (GM food) உணவு வகைகள் பெருகி, பாரம்பரிய உணவு முறைகள் அழிந்துகொண்டு போகும். தற்போது மனிதன் பெரிய அளவு உணவிற்குப் பதில் ஒரு சிறிய பங்கு சாப்பிட்டாலே போதும். அத்தோடு, உடம்பு கடின வேலைகள் செய்யாத படியால் சிறிய அளவு உணவு போதுமாய் இருக்கும். இதனால், கழிவுப்பொருள், சாக்கடைப் பிரச்சனைகளும் குறையும்.

### அத்திவாரம் இல்லா வீடுகள்

புதிய ஜி பலன்செர் உதவியால், ஆழமான கொங்கிரீட் தூண்களோ, அத்திவாரமோ இல்லாமல், இலகுவாக நிலத்திலேயே நிற்கும் வீடுகள் பெருகி விடும்.

வருடம்: 2350 - 2500 - ஓம்

### சும்மா இரு

உங்களுக்கு என்ன வேண்டுமோ, அது உங்கள் காலடியில், நீங்கள் ஒன்றுமே செய்ய வேண்டாம்.

### மரங்கள்

மேலும் புதிய திடமான பொருட்களின் கண்டுபிடிப்புகளால் மரங்கள் யாவும் நித்திய ஆயுளைப் பெற்றன.

### சாப்பாடா? என்றால் என்ன?

முதல் 100 வருடங்களிலும் மரபு மாற்றிய தானியவகைகள் அளவில் மேலும், மேலும் சிறியனவாகி, பின்னர் நாளுக்கு மூன்று குளிசைகளுக்குக் குறைந்து கடைசியில், நாளுக்கு ஒரு குளிசை போட்டால் போதும் என்ற நிலைக்கு வந்துவிடும். ஆனாலும், கடைசி 50 வருடங்களில், பிரபஞ்சத்தில் கிடைத்த ஓம் என்னும் மகாசக்தியைத் தாங்கிய செப்ட்ரோ நுண் சிம்புகள் மனித மண்டையில் பொருத்தப்பட்டதும், அவை உணவு, நீர் ஆகியவற்றிற்குப் பதிலான, ஆனால் இன்னும் மேலான, ஓம் சக்தியை உடம்பெல்லாம் பாய்ச்சி, மனிதனை நோயற்ற ஜீவனாக காலமெல்லாம் வைத்திருக்கும்.

### வான் வீடுகள்

புவியீர்ப்பு சமநிலை நுட்பம் மேலும் முன்னேறி வீடுகள் யாவும், ஆகாயத்தில்

100 கி.மீ. தூரம் வரை மிதந்துகொண்டு இருக்கும். பிற்காலங்களில், இன்னும் தூரவெளிகளில் பிராணவாயுப் படுத்தப்பட்ட காப்பகங்களினுள் வீடுகள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் முளைக்கும்.

### இயற்கை என் கையில்

இயற்கையின் சீற்றத்தினால் பல அழிவுகளைக் கண்ட மனிதன் தற்போது அதற்கு ஒரு முடிவு கண்டுவிட்டான். மழை, புயல், குளிர், வெயில், எரிமலை, நிலநடுக்கம், சுனாமி எதுவாய் இருந்தாலும், அவற்றை நிறுத்த, தொடக்க, முடிக்க, கட்டுப்படுத்த, இடம் மாற்ற, அளவைக் குறைக்க, கூட்ட எல்லா காரண நுட்பங்களையும் கண்டுபிடித்து, தனக்குக் கீழ் கொண்டு வந்துவிட்டான். (தொடரும்)


**தாரணி சட்ட அலுவலகம்**

* சட்டத்துறையில் 20 வருடங்களுக்கு மேலான அனுபவம்
* இலவச ஆரம்ப ஆலோசனை

- *Real Estate Law* வீடு, காணி, வர்த்தக நிலையம் உரிமைச் சட்டம்.
- *Family Law* குடும்பச் சட்டம்.
- *Wills & Estate* இறுதி விருப்பாவணமும், மரணச் சொத்தும் சட்டம்.
- *Power Of Attorney & Affidavit* தத்துவப் பத்திரம் & சத்தியக்கடதாசி
- *Immigration Law* குடிவரவுச்சட்டம்



**தாரணி தர்மலிங்கம்,** LLB
Barrister Solicitor & Notarypublic

**GTA Square**
5215 Finch Avenue East ,
#213
Tel: 416.291.4900
Fax: 416.291.4901
Email: contact@tharanilawoffice.com

# BASEMENT RENT

***NEILSON & FINCH***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.564.4200

***MCCOWAN & ELSON***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail.immediately.
தொடர்புகளுக்கு: 905.209.0876

***TAPSCOTT & MCLEVIN***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Everything include. Close to school, TTC, malvern mall. No pets & No smoking. Ladies preferred. Avail. immediately.
647.294.9120 / 416.358.7265

***ELSON & MCCOWAN***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail.immediately.
தொடர்புகளுக்கு: 416.569.7882

***NEILSON & MORNINGSIDE***

New 3 bedroom bsmt fro rent. parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.998.4960 / 416.299.5125

***9TH LINE & 14TH AVE.***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, 2 washroom. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.828.6278

***WARDEN & LAWRENCE***

2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.267.0161

***BRIMLEY& LAWRENCE***

2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.299.0423 / 647.328.1545

***MCCOWAN & ELLESMERE***

1 Bedroom bsmt for rent. Livingroom, kitchen, full washroom, sep. entrance. Close to TTC School, Town Center and all amenities. Quiet place. Avai. immediately.
416 265 9138 / 416 271 8467

***MCCOWAN & FINCH***

1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.998.3535

***NEILSON & FINCH***

Rooms for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.843.1568

***MARKHAM & PAINTED POST***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, bank, school. Avail. immediately.
416.716.6422 / 647.427.5469

***MARKHAM & BUR OAK***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, go station, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.844.8692

***SCAR.GOLF CLUB & BRIMORTON (MARKHAM & ELLESMERE)***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.278.0349

***MCCOWAN & STEELES***

Newly 2 bedroom bsmt for rent. Sep. entrance, 2 car parking, laundry full washroom, kitchen. Close to 24 hrs. bus service, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.272.4921

***BIRCHMOUNT & SHEPPARED***

Newly 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall, school, hwy. Avail. immediately.
647.401.1646 / 416.723.6236

***MARKHAM &SCAR.GOLF CLUB***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.454.9986 / 416.219.4936

***MCCOWAN & DENISON***

Bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school. Avail. immediately.
416.538.6768 / 647.234.1316

***MARKHAM & STEELES***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, mall, SpiceLand. No Pets & No Smoking. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.732.5949

***MIDDLEFIELD & ELSON***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. April 01, 2012.
தொடர்புகளுக்கு:416.717.8979

***MIDDLEFIELD & DENISON***

1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.908.1250

***MCCOWAN & HWY 401***

1 Bedroom bsmt for rent. parking, laundry. Close to TTC, Scarborough Town Center. Avail. immediately.
647.628.6494 / 647.350.3956

***MARKHAM & LAWRENCE***

1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.801.4681

***MCCOWAN & DENISON***

1 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. February 01, 2012.
647.706.4922 / 416.522.3314

***WARDEN & LAWRENCE***

1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room, laundry, cable & internet including. Close to TTC, hwy (401, DVP). Avail. immediately. Ladies or couple only.
தொடர்புகளுக்கு: 416.997.6575

***KINGSTON & SCAR.GOLF CLUB***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.831.6343

***MORNINGSIDE & SHEPPARED***

சந்திப்புக்கு அருகாமையில் புத்தம்புதிய ஒரு விசாலமான படுக்கை அறை பெரிய யன்னலுடன் bsmt இல் வாடகைக்கு உண்டு. Sep. entrance, laundry, cable, internet. Close to TTC, pizza, mall. Students, working people or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.899.1123

***9TH LINE & 14TH AVE.***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, bank, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.560.4152

***MARKHAM & 14TH AVE***

Newly 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.315.5256

***MORNINGSIDE & SHEPPARD***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, living hall. Close to TTC, mall. Avail. Anytime. Bachelor student preferred.
416.624.6895 / 416.498.7914

***MARKHAM & ELSON***

1 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. February 01, 2012.
905.472.1370 / 647.500.4564

***MCCOWAN & DENISON***

1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC. Single girl or single boy preferred. Avail. February 01, 2012
416.587.5843 / 905.472.1454

***MARKHAM & DENISON***

2 Bedroom brand new bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, walmart, bank, school. Avail. immediately.
647.761.5599 / 905.479.5599

***NEILSON & FINCH***

1 bedroom bsmt for rent with food. Parking, cable, laundry. Close to Malvern Mall, school & bus. Ladies preferred. Avail. immediately.
416.297.4100 / 647.986.4100

***MCCOWAN & ELLESMERE***

Newly renovated 2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.2922 / 416.846.7973 / 416.855.7281

***MIDLAND & KINGSTON***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.875.6869

***WARDEN & SHEPPARD***

2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
416.795.7321 / 416.419.7545

***MARKHAM & EGLINTON***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.271.6657

***KINGSTON & MORNINGSIDE***

Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, washer, dryer, parking. Close to TTC, school, shopping. Avail. immediately. No pets. Rent negotiable.
416.289.9507 / 416.720.9507

**MEADOWVALE & KINGSTON**

1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.344.0585

***VICTORIAPARK & ELLESMERE***

1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, utilities inclu. Close to TTC, mall & more. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.576.2655 / 416.444.2655 / 416.844.2655

***BIRCHMOUNT & MCNICOLL***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediatelty.
647.783.4850 / 905.294.2674
416.293.6211

***WARDEN & SHEPPARD***

ஒரு அறை basement மூன்று நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் அல்லது வயோதிபப் பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

***MARKHAM & ELSON***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, YRT. Avail. immediately. தனிநபர் அல்லது Couple விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.567.9877

***MCCOWAN & LAWRENCE***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, kitchen, livingroom. Close to school, hospital, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.7570

***MCCOWAN & STEELES***

Bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately. No parking.
416.825.8083 / 905.948.9449

# SPACE FOR RENT

***MIDDLEFIELD & MARKHAM Road***

1000 Sq.ft for storage including racking. Side door + Drive in door.
80 Nashdene Rd, Unit 10B.
416.321.2135 / 416.716.6893

# SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
***www.vlambaram.com***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

# ROOM RENT

**BASEMENT APARTMENT / ROOM FOR RENT**
Newly renovated bsmt / room available for rent. Close to TTC, Cedarbrae mall, schools, shopping. தொடர்புகளுக்கு: 647.706.4881 / 416.439.4076

**MARKHAM & EGLINTON**
1 Bedroom for rent. Kitchen, laundry, parking. Close to TTC, mall. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.303.1666

**CORNALL CENTER BLVD & NORTH OF HWY 7**
1 Bedroom for rent in a coach house. Sep. entrance, parking, kitchen, washroom, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.270.2677

**BRIMLEY & EGLINTON**
Newly renovated 2 அறைகள் கொண்ட Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. March 01, 2012. தொடர்புகளுக்கு: 416.577.7757

**DANFORTH & EGLINTON**
Upper level 2 bedrooms for rent. Close to all facilities. Avail. immediately. Each room rent $350. 647.216.7326 / 416.289.0510

**MARKHAM & ELLESMERE**
10 Tuxedo Court
2 அறைகள் கொண்ட Apt. இல் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. Close to TTC, school, shopping, தமிழ்கடைகள். Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.430.0140

**MARKHAM & LAWRENCE**
Rooms வாடகைக்கு உண்டு. Kitchen, washroom, sep. entrance, parking, laundry. Close to mall, school, TTC. Excellent condition. Avail. immediately. 416.438.2552 / 647.853.5524

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom bachelor apt இல் வாடகைக்கு உண்டு. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.301.8909

**NEILSON & MCLEVIN**
1 Bedroom for rent. Sep.entrance, laundry. Close to TTC, school, mall, library. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.831.8549

**BRIMLEY & SHEPPARED**
4 அறைகள் கொண்ட வீட்டில் upper level room for rent. Start immediate occupancy. Close to mall, park, TTC, school, bank. Also house avail. for family. தொடர்புகளுக்கு: 416.824.7725

**BELLAMY & ELLESMERE**
மேல்தளத்தில் 3 அறைகள் வாடகைக்கு உண்டு. Close to all facilities. Avail. March 01, 2012. தொடர்புகளுக்கு: 647.920.2185

**MIDLAND & EGLINTON**
1 Bedroom for rent. Laundry, parking. Close to TTC, Kennedy Subway. Ladies preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.402.5253

# ROOM RENT

**KENNEDY & LAWRENCE**
1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence LRT. ஒருவர் விரும்பத்தக்கது. Available immediately. 416.994.9635 / 416.757.9456

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Ladies preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.906.5013

**BURNHAMTHORPE & Q.E.W.**
சந்திப்புக்கு அருகாமையில் Condo. இல் 2 அறைகளில் 1 அறை வாடகைக்கு உண்டு.

**MARKHAM & LAWRENCE**
சந்திப்புக்கு அருகாமையில் Condo. இல் 2 அறைகளில் 1 அறை வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 416.875.4051

**MARKHAM & STEELES**
1 Room for rent. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.703.1343

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores... தொடர்புகளுக்கு: 416.830.5560

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall... 416.335.5242 /416.820.1999

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: 416.288.0303

**MCCOWAN & FINCH**
1 Bedroom for rent. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.298.3797

**MCCOWAN & EGLINTON**
2 Bedroon for rent. Close to all facilities. Avail. Immediately. 416.792.2545 / 647.857.9773

**BIRCHMOUNT & MCNICOLL**
Rooms for rent. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.293.6211

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. 647.361.9527 / 416.825.9717

## இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும். Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுடச் செய்தரப்படும். Monthly சாப்பாடும் செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: 647.522.7599

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொக்குவில் Temple road இல் 2½ பரப்புக்காணியுடன் 3 அறைகள் கொண்ட வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 416.806.5397

## காணி விற்பனைக்கு

டச் ரோட் (Road) மானிப்பாயில் 3 பரப்பு காணியும் முன்னால் 4 அறைகள் உள்ள வீடு ஒன்றும், அத்துடன் 11 பரப்பு வயலும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 416.303.5706

# HOUSE FOR RENT

**MIDDLEFIELD & MCNICOLL**
மேல்தளத்தில் 2 படுக்கை அறைகள் வாடகைக்கு உண்டு. Kitchen, livingroom, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.803.2587

**MARKHAM & DENISON**
4 Bedroom + 2 bedroom bsmt for rent. Also other 2 bedroom bsmt rent in a same intersection. Close to all facilities. Avail. February 01, 2012 905.599.1622 / 647.986.8622

**STEELES & 9THLINE**
4 Bedroom house for rent. 4 Washrooms. Close to all facilities. 2 Bedroom bsmt also avail. Avail. February 01, 2012. தொடர்புகளுக்கு: 416.931.3444

**BIRCHMOUNT & ELLESMERE**
3 Bedroom house for rent. Kitchen, living room, 2 1/2 washroom. Close to all facilities. No pets & No smoking. $1590 + utilities. Avail. March 01, 2012. தொடர்புகளுக்கு: 416.291.5311

**MARKHAM & SHEPPARD**
3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. Parking, laundry. Avail. immediately. அத்துடன் Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. பிள்ளைகளையும் பராமரிக்கப்படும். 416.724.1837 / 416.707.8053

## RESTAURANT FOR SALE

Scarborough வில் ஐந்து வருட காலமாக நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ் உணவகம் ஒன்று விற்பனைக்கு உண்டு 647.333.9676 / 416.431.5931

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 24, 26

# JOB JOB JOB

Looking for Dental Assistant in Scarborough dental office. Part - time or full - time. தொடர்புகளுக்கு: 647.466.3232

## தேவை

**9TH LINE & STOUVILLE**
வீட்டுடன் இருந்து பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை. 647.991.5871 / 416.852.4512

## FREE FACIAL CLASSES

இலவசமாக முக ஒப்பனை பயிற்சி வகுப்பில் சேர விரும்புவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு: 647.857.3027

**கர்நாடக சங்கீத மற்றும் தமிழ் வகுப்பு**
**MORNINGSIDE & LAWRENCE**
சந்திப்பிற்கு அருகாமையில் இசைவகுப்பு மற்றும் தமிழ் வகுப்புக்கள் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட பட்டதாரி ஆசிரியையால் எதிர்வரும் 6ஆம் திகதி திங்கள்கிழமை தைப்பூச நாளை முன்னிட்டு புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன. 647.344.5044 / 647.857.1509

## இலங்கை கனேடிய சமூக சேவை நிலையம்

- *Settlement Service*
- *Domestic Violence*
- *Alcohol Counseling*
- *Other Social Service*

**தொடர்புகளுக்கு**
Main Office: Mississauga
Branch Office: Scarborough
**905.268.0259**

## மணமகன் தேவை

1985 இல் பிறந்த பல்கலைக்கழகப் பட்டதாரியான 8இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு ரொரன்ரோவில் படித்த வேலை புரியும் நற்குணமுள்ள மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு: விளம்பரம்
*5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2,*
*CANADA*

# CAR FOR SALE

Honda Accord 1997. Silver colour. Toyota Camry 1994. Green colour. தொடர்புகளுக்கு: 416.400.1265

# CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition. தொடர்புகளுக்கு: 416.832.1359

# BASEMENT & ROOM FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE** சந்திப்பிற்கு அருகில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட 2 பெரிய அறைகள், Livingroom, kitchen, washroom, Sep. entrance உடன் கூடிய walk-out bsmt உடனடியாக வாடகைக்கு உண்டு. Couple or small family விரும்பத்தக்கது. அத்துடன் வீட்டின் மேல்தளத்திலும் ஒரு அறை வாடகைக்கு உண்டு. ஓரளவு வயது முதிர்ந்த பெண்கள் (50 - 60 years) விரும்பத்தக்கது. Close Scarborough University, Centennial College இலிருந்து 5min. Cable TV. Parking free.

**647.344.5044 / 416.312.6827**

# மனப்பாங்கு மாற்றத்தில் மறுபக்கப் பார்வைகள்

'என்னப்பா, மணமக்களை இவ்வளவு இனிமையாக சங்கத் தமிழ் உதாரணங்களைச் சொல்லி வாழ்த்திப் போட்டு வாறன் இந்த மோட்டுச் சனங்கள் தங்கடை பாட்டில, கதைச்சுச் சிரித்துக் கொண்டிருக்குதுகள். ஒன்றாவது கேட்டுக் கொண்டிருந்துதோ தெரியாது.'

குறைபட்டுக் கொண்டிருந்தார் ஒரு பேச்சாளர். அதேநேரம் இன்னொருவருர் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். ஆனால் இவரோ மற்றவரையும் கேட்க விடாமல் கெடுத்துக் கொண்டே "நான் 'பதிற்றுப் பத்தில்' வலைவீசி பிடித்தது" 'உனக்கல்லடி பெண்ணே அது ஊருக்கடி கண்ணே' என்பது போல நடந்து கொண்டாரே தவிர தானும் அதே குற்றத்தைப் புரிகிறார் என்பதை அறியவில்லையா? அதேபோல் அங்கே நடக்கும் அநாகரிகமான செயல்கள் எனச் சில விடயங்களையும் சொல்கிறனர். ஒவ்வொருவரும் தனது மனப்பான்மைதான் சரியானதெனவும் அப்படி நடக்காதவர்கள் அனைவரும் இழிந்தவர் என எண்ணுவதும் தவறானதென்பதை அறியவேண்டும்.

திருமணவீட்டுக்கு வருபவர் வீட்டாரின் அழைப்புக்கு இணங்கியே வருகிறனர். சொந்தச் சகோதரன் கூட அழைப்பில்லா விடின் வரமாட்டான். அழைக்கப்பட்டோரின் தொகையையிட்டு உணவு வரவழைக்கப்படும்.

சாவீட்டுக்கு ஒருவரும் அழைக்கப்பட மாட்டார்கள். ஆனால் பகைமை மறந்து எல்லாரும் ஓடி வருவர். அவர்களின் வீடுகளில் இருந்து சாவீட்டுக்கு உணவு வரும். துக்கம் அனுஷ்டிக்கும் மரணமண்டபங்களில் பேச்சாளர்கள் அந்த மௌனத்தை சாதகமாகப் பயன்படுத்தித் தம் கைவரிசைகளைக் காட்டத் தொடங்கி விடுவர். மரணித்தவரின் வாழ்வில்: அள்ளி வைத்து, அவதூறுகள் பரப்பியவர்கள் கூடத் தாம் அவருக்கு எவ்வளவு நெருக்கமானவர், எந்த ரகசியத்தையும் தன்னோடுதான் பகிர்ந்து கொள்வார் எனப் புழுகித் தள்ளுவார். மனச்சாட்சியை அடகு வைத்து பேசுவதை, விடயத்தை நன்கு தெரிந்தவர் மனம் குமுறலுடன் கேட்டுக்கொண்டிருப்பார்.

தற்போது திருமணச் சடங்குக்கு வந்திருப்போரின் வெவ்வேறு வகையான மனப்பான்மையைப் பார்ப்போம். அழைக்கப்பட்டவருள் உறவினரும் நண்பர்களும் அடங்குவர். இவர்களும் ஓரளவு ஒருவருக்கொருவர் அறிந்தவர் களாக இருப்பர். தூரப்பிரதேசங்களில் வாழ்பவர்களாக இருப்பதாலும் திருமணம் போன்ற நிகழ்வுகளில் நீண்டகாலமாகச் சந்திக்க முடியாதவர்களாக இருக்கும் சொந்தபந்தங்களை நேரடியாகக் காண, பேச முடியும் எனும் ஆவலால் உந்தப்பட்டு வருவர். திருமணக் கிரியைகள் தன்பாட்டில் நடந்து கொண்டேயிருக்கும். இவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்ததும் அந்த மகிழ்ச்சியில் குடும்ப வாழ்வு, ஊரில் தங்களிடையே நடந்த தொடர்புகள், தமக்குத் தெரிந்தவர்கள் இனம் மாறி, சாதி மாறி, ஓடிப்போய், விவாகம் செய்த... போன்ற பலவிடயங்களையும் தொலைபேசி யில் சொல்ல முடியாதவற்றையும் கதைத்து முடிப்பார்கள்.



நாதஸ்வரம் உச்சஸ்தாயில் வாசிக்கும் போதுதான் தாலிகட்டு நடக்கிறது என்பதை அறிவர். அறுகரிசி போடும் போதும், உணவுக்கு வரிசையில் நிற்கும் போதும் ஓடியோடி சந்தித்துப் பேசுவர். இந்த மகிழ்ச்சியை விட பேச்சாளரின் பேச்சைக் கேட்பதை யார் தான் விருப்புவர்? எனவே இத்தகைய விழாக்களில் எப்போ என்னைக் கூப்பிடுவர் என பேச்சாளர்கள் எதிர்பார்த்து வருவதும் அலங்காரமாகப் பேசுவதும் யாருக்காக? நிலைமையை உணர்ந்து வாலைச் சுருட்டிக்கொண்டு இருக்க முடியாதா?

கலியாண வீட்டுக்கு வருபவர்கள் உடை, நடை, பாவனைகளில் வெவ்வேறு மனோபாவம் கொண்டவர்களாக இருப்பர். தமது ஆடைத் தெரிவில் சிலர் தம்மிடமுள்ள அல்லது வாங்கிய புத்தம்புதிய சரிகைப் புடவை, உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை நகைகளைச் சார்த்தி மணமக்களை விடத்தரமுயர்ந்தவையாக இருந்தாலே சனம் தம்மை மதிப்பினம் என நினைத்து அலங்காரம் பண்ணிவருவர். அப்படியே ஆண்களும் மோதிரங்கள், அச்சரக்கூடும் சங்கிலியும் வெளியே தெரியவிட்டு மாறுகரை வேட்டி அல்லது பட்டுவேட்டி, சால்வையுடன் வந்திருப்பர். வேறு சிலரோ மணமக்கள் தானே அன்றைய நாயகர்கள். ஆகையால் தாம் குறைந்த நிலையில் போக வேண்டும் என நினைத்து வருவர்.

ஒரு உதாரணம்: தொண்ணூறுகளில் ஒரு புதியரக சேலை வந்திருந்தது. நிறைய செடி கொடிச் சரிகைகள் போட்ட கடும் நிறங்களில் கண்ணைப் பறிக்கும் அழகு. மாப்பிள்ளை வீட்டார் திருமணப்பதிவுக்காகப் பெண்ணுக்கு நீல நிறத்தில் எடுத்து வந்திருந்தனர். திருமணப் பதிவு முடிந்ததும் மணம் பெண் மணவறைக்கு முதலில் உடுத்து வருவதற்காகத் தாம் எடுத்து வந்த சேலையைக் காட்டினார்கள். ஆனால் மாப்பிள்ளை வீட்டார் தாம் கொடுத்த சேலையை கட்டிவருவது தான் தம்மூர் வழக்கம் என்று பிடிவாதம். தந்த சேலையைவிட சரிகை குறைந்ததும் விலை கூடிய சுத்தப்பட்டு கரைக்குமாத்திரம் சரிகை வேலைப்பாடு. எனவே மணவறைக்கு பெண் வருமுன்னரே மாப்பிள்ளையின் தமக்கையும் வேறு இருவரும் தாம் கொடுத்த அதே சேலை மாதிரி வெவ்வேறு நிறங்களில் உடுத்தபடி மணவறையில் நின்றனர். சிறிது நேரத்தின் பின் கூறை மாற்றுவது தானே என நினைத்துக் கொண்டிருக்க நேரம் போய் விட்டதால் கூறையை மடியில் வைத்தே தாலி கட்டு. அந்தப் போட்டோ அல்பம் பார்பவர்களுக்கு எதுவித புதுமையும் தோன்றுவதில்லை. இதில் அவர்கள் மனப்பாங்கு என்ன? போட்டியா, அழகுணர்வா அல்லது மகிழ்ச்சியா?

உணவு விடயத்தில் இருவித மனப்பாங்குகளைக் காணலாம். குடும்ப சமேதராய் வருவார்கள். அநேகமானோரின் நினைப்பு பல்சுவை விருந்து கிடைக்கும் தானே. எனவே வீட்டில் எளிமையான உணவு. வேறு சிலரோ பட்டினி கிடந்து வாறவர் போல உணவு மேசையில் நிறைய சாப்பாடு போட்டு வந்து உண்ணத் தொடங்குவர். பக்கத்துக் கதிரைகளில் இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற கவலையில்லாது உண்பர். எவ்வளவு வெட்கம் அவமானம். ஆனபடியால் வீட்டில் நன்றாகப் பசி ஆறிப் போனால் நல்லதென நினைப்பர் சிலர்.

ஒருமுறை ஒரு பெண் அயல் வீட்டுக்காரியுடன் திருமணத்துக்குப் போக ஒழுங்கு செய்திருந்தார். நேரம் போகுதே ஆளைக் காணவில்லையென அங்கே போனால் பிள்ளைகளும் அவவும் பெரிய ஆரவாரமும் அழுகைச் சத்தமும். அப்பெண் சொன்னார் 'வெளிக்கிட்டம். இவைக்கு சோறு தீத்தினான்' 'ஏன் அங்கே சாப்பிடலாம் தானே இப்ப பசிக்குதாமோ' இல்லை, அங்கே ஓடி ஓடி உணவு வகைகளைப் போட்டு வந்து அடையுங்கள். எவ்வளவு மானக்கேடு. அதுதான் நிறையத் தீத்திவிட்டுப் போனால் அங்கு பறந்து திரிய மாட்டினம்.

சிலர் வஞ்சகமில்லாமல் நிறைய உணவை எடுத்து வந்தால் இங்கிதமற்ற மேசைப் பங்காளர் இது கூடாது. அது எண்ணையில நீந்துது. பாவக்காயைக் குவிச்சு வைச்சிருக்கிறியள். என்ன சலரோகமா?

இதற்கும் ஒரு படி மேலேபோய் கத்தரிக்காய் பொரிச்ச கூட்டுக் கறியை எண்ணெய் மிதக்க அள்ளிப் போட்டு வந்த ஒரு வயோதிபர் யாருடனோ பேசிக் கொண்டிருந்த போது, ஒரு நலம் விரும்பி வேறொரு தட்டை வைத்துவிட்டு அதை எடுத்துச் சென்று விட்டார். வந்ததே கோபம், தனது சுதந்திரத்தில் யார் கை வைப்பது. தனக்கு ஒன்றும் தெரியாதா. தான் அறிவில்லாதவனா ஒரு நாள் உணவுடன் சாவு வந்துவிடுமா. அப்படி வந்தால் தான் என்ன? அந்த வயது தானே.

மனப்பான்மை என்பது மாறும் இயல்புடையது. தத்தம் மனப்பாங்குகளுடன் இன்னொருவருடன் ஒத்துப்போகாவிட்டால் அவர் மடையர் என்றோ நாகரிகம் அற்றவர் என்றோ நினைப்பவர்கள்தான் மடையராவர். தமது கொள்கை தான் சரியானது என நினைப்பவர்கள் மறுபக்கம் ஒன்றிருப்பதையும் அறிய வேண்டும். காலம், இடம், சூழல் நோக்கி மனப்பாங்குகள் மாறலாம். மாறும். அதுவே நியதி.



**- குறமகள்-**

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at *Scarborough & Stouffville*

***Contact: 647.340.9490 / 647.831.0363***

**BUY, SELL or LEASE**

**Dinesh Jeganathan**
Sales Representative



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# இளையோர் ஆக்கம்

**இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**


இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# தமிழ் என் உயிருக்கு மேல்

'கல் தோன்றி மண் தோன்றா காலத்திற்கு முன் தோன்றிய மூத்த மொழி,' என்று கூறப்படும் மொழி, தமிழ் மொழி. இதுவே தமிழ் மொழியின் பழைமையைக் கூறுகின்றது.

இத்தகைய பழமையான மொழியை, "தமிழுக்கும் அமுது என்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று கூறினார் பாரதிதாசன். தமிழ் என்ற இனிமையான மொழி எங்கள் உயிரிற்கு நேர் என்று கூறுகிறது இந்தப் பாட்டு. ஆனால் ஏன் தமிழ் எமது உயிருக்கு மேலானது?

தமிழில் பல காப்பியங்களும், நூல்களும் உண்டு. தமிழ் பண்பு, நல்வழி, வீரம் என்று பல தலையங்களில் கதைகள் உண்டு. பண்பையும், தெய்வீகத்தையும் காதலையும் கூறுபவை காப்பியங்கள். இதில் ஒரு கதை, கோவலன் கண்ணகி கதை. திருக்குறள் சைவசமயத்திற்கு மட்டுமில்லாமல் எல்லா தமிழர்களுக்கும் நல்வழி கூறும். போரில் இறந்த மகனின் நெஞ்சிலிலோ முதுகிலோ அம்பு பட்டது என்று பார்த்த தாயின் கதையை புறநானூறு கூறுகிறது. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்,' என்று தமிழை புகழ்ந்தார் பாரதியார். மகாகவி




முதல் கூறியது போல் ஒரு மிகப் பழமையான மொழி தமிழ். கவிஞர்கள் பல நல்ல கருத்துக்களை ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் கூறி இருக்கிறார்கள். உதாரணமாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், கணியன் பூங்குன்றனார் என்ற புலவர் பாடிய, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற பாட்டு, உலகத்தில் நாகரிகம் மேலை நாடுகளில் வளர முன்னரே தமிழில் நாகரிகத்தை பற்றி கூறி இருக்கிறது. இந்தப் பாட்டு! உலகில் உள்ள எல்லா ஊர்களும் எங்கள் ஊர் உலகில் வாழும் அனைவரும் எமது உறவினர்கள்' என்று தமிழ் சமத்துவ கொள்கையை கூறுகிறது.

பாரதியார் பல மொழிகளை கற்றவர். அப்படி இருந்தும் தமிழ் மொழி தான் இனியது என்றார் அவர்.

கனடாவில் ஆங்கிலம் மூலம் கல்வி கற்கிற நாம் இரண்டாவது மொழியாக தமிழ் மொழியை கற்று பேசினால் எமது மூளை மிகவும் விருத்தி அடையும் என பல ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இவ்வாறு இரண்டு மொழிகளை சரளமாக பேசுபவர்களுக்கு பல மூளையை தாக்கும் நோய்களும் வராது என்று கூட ஆய்வுகள் கூறுகின்றன. இத்தகைய எங்கள் உயிரிக்கு மேலான தமிழை படித்து, பாதுகாப்பதோடு தனது அறிவையும் உடல் நலத்தையும் பெற வேண்டும்.

**நீதி: பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர் தோழர்களே!**



**ஞா. ஆரணி**

அகவை 13


## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தில் A/L படித்து மருதநாமடம் 4ஆம் ஆண்டு இசைக்கல்லூரியில் சங்கீதம் படிக்கும் உயர்குல 25 வயதுடைய மணமகளுக்கு கனடாவில் வாழும் மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: 647.343.4983

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட 2 இல் செவ்வாய் உள்ள 34 வயதுடைய B.A. பட்டதாரியான மாப்பிள்ளைக்கு நல்ல குணமுடைய மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 416.768.8105


மேலும் பக்கங்கள் 24, 25


## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்

**ProWin Computers.**
2383 Eglinton Ave. East
(Wind Mobile Store) Kennedy & Eglinton
416 - 879 7489 / 647 - 340 5568

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## HOUSE FOR RENT

**MIDDLEFIELD & STEELES IN MARKHAM**

*Newly renovated 4 bedroom house for rent. 2 full washrooms. Close to TTC, York transit, shoppers Drug Mart, banks, post office, super Markets, walmart. Enrgy certified. All floors are hardwood & laminated.*

**Contact: 416.857.9773**

## OFFICE SPACE FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**

Real Estate, Mortgage, Insurance offices போன்றவையும் Show Room உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ***Including High-speed Internet, Electricity, Heating, Water.***

**Pl. Call: Murale - 416.569.4065**

## EATON ACADEMY

An Ontario Private School Registered with the Ministry of Education.

*ALL HIGH SCHOOL CREDIT COURSES OFFERED*

Courses Start in December, February, July and August

For Registration and Further Details Call

**Contact: 416.669.3101**

*80 Nashdene Road, Building D, Unit 220 (MARKHAM & NASHDENE)*

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***


# குறிஞ்சி நிலத்தின் காதல் ஒழுக்கம் - 2

தமிழ் நாட்டின் பரந்த நிலப்பரப்பில் ஐவகை நிலங்களையும் ஒரு சேரக்காண முடியும். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். முல்லை, அருவி, மலைப்பிரதேசத்திற்குரிய இயற்கை வளங்களான உயர்ந்து வளர்ந்த மரங்களோடு செடிகொடிகள், நறுங்கனிகள் சூழ உள்ள இயல்பான நிலப்பரப்பினை உள்ளடக்கிய அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் இயற்கையின் தன்மைக்கேற்ப தங்கள் பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு வருவது வழமை.

தலைமகளை போரின் காரணமாக பிரிந்து சென்ற தலைவன் அவளை நெருங்கி வருகின்றான். அவளைத் தனிமையில் கண்டு அவளோடு கூடி மகிழ அவனது மனம் விழைகின்றது. ஆனால் தலைமகளோ நாணம் கொண்டவளாக அவனின் விருப்பிற்கு இசைவதாகவோ உடன்படுவதாகவோ இல்லை. அவனோ காதல் வயப்பட்டவனாக அவளை அடைதற்பொருட்டுப் பலவாறாகக் காதல் கிளர்வினைத் தலைமகளிடம் ஏற்படுத்த முனைகின்றான். தனது அன்பை அவளுக்கு வெளிப்படுத்துகின்றான்.

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறை தும்பி
காமம் செப்பாது, கண்டது மொழிமோ,
பயிலியது கெழீஇய நட்பின், மயில் இயல்
செறி எயிற்று, அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ, நீ அறியும் பூவே,

என இறையனார் தலைமகளை உடன்பட வைப்பதற்காக தலைவன் அவளிடம் அன்புபெருக காதல்மொழி பேசியதாகத் தருகின்ற காட்சி தலைமகளின் அன்பை பெருக்கி அவளைத் தன்பால் அணுக வைப்பதோடு மட்டுமன்றித் தனது உளக்கிடக்கையை அவள் உணர்ந்து கொண்டு தனது விருப்புக்கு உடன்பட வைக்கவேண்டும் என்னும் நோக்கத்தை உள்நோக்கமாகக் கொண்டு அவர் செப்பியதாக உள்ளது இச்செய்யுள். அவன் தலைமகளை நெருங்க அவளது வெட்க நிலையைப் போக்குதற்காக அவளைத் தீண்டித் தீண்டிக் கதைக்கும் தன்மையை இந்தச் செய்யுளில் புலவர் மிக நயமாக எடுத்தாண்டுள்ளார். அதாவது நறுமணம் கமழும் மலர்களின் மகரந்ததாதினை ஆராய்ந்து ஆராய்ந்து நறுந்தேனை உண்ணுகின்ற வாழ்க்கையை யும், கட்டுப்பாடாகிய சிறையை உன்னிடத்தே கொண்டுள்ள வண்டைப் போன்றவளே! என்னிடத்தில் அன்பு செலுத்தி நான் விரும்புவதைக் கூறாமல், நீ உண்மையிலேயே உன் கண்களால் கண்டவற்றைச் சொல்வாய்!. நீ கண்ட இந்த மலர்களுள் என்னோடு வாழ்க்கை முழுமையும் மட்டுமல்ல எத்தனை பிறப்பெடுத்தாலும் என்னோடு பழகுகின்ற மிக நெருங்கிய நட்பையும், மயில் போன்ற மென்மையையும், முத்துப்போன்ற மிக நெருக்கமான பற்களையும் உடைய இவ்வரிவையின் கூந்தலைப் போல நறுமணம் உடைய பூக்களும் உள்ளனவோ? என்று எனக்குக் கூறுவாயாக என மலரைக் கேட்பது போன்று தலைமகளை கேட்கின்றான் தலைவன். இங்கு பெண்களின் கூந்தலுக்கு இயற்கையான நறுமணம் உண்டு என்பது எடுத்துக் கையாளப்படும் தன்மை இயற்கையின் நறுமணம் அங்கு உள்ள அழகிய மலர்களை அணிவதால கூந்தலுக்கும் அந்த நறுமணம்



கிடைக்கின்றது என்பதனை புலவர் உணர்த்துகின்றார் போலும். இங்கு குறிஞ்சி நில மாந்தர் காதல் ஒழுக்கத்தை நிலைப்படுத்துகின்றார் சங்கப் புலவர். உனக்க அடுக்கடுக்கான அழகிய பல்வரிசை அது உனது அழகுக்கு மெருகூட்டுகின்றது. பல்வரிசை பற்றிப் பேசும் தலைவன் நீ சிரித்தால் எப்படி இருக்கும் அந்த அழகை ரசிக்கத்தானே நான் இங்கு வந்து தவம் கிடக்கின்றேன் என்கின்றானோ தலைமகன்.

காதல் கவிதையாக மலர்கின்றது அவரது செய்யுள். பெண்ணின் அழகை வர்ணித்து அவளின் மனதை மகிழவைத்துத் தன்வசம் கவர்ந்துகொள்ள ஆடவர்கள் சொல்லும் பசப்பு வார்த்தையோ இது எனக்கொள்ளத் தக்கதாக தலைமகளின் கூந்தலே நறுமணம் கமழ்கின்றது என கூறுவதோடு பூவே இங்குள்ள இயற்கையில் உள்ள பூக்களில் எல்லாம் சிறந்த மென்மையும், வனப்பும் கொண்ட பூ நீதான் என்கின்றான் தலைமகன். 'செந்தூரப் பூவே செந்தூரப் பூவே. எனப்பாடும் இக்காலப் பாடகர்களுக்கு வழிகாட்டியவர்கள் சங்கப் புலவர்கள் என்பதனை நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. உன்னை விடச் அழகானது எவையும் உண்டோ? இல்லை அதனை நீ அறிவாய் எனது உள்ளத்தாமரையே என்கின்றானோ தலைவன். காதல் பித்தினால் என்ன என்ன எல்லாம் சொல்லத் தூண்டுகின்றதோ?

**- த. சிவபாலு -**

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
HOMELIFE HIGHER STANDARDS
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

Brand New homes from builder detached 1900 sqft. double garage Price $285,000 London ON HWY 401 & University of Weston *10% Appreciation in 2 years expected

**Daisy Mart Brand New convenience store at Tim Hortons**
North of Newmarket at Leslie Main Road

0 - 5 years Newer homes in Stouffville

**Renovate and Sell**
Old detached bungalow near University of Toronto

# இன்னொரு...

29ஆம் பக்கத்தொடர்ச்சி

கார்த்திக் ஏனோ தெரியவில்லை செழியனுக்கு அருகில் வந்து நின்று கொண்டான். இருவரது முகத்திலும் தோன்றியது என்ன ஆச்சரியமா அல்லது நிட்சயமாகப் பயமாக இல்லை. இவங்கள் 50 வருடங்களுக்கு முன் தொலைந்தவர்களா! இருவரில் ஒருவனுக்குக் கூட ஐம்பது வயதிருக்காது போல இருக்கின்றதே!

பைத்தியங்களோ என்ற கேள்வியும் அடிமனதில் உடனே வந்தது. செழியனுக்கு புதுக்கிணத்தடியின் ஆலமரச்சந்தியின் தேனீர்க்கடையில் ஊரார் கூறியதாக மணியன் கூறியது, நாசாவின் அறிக்கையில் தாங்கள் எழுதியது உடனேயே மனதில் வந்தது. 'அட, மறைகழண்டதுகள்தான் போலை. அல்லது இவங்கள் எங்கடை காதில் பூச் சுத்துறாங்கள் போலை' என கார்த்திக் மனதுக்குள் நினைக்க,

'எங்களுக்கு மறை கழரவும் இல்லை. உங்கடை காதிலை பூ வைக்கவுமில்லை..' என்றான் நாகராசன். இன்பன் கேட்டான் 'அண்ணை அது என்ன மறை கழண்டது?'

'எனக்கும் தெரியாது. ஒருவேளை ஏதாவது புதுச் சொல்லோ தெரியவில்லை.' என்றவன் 'மிச்சத்தையும் சொல்லு' என்றான். 'ஓமோம். உண்மையைத்தான் சொல்லுகின்றோம். விபரத்தைத் தெரிந்து கொண்டால் உங்களால் நம்ப முடியாதென்றில்லை. அதனை விளங்கிக் கொள்வதற்கான அறிவும் உங்களிடம் உள்ளது' என்றவன், மீண்டும் அடுத்த அறையின் பக்கமாகப் பார்த்து விட்டு, 'நாங்கள் தொலைந்து போனது, மற்றவர்கள் தொலைந்து போனது போன்ற ஒரு நிகழ்வல்ல. முற்றிலுமே வித்தியாசமான நிகழ்வு. இனிமேலும் அப்படி நிகழுமோ தெரியாது. ஆனாலும் அதன் அடிப்படையில்தான் நாங்கள் இப்போது உங்களுடன் பேசிக் கொண்டிருக்கின்றோம்' என்றான். செழியனோ அல்லது கார்த்திக்கோ ஒன்றும் பேசவில்லை. பல கேள்விகளைக் கேட்டுத் துளைத்துக் கொண்டிருந்தவர்கள், இப்போது எந்தக் கேள்வியுமே கேட்காமல் பார்த்துக் கொண்டிருக்க, இன்பன் தொடர்ந்தான்.

'உண்மையில் அம்பது வருடங்களுக்கு முன் நாங்கள் தொலைந்தது, ஒரு விபத்தில். அதனைப் பிரபஞ்ச விபத்து எனலாம்' 'பிரபஞ்ச விபத்தா?' செழியனும் கார்த்திக்கும் கேட்டார்கள்.

இருவரும் ஏக காலத்தில் கேட்க, அடுத்த அறையில் இருந்தவர்களின் முகத்தில் ஆச்சரியம் பொங்கியது. இனம் தெரியாத பரபரப்பு அங்கே காணப்பட...

-இன்னமும் வரும்

# இன்னொரு... ஆச்சி வீடு

**பாகம் - 3**
**பகுதி 33**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

இன்பன் தனது மௌனத்தைக் கலைத்து புன்னகையுடனே பேசத் தொடங்கினான். 'நீங்கள் என்ன நோக்கத்துடன் இங்கு வந்திருக்கின்றீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் என்ன வேற்றுக்கிரக மனிதர்களா? எங்களைப் பற்றிய விபரங்கள் என்ன? என்பவைதானே உங்களது பிரதான கேள்விகள்?"

ஆம் என்பது போலக் கார்த்திக்கும் செழியனும் பார்த்தனர். இருவரது முகத்திலும் தொனித்த உணர்வுகளை ஆச்சரியம் என்பதா அல்லது மகிழ்ச்சி என்பதா எனக் கூறத் தெரியவில்லை. இருவருமே ஒருவித உசார் நிலைக்குவர, அறைக்கு வெளியே நின்று கொண்டிருந்த நால்வரிடமும் பரபரப்பு ஏற்படத் தொடங்கியது.

**◊ சி.வி. நாதன் ◊**

மணியன், இன்பன் கூறியதை மொழிபெயர்க்க, மற்ற மூவரும் காதுகளைத் தீட்டிக் கொண்டு உசாரானார்கள்.

"நீங்கள் ஒன்றுமே எங்களைக் கேட்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் என்ன கேட்கப் போகின்றீர்கள் என்பதனை எங்களால் அறிய முடியும். நீங்கள் கேட்காத கேள்விகளுக்கான பதில்களைக் கூடக் கூறப்போகின்றோம்." என்றான் நாகராசன்.

"அடுத்த அறையில் இருந்து கொண்டு எங்களைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் கூட வேண்டுமாயின் இங்கே வரலாம்" என்ற நாகராசன், திரும்பி மணியனாகியோர் இருந்த அறைப் பக்கமாகப் பார்த்து மெதுவாகச் சிரித்தான்.

"நாங்கள் இங்கே இருப்பது அவர்களுக்குத் தெரியம் என நினைக்கிறேன். விரும்பினால் எங்களையும் உள்ளே வரலாம் எனக் கூறுகின்றார்கள்" என்ற மணியன், சானைத் திரும்பிப் பார்த்தான்.

மணியனின் கருத்தினை அறிந்து கொண்ட சான், வேண்டாம் என்பது போல் தலையை ஆட்டிச் சாடை காட்டினார்.

'அவர்கள் வரமாட்டார்கள்' எனச் சிரித்துக் கொண்டே சொன்ன இன்பன் நாகராசனைப் பார்த்து, 'அண்ணை! நீங்களே சொல்லிவிடுங்கள்' என்றான்.

'இல்லைத் தம்பி நீயே சொல்லி விடு. விளங்கிக் கொள்ளக் கூடிய மட்டில விளங்கிக் கொள்ளட்டும்'

'நாகராசன். 'சரி உங்களின் முதலாவது கேள்வியிற்கான பதில்: என்ற இன்பன் செழியனின் பக்கமாகத் திரும்பிப் பார்த்தான். பின்னர் கார்த்திக்கைப் பார்த்தவன், 'நாங்கள் இருவருமே இந்தப் பூமியின் பிள்ளைகள்தான். இந்தப் பூமியிலேதான் பிறந்தோம். நாங்கள் வேற்றுக் கிரக மனிதர்கள் அல்ல. ஆனாலும் எங்களை வேற்றுக் கிரக மனிதர்கள் எண்டு நீங்கள் சொன்னால் அதையும் நாங்கள் மறுக்கப் போவதில்லை.' செழியனுக்கும் கார்த்திக்கிற்கும் ஏதோபோல் ஆகிவிட்டது.

ஓம் எண்டு சொல்வது போலவும் இருக்குது, இல்லை என்பது போலவும் இருக்கிறதே! தமிழ் பேசும் வேற்றுக்கிரக மனிதர்களாக இருந்திருக்கலாமே என்பது போல அவர்களுக்குள் இருந்து ஏதோ ஒன்று அரற்றிக் கொள்வது போல இருந்தது.

வெளியே மணியனுக்கும் அதேபோன்ற உணர்வுகள்தான் ஓடின. மற்ற மூவரும் ஒன்றும் பேசாமல் நின்றார்கள். அவர்களிடம் இருந்து மண்டையைப் பிக்கக் கூடியதான விபரங்கள் இனித்தான் வரப் போகின்றன என்பது அவர்களுக்கு அப்போது தெரிய வில்லை. 'யாழ்ப்பாணத்தில் ஒரு கிராமத்தில் பிறந்தவர்கள், நாங்கள். எனக்கு எனது பெற்றோர்கள் இட்ட பெயர் இன்பன். அண்ணனின் பெயர் நாகராசன்' என்ற இன்பன், சிறிது இடைவெளிவிட்டுப் பின்னர் கூறினான், 'அம்பது வருடங்களின் முன்னர் தொலைந்து போன நாங்கள் இப்ப மீண்டும் வந்திருக்கின்றோம்' கதிரையில் அமர்ந்திருந்த செழியன் எழுந்துவிட்டான்.

**தொடர்ச்சி 28ஆம் பக்கம்**





# தமிழ் இசை: மீளவும் புத்துயிர் பெறுகிறது!

கடந்த இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றில் சங்ககாலத்தில் மட்டுமே தமிழ் தனித்து இயங்கியுள்ளது. பல்லவர், சோழர் காலங்களில் சமஸ்கிருதம் அரசர்களின் ஆதரவு பெற்ற மொழியாக இருந்துள்ளது. சங்க இலக்கியப் பாடல்களில் இயற்கைநெறி சார்ந்த இசைமரபுகள் பேணப்பட்டிருந்தன. அவை திணைசார்ந்த மரபுகளாக இருந்தன. இது படிப்படியாக சமயம் சார்ந்த பண்மரபுகளாக மாறத் தொடங்கிய வேளையில் சமயத் திருமுறை பாடல்கள் எழுந்தன. இதுவே தேவாரப்பண்கள் என அழைக்கப்பட்டன. சமயச்சார்பற்ற விறலியர், பாணர்கள் சங்ககாலத்தில் வாழ்ந்த நிலை மாறி 'ஓதுவார்கள்' என்ற பண்ணிசையாளர் உருவாகினர். சமயத்துடன் தமிழ் இசைமரபு கலக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவானது. சமயங்களை பேணிய ஆட்சியாளர்கள் இந்த இசை மரபினை தங்களுடைய மொழிகளுக்குள் உள்வாங்கிக் கொண்டனர். இவ்வாறுதான் கர்நாடக இசை தமிழ் சூழலில் உருவானது.

சங்கத் தமிழர்களால் இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று முத்தமிழாகப் பகுக்கப்பட்டு தமிழ் போற்றி வளர்க்கப்பட்டது. இவற்றுள் இசைத்தமிழ் மரபினை கர்நாடக சங்கீதம் மீறி நின்றவேளையில் அதுவே தமிழர்களின் மரபுசார்ந்த இசையாக கொள்ளப்பட்டது. இசையுடன் தமிழினம் நெருக்கமாக வாழ்ந்துள்ளது. குழந்தை கருவில் உள்ளவேளை நலுங்குப் பாடல் இசைக்கப்படுகிறது. பிள்ளை பிறந்ததும் தாலாட்டுப்பாடல், சிறுவர் பருவத்தில் நிலாப்பாடல், விளையாட்டுப் பாடல், வீரப்பாடல், காதற் பாடல், திருமணப்பாடல், ஒப்பாரிப்பாடல் என்றவாறு வாழ்வியலின் ஒவ்வொரு கட்டங்களையும் இணைத்துள்ளது. தொழில்களுடன் ஏற்றப் பாட்டு, பள்ளுப்பாட்டு, ஓடப்பாட்டு, கப்பற் பாட்டு வழகத்தில் வந்துள்ளன. ஒரு நாளின் அதிகாலை, காலை, முற்பகல், நண்பகல், மாலை, இரவு ஆகிய வேளைகளில் பாடக்கூடிய பண் இசைகள் இருந்துள்ளன. சங்க காலத்தில் குறிஞ்சிப்பண், முல்லைப்பண், மருதப்பண், பாலைப்பண் என்பன தமிழ்ப் பண்களால் இசைக்கப்பட்டி ருந்தன. சங்கப்பாக்கள் அகவல் மரபில் அமைந்தவை. பின்பு சமயப் பாடல்கள் விருத்தப்பாவில் அமைந்தவை. பின்பு சோழர் காலத்தில் கீர்த்தனைகள், கதா கலாட்சேபங்கள் போன்ற இசை நிகழ்வுகள் பரவின. பின்னர் ஏற்பட்ட சமஸ்கிருத செல்வாக்கு காரணமாக தமிழர்களும் சமஸ்கிருத பண்டிதர்களாக உருவாகினர். ஆட்சி நிர்வாக அறிவு மொழியாக சமஸ்கிருதம் நிலவியது. தமிழர்களின் அறிவுசார் நிகழ்ச்சிகள் சமஸ்கிருதத்தில் பதிவு பெற்றன. 13ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கர்நாடக இசை இலக்கண நூல் 'சங்கீத ரத்னாகாரம்' என்பதாம். ஆபிரகாம் பண்டிதர் 'கருணாமிர்த்த சாகரம்' என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

15 ஆம் நூற்றாண்டில் தொடங்கி தெலுங்கு மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டது. தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் சமஸ்கிருதத்தினை உள்வாங்கின. தெலுங்கு மொழிப் பண்டிதர்கள், பாளையக்காரர் தமிழகத்தில் வாழவே கர்நாடக இசைமரபும் வலுப்பெற்றது. இரு மரபுகளான தமிழிசை மரபு, கர்நாடக இசை மரபு தோன்றவே கர்நாடக தமிழிசையை மூவர் வலுப்படுத்தினர். சீர்காழி



முத்துத்தாண்டவர், சீர்காழி அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப்பிள்ளை ஆகியோர். கர்நாடக சங்கீதத்தை வலுப்படுத்திய மூவர்களாக தியாகராஜா சுவாமிகள், சியாமா சாஸ்திரிகள், முத்துசுவாமி தீட்சிதர் ஆவர். 'சங்கீத வித்துவசபை' அண்ணாமலை அரசரின் 'தமிழிசை மன்றம்' என்பவை புதிதாகத் தோன்றின. இவற்றிற் கிடையில் பல இசைப்போட்டிகள் இடம்பெற்றன. 'சங்கீத வித்துவசபை' - தெலுங்கு மொழியிலும், 'தமிழிசை மன்றம்' - தமிழிலும் பிரபலமாகின.

இவ்வேளையில் தமிழிசை மூவர்களான முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக்கவிராயர் ஆகியோர் ஏராள-மான தமிழிசை உருப்படிகளை இயற்றி தமிழிசைக்கு வளம் சேர்த்தனர். 'கீர்த்தனை' என்ற உருப்படி வகையை இசைத் துறைக்கு சேர்த்த பெருமை இவர்களையே சாரும்.

தமிழ்ப் பண்ணிசை ஓயாது ஒலித்துக் கொண்டிருந்த திருவாரூரில் 1767 மே 4 ஆம் திகதி தியாகராஜ சுவாமிகள் பிறந்தார். இவர் அற்புதமான தெலுங்கு கீர்த்தனை-களை இயற்றி கர்நாடக இசை உலகிற்கு மிகவும் புகழ் சேர்த்தார். தென்னகத்தை ஆட்சி புரிந்த நாயக்க மன்னர்கள் கர்நாடக இசையை வளர்த்த வேளையில் தமிழ் இசை படிப்படியாக மறைக்கப்பட்டது. பின்பு தமிழகத்து கான சபாக்களில் தெலுங்கு இசை மட்டுமே பாடப்பட்டது. தமிழ் வித்துவான்களும் தெலுங்கில் பாடி பாராட்டு பெற்றனர். அதனை பெருமையாகவும் கருதினர். பல கான சபாக்களில் தமிழில் பாடுவதற்கு தடைகளும் இருந்துள்ளன. தமிழில் பாடல் இசைப்பது இழிவாகவும் கருதப்பட்டது.

இசைப் பேரறிஞர் சாம்பமூர்த்தி தனது நூலில் ஒரு நூல் 'தமிழ் மக்கள் தமது பூர்வ காலத்தில் உன்னதமான ஓர் இசையை அப்பியாசித்து வந்தார்கள். புராதன தமிழ் நூல்களும் சிலப்பதிகாரமும் இதனை நன்கு விளக்குகின்றன. இந்த அற்புதமான இசைமுறை இன்று தமிழில் மறைக்கப்பட்டு வழக்கத்தில் இல்லாது போயிற்று' என்று வருந்திக் கூறியுள்ளார். தமிழிசையின் மீள்வருகைக்கு செட்டி நாட்டரசன் சோ அண்ணாமலைச் செட்டியார் காரணமா கினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவரால் நிறுவப்பட்டது. இதன் தமிழ்த்துறைத் தலைவராக சுவாமி விபுலானந்தர் நியமிக்கப்பட்டார்.

தமிழ் இசையை வளர்க்க தனித்துறை யொன்று 1929இல் தொடங்கப்பட்டது. இதற்கு முன்பே ஆபிரகாம் பண்டிதர் 'இசைமாநாடு' ஒன்றினை 1917 இல் ஏற்படுத்தியதுடன் 'கர்ணாமிருதசாகரம்' என்ற நூலை வெளியிட்டிருந்தார். 'கர்நாடக இசை என்பது தமிழிசை தான்' என்பது இவரது கருத்தாகும். இவரைப் போன்று விபுலானந்தர் யாழ், குழல், முழவு என்ற தமிழ் இசைமரபினை நிறுவ முயன்றார். இவை இரண்டும் வெற்றி பெறவில்லை. விபுலானந்தர் 'மதங்கசூழாமணி', 'யாழ் நூல்' ஆகியவற்றினை இயற்றி இசை ஆய்வு செய்தவர். மதுரைத் தமிழ்ச் சங்ககாலத்தில் சொற்பொழிவும் ஆற்றியவர். 1936 இல் சென்னை பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் இதுபற்றி உரை நிகழ்த்தினார் எனினும் 1947 இல் தான் யாழ் நூலை கரந்தை தமிழ்ச் சங்கத்தால் வெளியிட முடிந்தது. 1943 இல் சென்னை யில் தமிழிசைச் சங்கம் உருவானது. இதில் நடந்த மகா நாட்டில் உரையாற்றிய அண்ணாமலை செட்டியார் 'தமிழர் இசைச் செல்வமே சங்கீதத்திற்குத் தாயூற்றாக விளங்கியது' என்று வற்புறுத்தி பேசினார். இங்கு ராஜாஜி, கல்கி, அண்ணாத்துரை, டி கே சி போன்ற பல அறிஞர்கள் தமிழிசையின் சிறப்புக்கள் பற்றி பேசினர். எனினும் தமிழிசை ஒரு தீண்டாமை போன்று தொடர்ந்தும் தென்னகத்தில் புறக்கணிக்கப் படுவது வேதனை மிக்க சம்பவமாயிற்று.


அண்மைக்காலத்தில் வாழ்ந்த தமிழ் இசை மேதையான பாபநாச சிவன் தமிழிலேயே 2000 பாடல்கள் வரை இயற்றியுள்ளார். இப்பாடல்களிடையே சில சமஸ்கிருதச் சொற்கள் காணப்படுவதாயினும் பக்தி ரசமும் சங்கதிகளும் நிறைந்திருப்பதை இங்கு குறிப்பிட வேண்டும். இவற்றை மக்களிடம் பிரபல்யப்படுத்தும் பொறுப்பு இன்றைய இளம் சமுதாயத்திடம் உள்ளது. இந்நிலையில் மீளவும் தமிழ் இசையை முழுமையாக மீளக் கொண்டு வருவதற்கு சாத்தியமான சூழ்நிலை ஈழத் தமிழர்களுக்கும், புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கும் உண்டு. தெலுங்குக்காரர் கள் எம்மிடையில் இல்லை. கானசபாக்கள் இல்லை. நல்ல தமிழ் பேசும் செந்தமிழ் வல்லோர் நிறையவே உள்ளனர். ஆங்கிலம் கலக்காது தூயதமிழ் பேசும் தமிழர் பலருள்ளனர். தேசியத்தினை வென்றெடுக்கப் பரிணாமக் கட்டத்தில் நாம் உள்ளோம். கலாசாரத்தின் பிரதான கூறுகளை உணர்ந்த பலராக நாம் உள்ளோம். எமது இனத்தின் இருப்பும் வளர்ச்சியும் செழுமையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதில் அசையாத நம்பிக்கை எம்மிடமுண்டு. இந்த நிலையில் கனடியமண்ணில் பல்வேறு இசைக்கலாமன்றங்கள் உருவாகி வருகின்றன. இதற்கு மத்தியில் மேலைத்தேச இசையின் தாகம், காட்சி இசை (Visual Music) எனப்பல புதிய இசை மரபு என்பவை எமது தமிழிசையை மாற்றிவிடலாம் என்ற பயமும் உண்டு.

தமிழ் இசை பற்றிய ஆய்வுகள் ஒரு புறத்திலும் இது பற்றிய விழிப்புணர்வு ஒருபுறத்திலும் இன்றுள்ள தேவையாகும். வானொலிகள், தொலைக்காட்சிகள் என்பனபற்றி தமிழ் இசைக்கு முன்னுரிமை கொடுப்பது மிகவும் முக்கியமாகும். தமிழ் இசைப்போட்டிகள் பல்வேறு மட்டங்களிலும் நடத்தப்படுவதுடன் சிறந்த இசைக் கலைஞர்கள் கௌரவிப்பு பெறவேண்டும். இங்குள்ள சிறார்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள் என்பதனை தமிழக கலைஞர்கள் வருகை தந்தபோதெல்லாம் பாராட்டியே சென்றுள்ளனர். சிறியவயது முதல் சிறிது சிறிதாக இசைப்பயிற்சி செய்தால் பின்னர் சிறந்த இசைக்கலை-ஞராகும் வாய்ப்பு இங்குண்டு. எமக்கென்று ஒரு மொழி, கலாசாரம் உள்ளதென்று கூறும் நாம் எமக்கென்று ஓர் இசை உள்ளதென்பதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள அதனை வளர்க்க வேண்டும்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

ELECTRICAL WORKS



**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: **ஈசன்** - **416-286-2880**

# குவாண்ரம் பிறந்த கதை நுண்ணுலகியல் 27

சென்ற தடவையில் துலக்கமான உலோகப் பரப்புகளில் ஒளிக் கதிர்கள் படுகையில் அவ்வுலோகங்களில் இருந்தும் இலத்திரன்கள் வருகின்றன என்றும் இவ்விளைவினை இயற்பியல்வாதிகள் ஒளி-மின் விளைவு என அழைத்தார்கள் எனவும் பார்த்தோம். இனித் தொடர்ந்து தெளிவுகளைப் பார்ப்போம். இந்த ஒளிமின் விளைவானது மிகவும் சுவாரசியமானதாக இருந்தது. ஒரு நிறத்தின் ஒளிக்கதிரானது படுகையில் வெளிவரும் இலத்திரன்களின் வேகத்தை அளந்து பார்த்தால் அது எப்போதும் ஒரே அளவினதாக இருந்தது. அந்நிறத்தின் ஒளிச் செறிவைக் கூட்டும்போது, அதிக அளவில் இலத்திரன்கள் வந்தனவே தவிர, வெளிவந்த இலத்திரன்கள் எல்லாவற்றினதும் வேகங்கள் ஒரே அளவினதாகவே இருந்தன. அதாவது ஒரு நிற ஒளிக்கதிர் படும்போது வெளிவருகிற இலத்திரன்களின் சக்தியானது மாறாததாக இருந்தது. எடுத்துக் காட்டாச் சொல்வதெனில் பளபளப்பான உலோகம் ஒன்றின் மேல் சிவப்பு நிற ஒளிக்கதிர் படும்போது உலோகத்தில் இருந்து வெளியாகும் ஒவ்வொரு இலத்திரன்களினதும் சக்தியானது எப்பொழுதும் ஒரே அளவினதாகவே இருந்தது. இனி, நிறங்கள் வேறுபட வேறுபட, வெளிவந்த இலத்திரன்களின் சக்தியும் வேறுபட்டது. சிவப்பு நிறக் கதிர்கள் படுகையில் வெளிவந்த இலத்திரன்களின் சக்தியும், பச்சை நிற ஒளிக்கதிர்கள் படுகையில் வெளிவந்த இலத்திரன்களின் சக்தியும் அளவில் வேறுவேறானவையாக இருந்தன. இவ்வேறுபாடுகளைக் கவனித்தால், அதிர்வெண் கூடிய ஒளிக்கதிர்கள் படுகையில் சக்தி கூடிய இலத்திரன்கள் வெளிவந்தன. சிவப்பு நிற ஒளியின் அதிர்வெண்ணை விட, ஊதா நிற ஒளியின் அதிர்வெண் கூடுதலாகும். எனவே சிவப்பு நிற ஒளிக்கதிர் பளபளப்பான உலோகத்தில் படுகையில் வெளிவந்த இலத்திரன்களின் சக்தியை விட, ஊதா நிறக்கதிர்கள் படுகையில் வெளிவந்த இலத்திரன்கள் சக்தியானது உயர்வானதாக இருந்தது.

அக்காலத்தில் மிகவும் வழக்கில் இருந்த செம்மைப் பொறிமுறையினால் இதற்கு விளக்கம் கொடுக்க முடியவில்லை. செவ்வியலின் கருத்துப்படி, ஒளிக்கதிரின் செறிவு கூடினால், வெளிவரும் இலத்திரன்களின் சக்தி உயர்வானதாக இருக்க வேண்டும். ஆனால் இங்கு அவ்விதம் காணப்படவில்லையே!. இதுதான் விஞ்ஞானிகளிடையேயான சிக்கலாக இருந்தது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வினை அயன்ஸ்ரைன் கொண்டுவந்தார். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், அதாவது 1905ம் ஆண்டு அயன்ஸ்ரைனின் பிரபலமான 5 கட்டுரைகளில் இதுவும் ஒன்றாக இருந்தது. பிறொணியனின் அசைவுக்கான விளக்கத்திற்கும்: ஒளிமின் விளைவுக்கான விளக்கத்திற்கும் சேர்த்தே அயன்ஸ்ரைனுக்கு பின்னர் நோபல் பரிசு வழங்கப்பட்டதாகக் கூறுகின்றனர். சரி, ஒளிமின் விளைவுக்கான அயன்ஸ்ரைனின் விளக்கத்தினைப் பார்ப்போம். நீங்களே ஓரளவுக்கு ஊகித்திருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களது ஊக்கத்துடன் அயன்ஸ்ரைனின் விளக்கம் ஒத்துப் போகின்றதா? எனச் சரிபாருங்கள்.. அயன்ஸ்ரைன் தனது விளக்கத்திற்கு பிளாங்கின் ஒளியானது துணிக்கைகளாகச் சக்தியை எடுத்துச் செல்கின்றது என்பதனை ஆதாரமாகக் கொண்டார். அதன்படி, பளபளப்பான உலோகத்தில் ஒளிக்கதிர் படுகையில் அவ்வொளிக்கதிரின் துகள்கள் உலோகத்தில் உள்ள இலத்திரன்களுக்கு கொடுக்க, அச்சக்தியைப் பெற்ற இலத்திரன்கள் வெளிவந்து ஒளிமின் விளைவைக் காட்டுகின்றன. ஒருநிற ஒளிக்கதிரின் துகள்கள் ஒவ்வொன்றும், அவ்வொளிக் கதிர் எவ்வளவு செறிவாக இருப்பினும் ஒரே அளவினதாகவே இருக்கும். செறிவு கூடும்போது அதிக அளவிலான துகள்கள் இருக்கும். இதனால் செறிவு கூடிய ஒளிக் கதிர்கள் படுகையில் அதிக அளவிலான ஒளித்துகள்கள் உலோகத்தில் பட அதிக அளவிலான உலோகத்தின் இலத்திரன்கள் ஒரே பருமனான சக்தியைப் பெறுகின்றன. அதனால் வெளிவரும் இலத்திரன்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதே தவிர, அவ்விலத்திரன்களின் சக்தியானது ஒரே அளவிலேயே இருக்கும்.

> உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பேரண்டம் - 101

இனி மறுதலையாக, வெவ்வேறு நிற ஒளிக் கதிர்கள் கொண்டுள்ள துகள்களின் சக்தியானது வெவ்வேறானவையாக இருக்கும். அதனால், வெவ்வேறு நிற ஒளிக்கதிர்கள் உலோகத்தில் படும்போது, உலோகத்தின் இலத்திரன்களும் அந்தந்த ஒளிக் கதிரின் துகள்களின் சக்திக்கு ஒப்பான சக்தியையே பெறும். அதனால் அவ்விலத்திரன்களின் சக்தியானது வேறுபட்டுக் காணப்படுகிறது. அத்துடன், அதிர்வெண் கூடிய கதிர்களின் சக்தியானது கூடுதலாக இருப்பதனால், (பிளாங்கின் சக்திச் சமன்பாட்டின்படி) சிவப்பு நிற களிக்கதிர்களின் துகள்களைவிட ஊதா நிறக் கதிர்களின் துகள்கள் உயர்ந்த சக்தியை கொண்டிருக்கும். இதனால்தான் ஊதா நிறக் கதிர்கள் படுகையில் சக்தி கூடிய இலத்திரன்கள் உலோகத்தில் இருந்து வெளிவந்தன. இதில் இன்னொரு ஒற்றுமை என்னவெனில், வெளிவந்த இலத்திரன்களின் சக்தி வித்தியாசமும், பிளாங்கின் $E = hf$ க்குச் சரியாகவே இருந்தது. ஆக, ஒளிக் கதிர்கள் துகள்களாகச் சக்தியைக் காவிச் செல்கின்றன. அத்துகள்கள் காவும் சக்தியின் அளவு குவாண்ரா என்பது நிரூபணமாயிற்று. இந்த சக்தியைக் காவும் ஒளித்துகள் ஒவ்வொன்றினையும், போட்டோன் (photon) என அழைத்தார் அயன்ஸ்ரைன். போட்டோன் என்பது ஒரு பொதுவான பெயர். ஒவ்வொரு நிறத்திற்கும் வித்தியாசமான போட்டோன்கள் உள்ளன எனக் கூறினார். இவவித்தியாசமான போட்டோன்கள் அந்தந்த நிறங்களுக்கான சக்தியைக் காவுகின்றன. இச்சக்தியின் ஒவ்வொரு போட்டோன்களும் காவும் சக்தியின் அளவே குவாண்ரா ஆகும். இச்சக்தியின் அளவானது பிளாங்கின் அதிசயச் சமன்பாடு $E = hf$ ஆல் அளக்கப்படும், அறியப்படும்.

தொடர்ந்தும் அடுத்த தடவையில் குவாண்ரம் பிறந்த கதையைத் தொடர்வோம்..

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



# என் கவித்துவத்தை...

18ஆம் பக்கத்தொடர்ச்சி



ஒரு வியாபாரியைப் போல கலைஞனும் தனி உலகத்தை இழந்துவிட்டதாகச் சொல்லமுடியுமா?

"ஒரு வியாபாரி என்று சொல்வதைவிட இந்த வியாபார உலகம் என்று சொல்லலாமே. அது எனக்குள் இருந்த குழந்தையைக் கொன்றுவிட்டது. பட்டாம்பூச்சி பிடிக விரும்பும் சிறுவனைத் தின்றுவிட்டது எனலாம்."

தமிழ்மரபின் சாரத்தையும் நவீனத்துவத்தின் வீச்சையும் உங்கள் பாடல்களில் இணைக்கும் புள்ளி எது?

"இந்தியச் சிற்பக் கலையும் கிரேக்கச் சிற்பக் கலையும் இணைந்து காந்தாரக் கலை என்று வடிவெடுத்தது மாதிரி தமிழின் பழைய மரபும் நவீன உலகின் புதுமையும் சேர்ந்து சங்கமிக்கிற இடத்தில் நானும் இருந்துவிட்டேன் என்று நீங்கள் கருதிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. நான் தமிழிலக்கியம் பயின்ற காலத்தில் தான் புதுக்கவிதை என்கிற உலக வீச்சு எல்லா மொழிகளிலும் வீசப்பட்டது. புதுக்கவிதை-யத் தவிர்த்துவிட்டால் ஒரு இலக்கிய வடிவத்தையே அந்த மொழி இழந்துவிடும் என்பதைப் புரிந்துகொள்ளாதவர்கள் அதை எதிர்த்தார்கள். மின்சாரத்தைத் தவிர்த்துவிட்டால் இந்த உலகம் இயங்கமுடியாது என்பது மாதிரி புதுக்கவிதையும் இருந்தது. பண்டிதர்கள் இதைப் புரிந்துகொள்ளவில்லை. புதுக்கவி-தயை இவர்கள் ஏன் வெறுக்கிறனர், மரபை ஏன் வரவேற்கிறனர் என்பதைத் துப்பறிந்தேன். மரபு என்பது நம் மொழிக்குரிய கட்டுமானம். வடிவம், புதுமை என்பது உள்ளடக்கம். இந்த உள்ளடக்கத்தை ஏற்றுக்கொண்டால் மரபு என்ற கட்டு உடைந்துவிடும் என்று பலபேர் கருதினர். நான் இந்த மரபு என்கிற கட்டமைப்புக்குள் உள்ளடக்கத்தைக் கொண்டு வந்து சேர்த்தேன். அதை முதலில் கவிதைகளில் கையாண்டேன். கவிதைக்கு நான் மட்டுமே சொந்தக்காரன். எனவே, அது எளிது. ஆனால், பாடல்கள் என்பது இயக்குநர், இசையமைப்பாளர், தயாரிப்பாளர் ஆகியோரையும் உள்வாங்கிச் செய்ய வேண்டும். அதனால் இந்தப் புதுமையை அங்கே புகுத்துவது கடினம். எனவே, பலபேர் அதைச்செய்ய முயலவில்லை. நான் முயன்றேன். அதனால் அது எனக்கு இயன்றது. இதுதான் நடந்தது."

சினிமாவில் தேவைகளையும் தாண்டி என்றும் வாழும் உங்களுடைய கவித்துவமான வரிக-ளில், அந்த உயரத்திற்கேற்ப மீண்டும் காட்சிப்படுத்த வேண்டும் என்று நினைத்த வரிகள் உண்டா?

"இது சிக்கலான கேள்வி. ஏனென்றால், தொண்ணூறு விழுக்காட்டுப் பாடல்கள் நான் நினைத்த உயரத்தில் படமாக்கப்படுவதில்லை. ஆனால், பத்து விழுக்காட்டுப் பாடல்கள் நான் நினைத்ததைவிடப் பன்மடங்கு அதிக உயரத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு 'ஆயிரம் தாமரை மொட்டுகளே', 'என்ன சத்தம் இந்த நேரம்', 'உயிரே உயிரே', 'பூவுக்குள் ஒளிந்திருக்கும் கனிக்கூட்டம் அதிசயம்' ஆகிய பாடல்கள், நான் நினைத்ததைவிடச் சிறப்பாகப் படமாக்கப்பட்டிருந்தன. இப்படி உயர்ந்ததைத்தான் என்னால் சிந்திக்க முடிகிறது. தாழ்ந்ததைப்பற்றிச் சிந்திக்கத் தெரியவில்லை."

அடுத்த இதழில் முடியும்.
நன்றி: டைம்ஸ் இன்று

# கெக்கரிக்காய் சாறு

## மின்வலையில் வந்தவை - 26

கெக்கரிக்காய் மிகவும் காரத்தன்மை உள்ளது. இதன் சாறு உங்கள் தலைமுடி, தோல், நகங்கள் ஆகியவற்றிற்கு மிகவும் உகந்தது. இது கூடியளவு பொற்றாசியத்தைக் கொண்டுள்ளது. உங்கள் உயர் இரத்தமுக்கத்தைக் குறைக்கவல்லது. இது சிலிக்காவை அதிக அளவில் கொண்டுள்ளது. சிலிக்காவானது ஆரோக்கியமான தொடர்பிழையங்கள், தசைகள், தசை நார்கள், குருத்தெலும்பு, எலும்பு ஆகியவற்றுக்கு முக்கியமான பொருளாகும். மேலும் இச்சாறு மொலித்தனம், விற்றமின் A,C, மங்கனீசு, திரித்தோபான், மக்னீசியம், பச்சிலையம் ஆகியவற்றையும் கொண்டுள்ளது. உங்கள் உடல் வெப்பத்தைக் குறைப்பதற்கு கெக்கரிக்காய்ச் சாறு மிகவும் உகந்தது. இச்சாறு புற்றுநோயை எதிர்க்குஞ் சக்தியுள்ள காரத்தன்மைக் கனிப் பொருள்களைக் கொண்டிருப்பதால் புற்றுநோய் கலங்கள் வாழமாட்டா. மேலும் இச்சாறு பரு, நீர்த்தேக்கம், மூட்டழற்சி, சிறுநீரகம், சிரங்கு, சொறி, உடல்நிறை குறைவு, தலைமுடி உதிர்வு ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் சளியை அகற்றுவதற்கும் உடல் வீக்கத்தைக் குறைப்பதற்கும் இச்சாறு பயன்படுகிறது. மேலும் இது சிறு நீர்பெருக்கியாதலின், சிறு நீரகத்தை சுத்திகரிப்பதற்குச் சிறந்தது.

### கெக்கரிச்சாற்றின் பயன்கள்

கெக்கரிக்காய் பெரும்பாலும் 'சலாட்' ஆக மட்டுமே பயன்படுத்துவதால் பெரும்பாலான வர்களுக்கு அதன் பல்வேறுபட்ட பயன்கள் தெரிவதில்லை. கண்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்குக் கெக்கரிக்காய் துண்டுகளை வைத்து கொள்வது பல உடல் அழகுபடுத்தும் நிலையங்களில் நடைமுறையில் உள்ளது. இதற்குக் காரணம் அதிலுள்ள அதிகவளவான பொற்றாசியம் ஆகும். பொற்றாசியம் தோலில் ஏற்படுகின்ற கரும்புள்ளிகள், பருக்கள், ஆகியவற்றை நீக்கித் தோலை மினுமினுப்பாக வைத்திருக்கும். எனவே கெக்கரிச்சாறு அடிக்கடி குடித்தால் உடல் தோல்



**- துறையூரான் -**

ஆரோக்கியமாகவும் மினுமினுப்பாகவும் தோற்றமளிக்கும். எனினும் இது மலச்சிக்கல், புற்றுநோய், உயர் இரத்தழுத்தம் ஆகியவற்றிற்குச் சிறந்தது என்பது எம்மில் பலருக்குத் தெரியாது.

இச்சாற்றில் கூடியவளவு நீர் இருப்பதால் பல பொதுவான நோய்களுக்கு நிவாரணியாக உள்ளது. இச்சாற்றைக் குடித்து வந்தால் இரத்தவழுத்தம் குறைவடையும். மேலும் மலச்சிக்கலால் துன்பப்படுபவர்களுக்கு இச்சாறு மிகவும் பலனைத் தரும். நீரிழிவு நோய்க்கும் இச்சாறு நல்லது. மேலதிக வெல்லத்தை வெளியேற்றும். உடல் நிறையைக் குறைப்பதற்கு இச்சாறு நன்கு உதவும். பசி ஏற்படும் வேளைகளில் கெக்கரிக்காய்த் துண்டுகளைச் சாப்பிட்டுப் பசியைப் போக்கலாம். இதில் கலோரி குறைவாக இருப்பதால் உடல் நிறையைக் குறைக்கும். மேலும் உடலில் ஈரத்தன்மையைக் குறையாமல் பேணுவதற்கு இச்சாறு மிகவும் நல்லது. குறிப்பாக கடும் வெப்பவியலில் வேலை செய்பவர்கள் கெக்கரிப் பிஞ்சுகளை உண்பதை நீங்கள் ஆசிய நாடுகளில் பார்க்கலாம். சுற்றுலா செல்பவர்கள் கடற்கரைகளில் காலத்தை கழிக்கும் போது கெக்கரிச் சாற்றை உட்கொள்வது சிறந்தது.

மேலும் இது நோவைப் போக்கும் மருந்தாகவும் செயற்படுகிறது. குறிப்பாக தொண்டை நோ உள்ளவர்கள், இச்சாற்றால் வாயைக் கொப்பளிப்பதாலும், இதைக் குடிப்பதாலும் நோவை படிப்படியாகக் குறைத்துக் குணமடையலாம். தொண்டையிலுள்ள வீக்கத்தையும் இச்சாறு குறைக்கவல்லது.

அடுத்து இச்சாற்றில் சல்பரும் சிலிக்கோனும் நிறைய உள்ளன. இதனால் தலைமுடி வளர்வதை இது ஊக்குவிக்கும். மேலும் தசை நார்கள் இழை நார்கள், தசைகள் ஆகியவற்றிற்குத் தேவையானவை. சல்பர் இச்சாற்றிலுள்ளதால் வாதம், மூட்டழற்சி ஆகிய நோய்களால் துன்பப்படுபவர்களுக்கு இது சிறந்த மருந்தாகும். புற்றுநோய்க்கலங்கள் கூடியளவு காரத்தன்மை உள்ள சூழலில் உயிர்வாழ மாட்டா. இச்சாற்றில் கூடிய காரத்தன்மையுள்ளதால் இதை உட்கொள்வதால் பலவகையான புற்றுநோய் களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

எனவே கெக்கரிச் சாற்றின் பலவகையான நன்மைகளைக் கருத்தில் கொண்டு இதை நாடோறும் குடிப்பது மிகுந்த பயனைத்தரும். இது உடல் அழகுக்கு மட்டுமல்லாமல், உடல் ஆரோக்கியத்துக்கும் சிறந்தது. எனவே இதைப் பலமுறைகளில் தயாரித்துக் குடிக்கலாம். இதை மிக்சியில் நன்கு அடித்து நீர் சேர்த்துக் குடிக்கலாம். அல்லது கரட் துண்டுகளோடு சேர்த்து அடித்தும் குடிக்கலாம். இதனால் கரட் சாற்றிலுள்ள புரதச் சத்தும் உங்களுக்குக் கிடைக்கும். இச்சாற்றில் சிறிதளவு சீனி அல்லது தேனை ருசிக்காகச் சேர்த்துக் கரைத்துக் குடிக்கலாம். பலர் இச்சாற்றுடன் இஞ்சித் துண்டுகளையும் கழுவிச் சேர்த்து அரைத்துக் குடிப்பர். பொதுவாக குளிர் காலங்களில் பலருக்கும் ஏற்படும் தடிமன், இருமல், சளி ஆகியவற்றை இலகுவாகப் போக்குவதற்கு இஞ்சி, ஒரு சிறந்த பொருள் என்பது பலருக்குத் தெரியும். எனவே கெக்கரி, கரட், இஞ்சி, தேன் ஆகியவற்றை நன்கு கழுவி தோல் நீக்கிய பின் நறுக்கி, மிக்சியில் அரைத்துத் தேவையான அளவு நீருடன் கலந்து சாப்பிட்டு வந்தால் நிறையப் பலன்கள் உண்டாகும்.

இயற்கையில் காணப்படும் பழங்கள் காய்கறிகள் ஆகியவற்றை உண்டு அழகாகவும் ஆரோக்கியமாகவும் எமது முன்னோர் நீண்ட ஆண்டுகளுக்கு வாழ்ந்தனர். ஆனால் நாமோ நாகரிகம் என்ற போர்வையில், செயற்கை மருந்துகளுக்கும் மருத்துவ முறைகளுக்கும் அடிமைகளாகி வாழ் நாளைச் சுருக்கிக் கொள்கிறோம். தற்போது மேலைநாடுகளில் முன்னோரின் உணவு முறைகளைப் பின்பற்றும் விழிப்புணர்ச்சி காணப்படுவது மகிழ்ச்சியே.

# உள்ளத்தனையது உயர்வு


**'வெள்ளைத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய துயர்வு'** என்பது தமிழ் மறை. தண்ணீரின் உயர்வு தாமரையின் உயர்வாகும். உங்கள் எண்ணத்தின் உயரமே உங்களது உயரம். நீட்டலளவு உங்கள் உயரமன்று. உயர்ந்த எண்ணங்கள் உடையவர்கள் உயர்வதை கடவுளாலும் தடுக்க முடியாது. தாழ்ந்த எண்ணங்கள் உடையவர்கள் சரிந்து விழவே நேரிடும். எண்ணங்கள் தான் வாழ்வை நிர்ணயிக்கின்றன. உயரவேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் உயர்வது நிச்சயம்.

உலக வாழ்க்கை ஒரு ஓட்டப்பந்தயம். எதற்கு ஓடுகிறோம் என்று நின்று யோசித்தால் பலபேர் நம்மை பின் தள்ளிவிட்டு முன்னேறிவிடுவார்கள். ஓடுவதில் ஓய்வை ஏற்படுத்தினால் தோல்வி நிச்சயம். முயல் ஆமைக் கதை இதற்கு ஒரு நல்ல உதாரணம். குதிரைப் பந்தயத்தில் ஓடும் குதிரைகளில் ஒன்று மூக்கை முன்னுக்கு நீட்டிவிட்டால் வெற்றிவாகை சூடிவிடுகின்றது. அதே போன்று வாழ்க்கைப் போராட்டத்தில் தன்முனைப்பு, விரைவு, வேகம், சாமர்த்தியம் இவை அமைந்து விட்டால் வெற்றிமேல் வெற்றி வந்து சேரும். உள்ளத்தால் பொய்யாது ஒழுகுபவனை உமைபங்கனே உவந்து நிற்பர் என்பதும், உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவதே என்பதும் நல்ல உள்ளம், கள்ளம் கபடமற்ற உள்ளம் இறைவன் விரும்பி உறையும் இல்லம் என்பது புலப்படும். உள்ளத்தால் பொய்யாது ஒழுகுபவர் இறந்த பின்பும் சிலையாய் நிலை பெறுவர். நம்முள் இருக்கும் நல்லதும் தீயதுமே நமது வாழ்க்கையை நிர்ணயிக்கின்றது. கர்ணன், கண்ணன் இவர்களில் யார் உயர்ந்தவர்? கர்ணன் மனிதன். கண்ணன் கடவுள். கடவுள் தானே உயர்ந்தவர்! ஆனால் கர்ணனின் உயர்வையே நாம் காண்கின்றோம்.



கர்ணனிடம் கண்ணன் கையேந்திய காட்சி நம் மனக் கண்முன் விரிகின்றது.

அர்ச்சுனனது அம்புகளால் கர்ணனைக் கொல்லமுடியவில்லை. அவனது தானங்களின் புண்ணிய பலன் அவனைக் காத்தது. மரணத்தையும் தானமாக அவனிடம் யாசிப்பது என்று கண்ணன் முடிவு செய்தான். நீ செய்த புண்ணியங்கள் அனைத்தையும் எனக்கு தா என்று ஏழை அந்தணன் வடிவில் வந்து யாசகம் கேட்டான் கண்ணன். வந்திருப்பவன் மாயக்கண்ணன் என்று அறிந்தும் கடவுளே நம்மிடம் கையேந்தும் போது மறுப்பதெப்படி என்று மகிழ்வுடன் தருகின்றான் கர்ணன். நான் செய்த, செய்கிற, செய்யப் போகும் புண்ணியங்கள் யாவும் உனக்கே என்று தாரை வார்த்துக் கொடுத்தான் கர்ணன். தானம் வாங்கும் போது கடவுள் கண்ணனது கை தாழ்ந்தது. மனிதன் கர்ணனது கை உயர்ந்தது. கொடுக்கிற எண்ணம் உயர்ந்தது. பெறுகின்ற உள்ளம் தாழ்ந்தது. உயர்ந்த எண்ணம் கொண்டவர்கள் வாழ்வில் மேலும் மேலும் உயர்வதற்கு கடவுள் தன்னை தாழ்த்திக் கொள்ளவும் தயங்கமாட்டார் என்பதே இதன் தாற்பரியம். விசாலமான பார்வை, கம்பீரமான கற்பனை, பிரமாண்டமான எண்ணங்கள் நம்மை விஸ்வரூபம் எடுக்க வைக்கும். அப்போது நாற்காலிகள் சிம்மாசனமாக மாறிவிடும். ராஜயோகத்தில் திளைக்கலாம்.



நா. க. சிவராமலிங்கம்

# திரை விமர்சனம் - நண்பன்

இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பது போல் ஒரு கூட்டணி! நடிகர்கள் விஜய், ஜீவா, ஸ்ரீகாந்த், சத்யராஜ், எஸ்.ஜே.சூர்யா, இலியானா. இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ் இயக்குநர் ஷங்கர் எனப் பிரபலங்கள் பலர் இருக்கிறனர். இவர்களுடன் ஏற்கெனவே இந்தியில் வெளியாகி பெரிய வெற்றியைப் பெற்ற, அமிர்கானின் '3 இடியட்ஸ்' படத்தின் கதை. எதிர்பார்ப்புகளுக்கு சொல்லவா வேண்டும்!

இஞ்ஜினியரிங் காலேஜில் படிக்கும் மூன்று இளைஞர்களின் கதைதான் படம். காணாமல் போன தன் நண்பனை தேடி அலையும் மற்ற இரு நண்பர்கள், தங்களின் கடந்த கால கல்லூரி வாழ்க்கையை நினைத்து பார்க்க, பிளாஷ்பேக்கில் படம் ஆரம்பிக்கிறது. சத்யராஜ் முதல்வராய் இருந்து நடத்தும் டெல்லியின் முக்கியமான இஞ்ஜினியரிங் கல்லூரியில், குடும்ப பொருளாதாரத்தில் வெவ்வேறு நிலையில் இருக்கும் மூன்று இளைஞர்கள் நண்பர்களாகிறனர். விஜய், ஒரு பணக்கார வீட்டு இளைஞன். ஸ்ரீகாந்த், ஒரு நடுத்தர வர்க்கப் பின்னணியில் இருந்து வந்தவர். ஜீவா, வறுமைக் கோட்டுக்கு மிக அருகில் இருப்பவர். இவர்கள் இணைந்து எப்படி வெற்றிபெற்றார்கள் என்பதை நகைச் சுவையுடன் காட்சிப்படுத்தி இருக்கிறனர்.

ஆரம்பத்தில் ஒவ்வொரு பாத்திரத்தையும் அறிமுகப்படுத்தும் காட்சியிலேயே சுவாரசியம் தொடங்கிவிடுகிறது. ஸ்ரீகாந்த்தை அறிமுகப்படுத்தும் போது, ஒரு பழைய ஏர்கண்டிஷனரை காட்டி தங்களுடைய பொருளாதாரத்தை பற்றி மகனிடம் விளக்குகிறார் அவரது அப்பா. ஜீவாவின் வீட்டில் அக்கா கல்யாணத்துக்கு காத்திருக்கிறார். அப்பா உடல்நிலை பாதிக்கப்பட்டவர். அம்மாதான் தனி ஒருத்தியாய் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார். ஆனால், இதை வழக்கமாய் சொல்லாமல் படு நகைச்சுவையாய் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

ஏற்கெனவே இந்தியில் '3 இடியட்ஸ்' பார்த்தவர்களுக்கும் விஜய், ஜீவா, ஸ்ரீகாந்த் கூட்டணி காரணமாய் இந்தப் படம் நிச்சயம் பிடிக்கும்.

'3 இடியட்'ஸில் இருபது வயது கல்லூரி மாணவர் தோற்றம் அமீருக்குப் பொருந்தாமல் இருந்தது. ஆனால், 'நண்பன்'இல் அப்பாத்திரத்தில் விஜய்



கச்சிதமாக பொருந்திவிடுகிறார். அதனாலேயே, படம் பார்க்கும் போது இது விஜய் தானா என்று சந்தேகம். வில்லனில் அல்லக்கைகளை துரத்தி துரத்தி பந்தாடுவது, பஞ்ச வசனம் பேசுவது... என்றில்லாமல் இயல்பாக வந்து செல்கிறார், விஜய். இரண்டு கைகளையும் பாக்கெட்டில் விட்டுக்கொண்டு பார்க்கும் பார்வை, கண்களில் தெரியும் குறும்பு, நண்பர்களுக்காக ஓடி ஓடி உதவும் கருணை, வசந்த்தின் ப்ராஜெக்டை செயல்படுத்த முனையும் அவரின் ஆர்வம்... என விஜயும் கொஞ்சம் மெனக்கெட்டு இருக்கிறார். தொடர் தோல்விகளால் சரிந்திருந்த தனது மார்க்கட்டை இப்படத்தின் மூலம் கொஞ்சம் நிமிர்த்தி உள்ளார் விஜய்.

ஷர்மான் பாத்திரத்தில் ஜீவா கலக்கியிருக்கிறார்.

மாதவன் பாத்திரத்தில் ஸ்ரீகாந்த். தனியாய் இவருக்காக காட்சிகள் ஏதுமில்லாவிட்டாலும், அப்பாவிடம் தன் விருப்பத்தை சொல்லும் காட்சியில் மனதில் நிற்கிறார். அதேபோல விஜய்யுடன் சேர்ந்தால் இனி தன் வாழ்க்கை அவ்வளவுதான் என்று முடிவு செய்து, சத்யனின் அறையில் போய் செட்டிலாகிவிடும் ஜீவாவை, மீண்டும் அவர்களுடன் சேர்க்க செய்யும் காட்சியில் நெகிழ வைக்கிறார்.

கதாநாயகி இலியானா! வழக்கம்போல் இரண்டு பாட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஆடிவிட்டுப் போகிறார். மற்றபடி இவருக்கு வேறு வேலையில்லை.

பொமன் இரானியை பார்த்தவர்களுக்கு சத்யராஜின் நடிப்பு கொஞ்சம் அதிகப்படியாய் தோன்றினாலும் அசத்தலான நடிப்பு. வயதுக்கேற்ற பாத்திரத்தில் சத்யராஜ் ஜொலிக்கிறார். கொஞ்ச நேரம்தான் வந்தாலும் மனதில் தங்குகிறார் எஸ்.ஜே.சூர்யா.

ஆச்சரியம், சத்யன் பாத்திரம்தான். படத்தின் ஆணிவேரான முக்கிய பாத்திரம். தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி 'தான் ஒரு நல்ல நடிகர்' என்பதை நிருபித்திருக்கிறார் சத்யன். தமிழ் சினிமாவில் நகைச்சுவை காட்சிகளில் இனி இவருக்கு நிச்சயம் ஏறுமுகம்தான்.

பொதுவாக நடிகர்களின் நடிப்பை ஒப்பிட்டால் '3 இடியட்ஸ்'வை விட 'நண்பன்'தான் சிறப்பு. தமிழ் நடிகர்கள் நிமிர்ந்து நடக்கலாம்!

ஹாரிஸ் ஜெயராஜ் இசை. பாடல்கள் எல்லோர் மனதையும் கொள்ளை கொள்கிறது. நா.முத்துகுமாரின் 'ஆல் இஸ் வெல்', மதன் கார்க்கியின் 'அஸ்கு லஸ்கா' பாடல்கள் படம் வெளியாகும் முன்பே வெற்றி பெற்றவை. பாடல்களோடு வசனத்தையும் எழுதியிருப்பவர் மதன் கார்க்கி. பெரும்பாலும் இந்தியில் பேசிய வசனங்களின் தமிழ் பதிப்பைத்தான் எழுதியிருக்கிறார். என்றாலும் பாராட்டுக்குரியது.

ஒளிப்பதிவு. மனோஜ் பரமஹம்சா. படம் முழுக்க இளமை பொங்கும் வண்ணங்கள் பொங்கி வழிகிறது.
இயக்கம் ஷங்கர். ஓரிரு பாடல் காட்சிகளைத் தவிர, அப்படியே இந்தி '3 இடியட்ஸ்'இல் என்ன வந்ததோ அதையே பின்பற்றியிருக்கிறார். எனவே, இவருக்கும் பெரியதாய் வேலைகள் இல்லை. ஆனால், இந்தியில் மூலக்கதை ஆசிரியர் சேத்தன்பகத்தின் பெயரை காண்பித்தார்கள். நண்பனில் போடவில்லை. 'சிவாஜி'யில் அங்கவை, சங்கவை போல் இதில் பாரிவேந்தன், முனியம்மா போன்ற பெயர்களையும் கறுப்பு நிறத்தையும் கிண்டல் செய்திருக்கிறார் ஷங்கர். தமிழ் உணர்வாளர்களை சீண்டுவது அவருக்கு மிக விருப்பமான காரியம் போலும்!

படத்தில் சில காட்சிக்கள் சிரிப்பதோடு நின்றுவிடாமல் சிந்திக்கவும் வைக்கின்றன. உதாரணம்: 'உங்களுக்கு பிடித்த துறையை தேர்ந்தெடுத்து படியுங்கள். அதில் உச்சத்துக்கு செல்லுங்கள். நிச்சயம் நீங்கள் வெற்றிபெறுவீர்கள்' என்ற கருத்தை சொல்வது.

நண்பன் - நல்ல பொழுதுபோக்கு!

- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -


**MATH, SCIENCE & PHYSICS TUTORING**

Dedicated and excellent Classes for following Courses
- Math (G8-G11), Science (G9- G10), IB Maths
- Adcanced Function, Calculus and Vectors,
- Data Management, Physics (11,12)
- University Courses

Contact : Indran Master M.Sc , PhD 416 289 9359

**பெப்ரவரி 06, 2012 தை பூசத்தை முன்னிட்டு உங்கள் வீட்டிற்கு அருகாமையில் பரதநாட்டிய வகுப்புக்கள்**



NIRUTHYA KALAKSHESTHIRA DANCE ACADEMY
*Ajax (Taunton & Middlecote) *Middlefield & Finch
*Markham & Elson *Mclevin & Neilson
*14th Ave. & 9th Line *9th Line & HooverPark
* Staines & Season Dr.
ஸ்ரீமதி செல்வானந்தி சுகுமார், பரதநாட்டிய கலைமணி, பரதகலாவித்தகி
(யாழ். நுண்கலைப்பீடம், வட இலங்கை சங்கீதசபை)
416.278.5345 / 416.754.9047

**யோகா சோதிடம்**

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

**Professional Pest Control**
Elimination of Roaches & Mice
Call Kanthan :
416-895-4283 / 416-291-3997
- Cockroaches
- Rats & Mice
- Wasps & bees
- Birds
- Ants & Spiders



# தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப் பொருட்களை வழங்குவது.



# NO 01




## நா நரம்புகள் சிலிர்த்திடும் சுவை

Niru Niru
நிரு
பிராண்ட்

# நிரு பிராண்ட் தயாரிப்புக்களே


# பஷீர் : பூமியின் உரிமையாளர்

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

மலையாளத்தில் தொடர்ந்து வாசிக்கப்படும் எழுத்தாளர்களில் பஷீர் முக்கியமானவர். 1943 முதல் 1991 வரையான காலம்தான் அவர் தீவிரமாக எழுதிய காலம். கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகள். எனினும் அவரது படைப்புலகத்தின் பரப்பு இரண்டாயிரம் பக்கங்கள் மட்டுமே. ஆனால், அதே அளவுக்கு அவரைப் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது என்பது ஓர் ஆச்சரியம். அதைவிட ஆச்சரியம் தொடர்ந்து எழுத்தாளர்களையும் வாசகர்களையும் பாதிக்கும் எழுத்தாளராக இருக்கிறார் என்பது. இந்த அர்த்தத்தில் பஷீரை நான் நவீனத்துவராகக் கருதுகிறேன். அப்படியான நோக்கங்கள் அவருக்கு இருந்ததில்லை. தற்செயலாகவோ திட்டமிட்டோ படைப்பில் புதிய திசைகளைத் திறந்தவர் அவர்.

**– சுகுமாரன் –**

பஷீரின் மொழி இலக்கியத்தனமானது அல்ல. பேச்சு மொழியிலிருந்து உருவானது அது. கடைசிவரைக்கும் திருத்தமான மொழி அவருக்குக் கைவரவே இல்லை. பஷீரின் கையெழுத்துப் படியை வாசித்த அவருடைய சகோதரர், பள்ளி ஆசிரியரான அப்துல் காதர் அவரிடம் கேட்டார். 'இக்கா, இதில் ஆக்யாத (செயப்பாட்டு வினை) மில்லையே?' அதைக் கேட்ட பஷீர் சொன்ன பதில்: 'போடா உன்னுடைய லொடுக்கூஸ் ஆக்யாதம்'. இலக்கண வழு நிரம்பிய இந்த மொழியை பஷீர் தெரிந்தே பயன்படுத்தியிருந்தார். அந்த மொழியை ராவிச் செப்பனிட்டார். ஒரு கதையைப் பலமுறை செழுமைப்படுத்தியிருக்கிறார். ஓர் எழுத்தாளனின் பயிற்சி என்பதைவிடவும் புதிய ஒரு மொழியை உருவாக்க அவர் செய்த எத்தனம் என்று தோன்றுகிறது. இந்தப் புதுமொழியில்லாமல் அவர் தன்னுடைய படைப்புலகில் இயங்கியிருக்க முடியாது. பச்சை மலையாளத்தில் பேசியிருந்தால் அடித்தள வாழ்வில் உழலும் அவருடைய கதாபாத்திரங்கள் எதிர்வினை அற்றவர் களாகியிருந்திருப்பார்கள். அவருடைய படைப்புலகில் மனிதர்களுக்குச் சமமாக இடம்பெறும் ஜீவராசிகளை நாம் நேசிக்க முடியாற்போயிருக்கும். பாத்தும்மாவின் ஆடு நாவலில் வரும் ஒரு காட்சியில் பஷீரின் சகோதரி வளர்க்கும் ஆடு பஷீரின் புத்தகத்தை மேய்ந்து தின்றுவிடுகிறது. ஏட்டின் ஓரங்களில் ரத்தம் கசியும் பால்யகால சகிதான் அந்தப் புத்தகம். புத்தகம் விழுங்கிப் பசி தீராத ஆடு ரூபாய்த்தாளை விழுங்கியதும் பஷீர்



குறுக்கிடுகிறார். 'ஹே, அஜ சுந்தரி, புத்தகத்தின் பிரதி வேண்டுமானால் வேறே தருவித்துத் தருகிறேன். ஆனால், இதற்கு வேறு பிரதி கிடையாது'. பாத்தும்மாவின் ஆட்டுக்கு இந்த மொழி தெளிவாகவே புரிந்திருக்கும்.

இதைத் திருத்தமான இலக்கிய வழக்கில் சொல்லி பஷீர் பாணி நகைச்சுவையைக் கொண்டுவர முடியாது. இதிலிருக்கும் களங்கமற்ற மனநிலையைச் சாத்தியப்படுத்தவும் முடியாது. இது மொழிசார்ந்த பிரச்சினை மட்டுமல்ல. படைப்பும் படைப்புக்கு ஆதாரமான வாழ்வும் இரண்டறக் கலந்த பிரச்சினை. பஷீரின் படைப்புகள் மையங்கொள்ளும் இந்தப் பரவச மன நிலையை அவருடைய மொழிதான் உத்தரவாதம் செய்கிறது. மனநல விடுதியில் கழித்த நாள்கள் பற்றி பஷீர் எழுதிய முன்னுரை (பாத்தும்மாவின் ஆடு)யில் மருந்துக் கஷாயம் மூக்கில் இறங்குவதை ஒற்றை வார்த்தையில் விவரித்திருப்பார். அந்த வார்த்தையிருப்பது பஷீரின் பிரத்தியேக மொழியில். "இப்படியாக இருக்கும்போது என்னுடைய வலது மூக்கில் பலா இலைக் குழாயை இறக்குகிறார்கள். அப்புறம் மிளகான மிளகுகளையும் எல்லா இஞ்சியையும் துளசிச்சாற்றையும் சிவப்பு வெங்காயத்தையும் மருந்துகளையும் அரைத்துக் குழம்பாக்கி ஒரு துளி திராவகத்தை அதில் ஊற்றுகிறார்கள். உக்கிரமும் வீரியமுமான உறைப்பின் உதயம். ப்பூ என்று வலுவான ஒரு பீய்ச்சல். வலது மூக்கில் திராவகம்

தொடர்ச்சி 37ஆம் பக்கம்



# வாய்வுத் தொல்லையும், தடுக்கும் வழிகளும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## *Gas Problem*

எமது வயிற்றுக்கோளாறில் வாய்வும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இது ஒன்றைத் தொட்டு வருவதினால் உபத்திர அதிர்வு எனவும் கூற இடம் உண்டு. ஆனால் இது ஒரு நோய் அல்ல என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்படியான வாய்வு நம்மில் இருந்து தொல்லை தருவதற்கு நாங்களே பொறுப்பாகின்றோம். நாம் உணவை உண்ணும் போதும் அல்லது நீர் சம்பந்தமான திரவங்களைப்பருகும் போதும் வாய் மூலம் அதிக காற்று நமது உடலுக்குள் செல்லுகின்றது. உணவை உண்ணும் போது ஆறுதலாக உண்ண வேண்டும். அவசரநிலையில் உண்ணக்கூடாது. நன்கு பற்களால் அரைக்கப்பட்டு, சுவையை உணர்ந்து உண்ணப் பழகிக் கொள்ள வேண்டும். இதனால் உண்ணும் உணவுகள் நன்கு சீரணமாகும். மேல் மிஞ்சிய காற்று குடற்பகுதிக்கு செல்லாது தடுக்கமுடியும்.

இதேபோன்று குடிக்கும் நீர் சம்பந்தமான பானங்களையும் ஆறுதலாகப் பருகவேண்டும். நுரைபொருந்திய பானங்களை உ+ம் சோடா, பியர் போன்ற பானங்களை நன்கு திறந்து சிறிது நேரம் வைத்திருந்துவிட்டு குடிக்கும்போது வாயுவின் அளவைக் கட்டுப்படுத்த முடியும்.

மூக்கினால் சுவாசிக்கும் நிலை தடைப்பட்டு இருந்தால் வாயின் வழியால் அதிக அளவு காற்று உள் சென்று வாய்வு நிலையை ஏற்படுத்தும். எனவே மூக்கை நன்கு பரிசோதிக்க வேண்டும். பரிசோதனைக்குரிய விசேட வைத்தியர்களிடம் செல்வது மிகநன்று. வயிற்றில் அமிலத்தன்மை இருந்தாலும், புகைப்பிடிப்பு பழக்கம் உள்ளோருக்கும் வயிற்றில் வாயுத்தன்மை ஏற்பட இடம் உண்டு என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். குடல் புண், குடல் அழற்சி, கணையநோய் இருந்தாலும் ஏவறை எனக் கூறப்படும் வாய்வு நிலை காணப்படுவதுடன் வயிற்றுப்பகுதியிலும் வாய்வுத் தாக்கம் இருக்கும். மனநோயினால் பீடிக்கப்பட்டிருப்போர் அதிகம் கதைத்துக் கொண்டிருப்பதினால் காற்று வாய் மூலம் உள் சென்று வாய்வு நிலையை ஏற்படுத்தலாம்.



பாட்டுக்களைப் பாடுவோர், அதிக மேடைப் பேச்சுப்பேசுவோர், அடுத்து அடுத்து கதைப்போருக்கு வாய் மூலம் காற்று செல்வதற்கு இடம் உண்டு. இப்படியாக உள்சென்ற காற்று நிலையைப் பற்றிப் பார்ப்போம். உள்சென்ற காற்று அளவுக்கு மீறினால் வாயின் வழியால் ஏவறையாக வெளியேறுகின்றது. உள்சென்ற மிகுதியான காற்று உணவுக் குழலால் உள் சென்று ஓரளவு உறிஞ்சப்படுகின்றது. இதில் நைதரசன் காற்று உறிஞ்சல் தவிர்க்கப்பட்டு குதம் எனக் கூறப்படும் மலவாசலால் வாய்வாக வெளியேறு கின்றது. இது சிலருக்குச் சத்தத்துடனும் சத்தம் இன்றியும் அமுக்கத்துடனும் வெளியேறும் நிலையுண்டு.

மேலும் நமக்கு வாய்வை உண்டு பண்ணும் பருப்பு, கடலை போன்ற பொருட்களை நாம் சாப்பிடும் போது வாய்வுத் தன்மையை உணர முடிகின்றது. இந்த வாய்வு நிலையை வாயின் மூலம் ஏவறையாகவோ அன்றி குதம் மூலம் வாய்வு வெளியேறுவதை நாம் நன்கு அறிவோம். இத்தன்மை நிகழாதிருக்க கறிவகைகளைப் பாகம் செய்து கொள்ளும் போது உள்ளி, இஞ்சி, மிளகு போன்ற வாய்வகற்றிப் பொருட்களைச் சேர்ப்பது வழமையாகும். அத்துடன் மோதகம் போன்ற உணவுப் பொருட்களுக்கும் ஏலக்காய், மிளகுத்தூள், சீரகத்தூள் போன்றவற்றையும் பாவிப்பதும் உண்டு. இதனால் வாய்வுத் தொல்லையை தவிர்க்க முடியும்.

மேலும் நாம் உண்ணும் உணவுவகைகள் உள்சென்று நன்கு சமிபாடு அடையாமல் இருக்கும் போது பக்டீரியாக் கிருமிகளின் தாக்கத்திற்கு ஆளாகும் போதும் வாய்வுத் தன்மை ஏற்பட்டு குதத்தின் வழியால் வாய்வு வெளியேறுகின்றது. எனவே உணவுவகைகள் நமது உடலில் நன்கு சீரணமாவதற்கு நன்றாக உணவுப் பொருட்களை சுத்தம் செய்து நன்றாகவே சுவைத்துப் பாவித்து வருதல் வேண்டும். கடலை, பருப்பு, பயறு போன்றவற்றை நாம் சமயலுக்குப் பாவிக்கும் போது அதில் உள்ள புரதப் பொருட்கள் எளிதில் சமிபாடு அடையாது இதனைத் தவிர்ப்பதற்கு விதைகளை முளைக்க வைத்து சமைப்பதினால் நன்கு சமிபாடு ஏற்பட்டு வாய்வு நிலையற்று விடும்.

உ+ம் விதைகளை முளைக்க வைப்பதற்கு கடலை, பயறு போன்ற விதைப் பொருட்களை முளைக்க வைப்பதற்கு இலகுவான வழியுண்டு. அதாவது விதைகளை நீரில் நனைத்து ஈரத்துணியால் மூடிவிட்டால் விதைகளில் முளை தோன்றுவது தென்படும். மேலும் இட்டலி, தோசை போன்ற உணவுப் பதார்த்தங்கள் தயாரிக்கும் போது அவற்றின் பாகங்களைப் புளிக்க வைக்கப்படுவதை நாம் நன்கு அறிவோம். இதனால் செமிபாடு தடையின்றி இலகுவாகும். 'வாய்வுத் தொல்லையும்' எம்மைத் தொடராது பாதுகாக்க முடியும்.

எனவே புரதப் பொருட்களும் நார்ச்சத்துப் பொருட்களும் சீரணிப்பது கடினம். நன்கு அவற்றைப் பாகம் செய்து உணவுகளைக் கையாளும் போது ஒருவித சிக்கல் நிலையும் ஏற்படாது. ஆனால் சிலருக்கு அவர்களின் உடல் நிலைக்கும், காலநேரத்திற்கும் ஏற்ப சிலவகை உணவுப் பொருட்கள் ஒத்துவராத தன்மையுண்டு. அப்படிப்பட்டோர் தவிர்த்துக் கொள்வது மிகநன்று. எல்லாருக்கும் எல்லாவகை உணவும் ஒத்துவராது என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

எனவே அவர்கள் விரும்பியபடி தகுந்த உணவை நன்கு பாகம் செய்து பாவித்துக் கொள்ளவும் தாவர உணவுகள் நமது உடலுக்கு எதுவித தீங்கையும் விளைவிக்காது என்பதை நன்கு உணர்ந்து கொள்ளுங்கள். எதற்கும் எமது மனம் இடம் கொடுக்க வேண்டும். நாம் உட்கொண்ட உணவு சமிபாடு அடையாமல் புளிப்புத் தன்மை ஏற்பட்டாலும் வாய்வு வெளியேறும். வாயினால் வருகின்ற ஏவறை என்கின்ற வாயு வரும் போது ஒருவகைப் புளிப்புடன் மாற்றமான மணமும் தென்படும். இந்நிலை அமிலச் செயற்கையினால் வரலாம் என அறிய முடிகின்றது.

தொடரும்...


வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)



# தனியாக படகு மூலம் உலகை சுற்றி வந்து 16 வயது பெண் சாதனை!

நெதர்லாந்தைச் சேர்ந்த லாரா டெக்கர் என்ற 16 வயது பெண் உலகம் முழுவதையும் படகு மூலமாக சுற்றி வந்து சாதனை படைத்துள்ளார். இவர் தனது 14வது வயதில் ஒரு படகு மூலம் தனியாக உலகை சுற்றி வர விரும்பினார். அதற்கு நெதர்லாந்து அரசு சம்மதிக்கவில்லை. எனவே அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக நெதர்லாந்து குழந்தைகள் நல மையத்தின் உதவியுடன் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கின் தீர்ப்பு இவருக்கு சாதகமாக அமையவே கடந்த 2010ம் ஆண்டு ஓகஸ்டு 21-ந் திகதி கிப்ரால்டார் என்ற இடத்தில் இருந்து 38 அடி நீள குப்பி என்ற எந்திர படகின் மூலம் தனது பயணத்தை தொடங்கினார்.

8 மாதங்கள் கழித்து கரீபியன் கடலில் உள்ள செயின்ட் மார்டினை வந்தடைந்த டெக்கரை அவரது பெற்றோர் உட்பட சுமார் 500 பேர் உற்சாகத்துடன் வரவேற்றனர். தற்போது உலகை தனியாக சுற்றி முடித்த இளம் வயது வீராங்கனை என்ற பட்டத்தையும் இவர் பெற்றுள்ளார்.



# உள்ளும் புறமும் உருமாற்றம்

இறைவன் என்னை உள்ளும் புறமும் சிறப்புற உருமாற்றி அமைப்பதை இப்போ நன்கு உணர்கின்றபடியால் நான் விசாரமின்றி விச்ராந்தியாக வாழ்கிறேன்.

இதோ உனக்கு விசுவாசந்தரும் பிரார்த்தனை ஒன்று. எனது சுயத்தை உருவகிக்கும் ஒவ்வொரு கலம், ஒவ்வொரு திசு, ஒவ்வொரு அங்கத்திற்குள்ளும் ஊடுருவி புத்துயிரூட்டுமாறு ஆண்டவனின் தெய்வீக சக்தியை இப்போ அழைக்கிறேன். எனது ஒவ்வொரு சக்தி, ஒவ்வொரு நம்பிக்கை, ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு புரிந்துணர்வு, ஒவ்வொரு தீர்மானம், ஒவ்வொரு எதிர்பார்ப்பு, ஒவ்வொரு கணிப்பு, ஒவ்வொரு உந்துதல், ஒவ்வொரு பழக்கவழக்கம் யாவற்றையும் அன்புடன் இறைவனின் சித்தத்திற்கு ஒத்தமாதிரி உருமாற்றம் செய்து இறைதிட்டத்தின்படி வாழ்ந்திட எனது அடுத்த அடியை நான் எடுத்து வைக்க உதவுமாறு பிரர்த்தித்து யாசிக்கிறேன்.

இப்போ எனது ஒவ்வொரு கலம், ஒவ்வொரு திசு ஒவ்வொரு அங்கத்திற்குள்ளும் ஊடுருவிச் செயற்படும்படி இறைசக்தியின் தெய்வீக ஆன்மாவை அழைக்கிறேன். எனது ஒவ்வொரு: சக்தி, நம்பிக்கை, எண்ணம், புரிந்துணர்வு, தீர்மானம், எதிர்பார்ப்பு,



கணிப்பு, வேட்கை, பழக்க வழக்கம் யாவற்றையும் இறைவனின் பூரண அமைதியுடன் சரிநிலைப்படுத்தி இறைநியதியுடன் இணைந்து ஜீவித்திட எனது அடுத்த அடி எடுத்து வைக்க உதவுமாறு அவரை வணங்குகிறேன். இப்போ எனது ஒவ்வொரு: கலம், திசு, அங்கத்தையும் ஊடுருவிச் சக்தியூட்டும்படி ஆண்டவனின் ஆன்மாவை அழைக்கிறேன். எனது ஒவ்வொரு: சக்தி, நம்பிக்கை, எண்ணம், புரிந்துணர்வு, தீர்மானம், எதிர்பார்ப்பு, கணிப்பு, உந்துதல், பழக்க வழக்கம் யாவற்றையும் இறைவனுடைய பூரண அன்புடன் சரிநிலைப்படுத்தி இறைவனின் திட்டத்துடன் என் வாழ்வை இணைத்து ஜீவித்திட நான் வழிநடக்க உதவுமாறு மனமுருகிக் கும்பிடுகிறேன். இதுவரை எனக்குக் கிடைத்த இனி வரப்போகும் இறை ஆசீர்வாதங்களுக்கு நான் நன்றியுடன் தலை வணங்குகிறேன். நான் கேட்பதையெல்லாம் தந்தருளும் கருணைக்கடல் அல்லவா அந்த அருளாளர்.

வாழ்வில் உனது அடுத்த அடியை எவ்வாறு முன்னெடுப்பது என்பது இன்றுவரை உனக்குப் புரியாமல் இருந்திருக்கலாம். இன்று விசுவாசத்துடன் மனமுருகிப் பிரார்த்தனை செய்வதில் உனது பூரண நம்பிக்கையையும் வை.

**எனது ஆளுமை வளர்ச்சியிலும் ஆன்மீக வளர்ச்சியிலும் அடுத்த அடி எடுத்து வைத்திட என்னை வழிநடத்தி அருளுமாறு இன்று ஆண்டவனைச் சரணடைகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 199

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

# பஷீர் :...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

முழுவதும் அணுகுண்டு வெடிப்பதுபோல அப்படியென்றால். . . ப்ளுங்கோஸ் டும்." பஷீர் கண்டுபிடித்த இந்தப் பொருளற்ற வார்த்தை எவ்வளவு பொருள் பொதிந்தது.

பொருள் நிரம்பியது என்று கருதப்பட்ட இலட்சியங்களும் நோக்கங்களும் பொருளற்றவையாக மாறும் மானுடச் சூழலைப் பற்றியும் பஷீர் கவனம் கொண்டிருந்திருக்கிறார். மதில்கள் நாவலில் வரும் ஒரு வாசகம் அதற்கு உதாரணம். சிறைத் தண்டனை அனுபவிக்கும் பஷீருக்கும் அதே சிறையின் பெண்கள் பகுதியில் கைதியாக இருக்கும் நாராயணிக்கும் ஏற்படும் காணாமலே காதல்தான் கதை. தனிமைச் சிறையில் தவிக்கும் பஷீருக்கு நாராயணியின் குரல் நெருக்கம் சிறை வாழ்க்கையில் ஆறுதல் தருகிறது. அவளை நேரில் சந்திக்க வாய்ப்புக் கிடைக்கவிருக்கும் தருணத்தில் விடுதலை செய்யப்படுகிறார்.

'யூ கேன் கோ மிஸ்டர் பஷீர், யூ ஆர் ∴ப்ரீ,'

நான் நடுங்கிப் போனேன். என்னுடைய கண்கள் காணாமற் போயின. காதுகள் கேட்காமல் போயின. எல்லாம் சேர்ந்து ஓர் இரைப்பு. எனக்கு எதுவும் புரியவில்லை. நான் கேட்டேன்:

"ஒய் 'திட் ஐ பி ∴ப்ரீ. ஹூ வாண்ட்ஸ் ∴ப்ரீடம்?"

தம்பி ஜெயிலர் சிரித்தார். பிறகு சொன்னார். "உங்களை விடுதலை செய்யும்படி உத்தரவு வந்திருக்கிறது. இந்த நிமிடம் முதல் நீங்கள் சுதந்திரமானவர். சுதந்திரமான உலகத்துக்கு நீங்கள் போகலாம்" சுதந்திரமானவன். . . சுதந்திர உலகம். . . எது சுதந்திர உலகம்.. பெரும் சிறைக்கல்லவா போக வேண்டும்.

யாருக்கு வேண்டும் இந்தச் சுதந்திரம்?

பஷீர் என்ற சுதந்திரமான எழுத்தாளனைத் தவிர யார் இந்தக் கேள்வியை எழுப்ப முடியும்? - தொடரும்

# குளிர்

தாய் மண்ணில் விழுந்தெழும்பி
துன்பங்களில் தோய்ந்து
தவித்து ஏங்கி நின்றபோது

கை தந்து வரவேற்ற நற்பூமி

தேடு
நீ வேலை தேடு என்று
சமூகநலப் பணம் தந்து
படிக்கச்சொன்னது தன்
மொழியை

காலுக்குக் குளிர் காக்கும்
சப்பாத்து
உடல் மூடும் மேல் அங்கி
கழுத்தைச் சுற்றத் துவாய்
வாங்கவெனக்
குளிர்கால மானியக்
காசோலையும்
வந்து விழுந்தது
தபாற்பெட்டிக்குள்

அடுத்த பனிக்காலம்
நெருங்கும்போது
குடும்ப மருத்துவர் கூறிய
அறிவுரை:

பத்து இறாத்தல் நிறை
கூடிவிட்டது
வயிற்றில் கொழுப்புப் படியும்
கவனம்



நாளாந்தம் நல்ல நடை போடு
இல்லையேல்
உன் உடல் எடை போடும்
எச்சரிக்கை.



முத்துராஜா

**வெளிவந்துவிட்டது!**

பலரால் ஆய்வு நிகழ்த்தப் பெற்ற
Dr. கோபால் அவர்களின்
**எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?**
**மருத்துவ கைநூல்.**

கிடைக்கும் இடம்: **விளம்பரம் பத்திரிகை அலுவலகம்**, *5215 Finch Ave. E, #201*

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

நகைச்சுவைத் தொடர் 239

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



பெப்ரவரியென்பது மிகக்குறைந்த நாட்களைக் கொண்ட மாதம் ரோமர்களின் கடவுளின் பெப்ரஸ் என்பதிலிருந்து வந்தது இம்மாதப்பெயர். பெப்ரா என்பது சுத்தப்படுத்துதல் என்னும் பொருளும் உண்டு. பெப்ரவரி 15, ரோமர்கள் காலத்தில் சுத்தப்படுத்தும் நாளாக கொண்டாடியுள்ளனர்.



உலகர் வீட்டைவிட்டு வெளியேறும்போது ராசம்மா யன்னலால் வெளியில் நோட்டம் விடுவா. (அன்று இளமையில் யன்னலால் பார்த்தது வேறு). சகுனம் சரியாக இருக்கிறதா என்று. 3வது வீட்டுக்காரரின் கறுத்தப்பூனை குறுக்கே போகிறதா? அல்லது எதிர்வீட்டுக்காரரின், உலகரைவிட சற்று கட்டையான கறுப்பு நாயை அந்தவீட்டுக்காரி நாய்க்கு கொலஸ்ரரோல் பிடிக்காமல் இருக்க நடக்கக்கூட்டிக்கொண்டு போகிறாளோ?

சகுனத்தில் உலகரும் ராசம்மாவும் வலு கவனம். இதனை செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் பல தடவை ரசித்திருக்கின்றனர்.



லொட்டோ எடுக்கப் புறப்படும் போது ரேடியோவில் போகாதே போகாதே என்கணவா பாட்டுக்கேட்டதால ராசம்மா உலகரை ஒரு கிழமையாக வீட்டுக்கு வெளியிலேயே விடவில்லை.




ரெலிவிசன் செய்தியில் எல்லோரும் ரசித்துக்கொண்டிருந்தனர். வானில் பறந்துகொண்டிருந்த விமானத்தில் பூனை குறுக்குமறுக்காக ஓடி பைலட்டின் இருக்கைவரை சென்று பெரிய அமளி துமளி செய்துள்ளது.

பாம்பென்றால் படையும் நடுங்குமென்பார்கள். பூனையென்றால் பைலட் நடுங்கமாட்டாரா?

நல்லகாலம் உலகண்ணை உந்த பிளேனிலை போகேல்லை என்று சொல்லிச்சிரிச்சா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

அன்னம்மாக்கா ராத்திரி யாழ்ப்பாண கோல். எங்கடை பழைய வீட்டிலை வாடகைக்கு இருந்தவர்களைக் கட்டிப்போட்டு களவெடுத்துப் போட்டாங்களாம். கடத்தலும் கொலைகளும் சர்வ சாதாரணமாகிவிட்டது பாடசாலை மாணவிகள் இளைஞர்கள் தினம் தினம் காணாமல் போவதும் வெட்டவெளியில் எலும்புக்கூடாக மீட்கப்படுவதும் அதன்பின் அது ஆணா பெண்ணா என ஆராய்ச்சி பண்ணுவதும் விளக்கமாகிவிட்டது.

உயிரோடிருக்கும்போது இரும்புக்கூடு. கடத்திக் கொலை செய்தபின் எலும்புக்கூடு.

சட்டம் ஏமாந்து போனாலும் போகும். தர்மம் என்றைக்கும் பழி வாங்கித்தீரும்.




காதலே போ போ சாதலே வா... வசந்தமாளிகையில் நடிகர் திலகம் சிவாஜி உயிர்கொடுத்து நடித்த மனதைக்கவர்ந்த வரிகள்.



இது காதலர்களின் மாதம். ஆம். காதலர் தினம். எத்தனைகாதல் சடுகுடுக்கள். காதலுக்கு ஞாபகம் தாஜ்மகால்.

காதல் தண்டனைக்கு அடையாளம் அம்பிகாபதி அமராவதி. ரோமியோ யூலியற். விசம் குடிக்க வைத்தது.

8 வது சாள்ஸ் மன்னரை காதலால் முடியையே துறக்க வைத்தது.

காதல் சிக்கலால் இளவரசி டயானாவுக்கு நடந்தது உலகே அறியும். வெள்ளை மாளிகையையே மங்கவைத்த கிளிங்ரன் மொனிக்கா லிவிங்ஸ்சி காதல் காரசாரம்.

முருகன் வள்ளிமேல் கொண்ட காதல் தெய்வானையை முருகனுக்கு கதவடைக்கச் செய்தது.

காதலுக்கு கண்ணில்லை.
ஆனால் காதலி வீட்டு கடிநாய்க்கு கண்ணிருக்கு.
காதல் உலக ஆட்சிகளையே கவிழ வைத்த சரித்திரம் பல. இந்திரன் கெட்டதும் பெண்ணாலே, சந்திரன் கெட்டதும் பெண்ணாலே.
கோவலன் மாதவியிடம் சென்றது காதல்.

ராவணன் சீதை மேல்கொண்ட காதல் லங்காபுரி எரிந்தது. ராம ராவண யுத்தத்தை உருவாக்கியது.

இலங்கையில் நடக்கும் யுத்தத்திற்கு எப்பொழுதும் இந்தியாவின் பின்னணி இருக்கும்.

கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. அதிகார வெறி பிடித்தவர்களுக்கு சென்ற இடமெல்லாம் செருப்பு.

அப்துல் கலாமின் இலங்கை வருகை பலருக்கு வயிற்றில் புளியை கரைக்கிறது. ராமேஸ்வரத்திலுள்ள ஆலயத்திற்கும் யாழ்ப்பாணத்திலுள்ள சில ஆலயங்களுக்குமுள்ள தொடர்புபற்றிய கதைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

விஞ்ஞானி அப்துல் கலாமின் வருகை பல பௌதிக இரசாயன மாற்றங்களை வரவைக்குமோ? என பல ஜடங்கள் பயப்பிடுகின்றன.



ராமேஸ்வரத்திற்குச் சென்ற அரச மமதையினர்க்கு அடியும் குத்தும் அபிசேகமும். யாழ். வந்த அப்துல்கலாமுக்கு மனமுவந்து முகமலர்ந்த வரவேற்பு.
தெரியாமலா சொன்னார்கள் கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பென்று.

கடமை கண்ணியம் கட்டுப்பாடு



03. அறிஞர் அண்ணா நினைவு தினம் 1969
04. இலங்கைக்கு சுதந்திர தினம் (கொடுத்ததாக ஆங்கிலேயர் நம்பும் தினம்) 1948
04. இத்தாலிய தமிழறிஞர் வீரமாமுனிவர் நினைவு தினம்
09. தமிழ் காங்கிரஸ் கட்சித்தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் நினைவுநாள்
11. தோமஸ் ஆல்வா எடிசன்
11. நடிகமணி வி.வி வைரமுத்து 3000 நாடகங்களுக்குமேல் நடித்தவர். அரிச்சந்திரா நாடகம் என்றால் நடிகமணி தான்
11. அடங்காத்தமிழன் சி. சுந்தரலிங்கம் நினைவுநாள்
12. அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் 16 வது அமெரிக்க அதிபர் பிறந்ததினம் 1809





# பூலோக சொர்க்கம்...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்த மூன்று இடங்களைப் பார்ப்பதற்குள்ளே ஒருநாள் ஆகிவிடும். எனவே, மற்ற இடங்களை அடுத்த இதில் பார்ப்போம்!



உணவு, தங்குமிடம், போக்குவரத்து:

கேரளா, கர்நாடகம், தமிழகம் ஆகிய மூன்று மாநிலங்களும் சந்திக்கும் இடத்தில் உள்ளது வயநாடு. பெங்களூருவில் இருந்து 290 கி.மீ., ஊட்டியில் இருந்து 115 கி.மீ. தொலைவு. வயநாட்டுக்கு அருகிலேயே உள்ள கோழிக்கோட்டில் ரயில் நிலையமும் விமான நிலையமும் உள்ளது. கோழிக்கோட்டில் இருந்து வயநாட்டுக்கு நல்ல சாலை வசதிகள் உள்ளன. தமிழ்நாட்டோடு ஒப்பிடும்போது தினசரி கார் வாடகை மிகவும் குறைவு. ஆட்டோ படு மலிவு. கோழிக்கோட்டிலும் சரி, வயநாட்டிலும் சரி ஆட்டோவில் தவறாமல் மீட்டர் போடுகிறார்கள். அந்த நேர்மையான மீட்டர்கள் சென்னையில் 30, 40 ரூபாய் கேட்கும் தூரத்திற்கு 10, 12 ரூபாய்தான் காட்டுகிறது. 15 ரூபாய் கொடுத்தால் மீதிக் காசைக் கொடுக்கிறார்கள். அதனால் கூலி வேலை செய்பவர்கள் கூட நான்கு பேராகச் சேர்ந்து, சட்டென்று ஆட்டோ பிடித்துச் சென்றுவிடுகிறார்கள். பெங்களூருவில் இருந்து நேரடியாக கர்நாடக பேருந்துகள் நிறைய இருக்கின்றன.

வயநாட்டில் இடியாப்பமும் ஆப்பமும் பிரபலம். கல்பெற்றா, மானந்தவாடி, சுல்தான் பத்தேரி, வைத்திரி ஆகிய இடங்களில் நல்ல வசதியுடன் கூடிய தங்கும் விடுதிகள் உள்ளன.

# கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளம் ஊடகங்களை ஒருங்கிணைத்து ஒன்றுகூடல்!

கனேடிய தமிழ் வர்த்தகர்களின் நலனுக்காகவும், அவர்களது வர்த்தக மேம்பாட்டுக்காகவும் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக சேவை ஆற்றி வரும் கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் (Canadian Tamils' Chamber of Commerce), வர்த்தகத் துறையில் ஈடுபாடுடையவர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் அவர்கள் தங்கள் தொடர்பு தளத்தினை விரிவுபடுத்தவும், இருக்கும் தொடர்புகளை மேம்படுத்தவும் உதவும் வகையில் தமிழ் வர்த்தகர்களுக்கு ஒரு பாலம் ஏற்படுத்தி வருகின்றது.

இங்குள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் அனைவரையும் முதன் முறையாக ஒன்றாக அழைத்து கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் செயற்பாடுகள் பற்றிய விளக்கமளித்தல் மற்றும் ஊடகங்களுக்கு நன்றி தெரிவிப்பு ஒன்று கூடல் ஸ்காபுறோ 'காரைக்குடி' உணவகத்தில் னவரி 17, 2012 நடைபெற்றது.

முதற்கண் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், இலத்திரனியல், இணையத்தள ஊடகங்கள் என பல்வேறு ஊடகத்தினரையும் வரவேற்று உரையாற்றிய சம்மேளனத் தலைவர் திரு. மைக் அகிலன் 'எமது சம்மேளனத்தின் வளர்ச்சிக்கும், சம்மேளனத்துடனான வர்த்தகப் பிரமுகர்களின் தொடர்புகளுக்கும் அன்று முதல் இன்றுவரை அரும்பணி ஆற்றி வருபவர்கள் ஊடகத்துறையினர் என்று குறிப்பிட்டார். முன்னாள் தலைவர் திரு.கென் கிருபா உரையாற்றிய பொழுது 'இங்கு நாலாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் வர்த்தகர்கள் உள்ள போதிலும் நானூறு பேர் மாத்திரமே எமது சம்மேளனத்தில் அங்கத்தவர்களாக இணைந்துள்ளனர். எமது சம்மேளனத்தில் அங்கத்தவராக இணைந்து கொள்வதனால் என்ன பலன் கிடைக்கும் என்ற கேள்வி பலர் மத்தியில் எழுந்துள்ளது. நாம் ஒரு வலைப் பின்னல் (Net work) போன்று செயலாற்றி வருகின்றோம். எமது சம்மேளனத்தில் அங்கத்தவராவதன் மூலம் பிற நிறுவனங்களில் இருந்து பல சலுகைகளைப் பெறலாம் என்றார்.



செயலாளர் திரு. சாந்த பஞ்சலிங்கம் உரையாற்றிய போது, அங்கத்தவராகச் சேர்ந்து கொண்ட பின்னர் எனது வர்த்தக நடவடிக்கைகளில் பெரும் மாற்றங்களும், முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன. வெளியே நின்று வேடிக்கை பார்ப்பதை விட உள்ளே வந்து பார்த்தால் தான் என்ன நன்மைகள் ஏற்படுகின்றன என்பதனைப் புரிந்து கொள்ள முடியும் என்றார்.

'ஆண்டு தோறும் நாம் வர்த்தக கொண்டாட்ட நிகழ்ச்சியை நடத்தி வருகின்றோம். இந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் 28 ஆம் திகதி வாடன் அவெனியூவுக்கும், ஹைவே 7 க்கும் அண்மையில் அமைந்துள்ள Hilton Hotel இல் நடைபெறவிருக்கிறது. இதில் சகல வர்த்தகத் துறையினரும் கலந்து கொள்வதன் மூலம் பயனடைய முடியும்' என பொருளாளர் திருமதி கல்யாணி நாதன் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர்களும் தமது எண்ணக் கருத்துக்களை தெரிவித்திருந்தனர். சமூகமளித்திருந்த ஊடகவியலாளர்கள் குழாமாக புகைப்படம் எடுத்துக்கொண்டனர். ஒவ்வொரு ஆண்டும் இவ்வாறான ஒன்று கூடலை CTCC ஒழுங்கு செய்ய வேண்டுமென ஊடகவியலாளர்கள் கேட்டுக் கொண்டதுடன் இவ்வாறான ஒருங்கிணைந்த ஒன்றுகூடலை செய்த CTCC இற்கும் நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர். மேலும் சம்மேளனத்தின் வளர்ச்சிக்கு தம்மாலியன்ற ஒத்துழைப்பினை வழங்கத் தயாராக இருப்பதாக இதில் கலந்து கொண்ட அனைத்து ஊடகவியலாளர்களும் தெரிவித்தனர்.




# நூல் வெளியீடு

சென்னையில் ஏறத்தாழ 442 சாவடிகளைக் கொண்ட புத்தக கண்காட்சி இவ்வருடம் தை 05 ஆம் தேதி தொடக்கம் தை 17 ஆம் தேதி வரையில் நடைபெற்றது.





இந்நிகழ்வில் பேசிய முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் 'புத்தகத் திருவிழா' என்று இதை வர்ணித்தார். அந்த புத்தக திருவிழாவில் எழுத்தாளர் முத்துராஜாவின் 'ஒரு நெய்தல் நிலத்தின் கதை' என்னும் நாவலும் கோலாகலமாக வெளியிடப்பட்டது. பழம்பெரும் நிறுவனமான நியூ சென்சுரி புக் ஹவுஸ் முத்துராஜாவின் நாவலை அச்சிட்டு வெளியிட்டு விநியோகம் செய்கிறது.

மூத்த எழுத்தாளர் திரு. பழ நெடுமாறன் அவர்கள் புத்தகத்தை வெளியிட, கனடாவில் சமூக மானிடவியல் பேராசிரியரும் உலக கவிஞருமாகிய சேரன் அவர்கள் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்.

அதைத் தொடர்ந்து பல எழுத்தாளர்கள் கவிஞர்கள் அறிஞர்கள் ஆர்வலர்கள் நூலைப் பெற்றுக்கொண்டனர்.

ஐயா பழ நெடுமாறன் அவர்கள் எழுத்தாளர் முத்துராஜாவுக்கு பொன்னாடை போர்த்தி ஆசீர்வதித்தார். புத்தக வெளியீட்டு நிறுவனத்தினர் திரு. பழ நெடுமாறன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம் வழங்கியதுடன் நூல் வெளியீடு இனிதே நிறைவேறியது.




நியூ சென்சுரி புக் ஹவுஸ் எனும் கூட்டு நிறுவனம் தமிழ்நாட்டில் 20 கிளைகளை கொண்டுள்ளது. பிற மாநிலங்களுக்கும், பிற நாடுகளுக்கும் புத்தகங்களை ஏற்றுமதி செய்கின்றது. பின்வரும் தொடர்பு வழிகள் மூலம் வணிகர்களும் வாசகர்களும் எழுத்தாளர் முத்துராஜாவின் "ஒரு நெய்தல் நிலத்தின் கதை" எனும் நாவலை பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்கள் - மணவாளன் : 91-94440 19708 / 44- 26251968 ஈ-மெயில் ncbhbook@yahoo.co.in

